MIM. SAAKIR
077-1607490

அழகியல் பிரதி

# இஸ்லாத்தில் இசை

இசை குறித்த இஸ்லாமிய நிலைப்பாட்டின் தெளிவான பதிவு

கலாநிதி முஹம்மத் இமாரா

தமிழில்: அஷ்ஷெய்க் B. தாரிக் அலி (நளீமி)

நிகழ்

இஸ்லாத்தில் இசை ஆசிரியர்: • கலாநிதி முஹம்மத் இமாரா • தமிழாக்கம்: அஷ்ஷெய்க் B. தாரிக் அலி (நளீமி) • முதல் பதிப்பு: செப்டம்பர் 2011 • தட்டச்சு தளக்கோளம் முஹம்மத் ஸபீர் • அட்டைப்படம்: i dreams அச்சாக்கம் டலண்ட் பிரின்ட்டெக் +94 114 367575

வெளியீடு: நிகழ் பதிப்பகம், 114/10, ஆராமய வீதி, கொழும்பு 09. தொ.பே. +94 715 171737, +94 716 442738

ISBN: 978-955-0182-01-5

விலை: 180.00



கலாநிதி முஹம்மத் இமாரா அறபுலகின் முக்கிய இஸ்லாமிய சிந்தனையாளர், எழுத்தாளர், திறனாய்வாளர், அல் முஜ்தமஃ இஸ்லாமிய சஞ்சிகையின் பத்தி எழுத்தாளர். 1931-12-08ம் திகதி எகிப்தில் பிறந்தார். அல் அஸ்ஹர் கலாசாலையின் ஆய்வுகள் ஒன்றியத்தின் உறுப்பினர். இஸ்லாத்தின் நடுநிலை சிந்தனையைக் கடைபிடிக்கும் இவர் இஸ்லாத்தின் பல்துறை சார்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.

அவரது புத்தகங்கள் துருக்கி, உர்து, ஆங்கிலம், ரஷ்யா, ஜேர்மன் போன்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளதோடு பல விருதுகளையும் பெற்றிருக்கின்றன.

கலாநிதி இமாரா அவர்கள் எகிப்தின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான உயர் அமைப்பு, நாகரிக கற்கைகளுக்கான மையம், வேர்ஜினியாவின் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனம் (IIIT) போன்றவற்றிலும் அங்கத்துவம் வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய உம்மத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பதிலே அவரது சிந்தனைகளும் எழுத்துக்களும் கூடிய கவனம் செலுத்துகின்றன. அவரது எழுத்துக்கள் தர்க்க ரீதியாக, ஆழமான உள்ளடக்கத்தோடு விமர்சனக் கண்ணோட்டத்தில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்

## பதிப்புரைக்காக சில வார்த்தைகள்...

முதல் புத்தகத்திற்கும் இரண்டாவது புத்தகத்திற்கும் இடையிலான கால இடைவெளி சற்று அதிகம் என்றாலும் கூட 'நிகழ்' தனது இரண்டாவது நூல் வெளிவருவதை இட்டு மிக்க மகிழ்ச்சி கொள்கிறது. வாழ்வின் அன்றாடப் போராட்டங்களுடனும் ஏனைய பணிகளுடனும் ஒப்பிடும் போது கால இடைவெளி என்பது பெருத்த கவலை எதனையும் தரவில்லை. ஒரு நத்தையின் நகர்வைப் பார்த்து அது வீடு போய்ச் சேர மாட்டாது எனச் சொல்ல முடியாது. இன்ஷா அல்லாஹ் நிகழ் தனது பதிப்பகக் கனவுகளை நிச்சயம் சாதிக்கும்.

எமது முதல் புத்தகமான அஷ்ஷெய்க் அப்துல் ஹமீத் பிலாலியின் 'பாதையின் இடையே' வெளிவந்த போது அதன் பதிப்பு குறித்து வாசகர்கள் பெரிதும் சிலாகித்தனர்,பாராட்டினர்.இந்தியாவின் அடையாளம் பதிப்பக உரிமையாளர் ஸாதிக் நிறையவே உற்சாகப்படுத்தினார். அனைவருக்கும் இந்த இடத்தில் நிறைவான நன்றிகள்.

கலாநிதி முஹம்மத் இமாரா அவர்கள் இசை குறித்து எழுதிய நூலை 'இஸ்லாத்தில் இசை' என்ற தலைப்பில் தமிழில் பெயர்த்து வெளியிடுவதில் சந்தோஷமடைகிறோம்.

இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கைத் திட்டம். மனித வாழ்வின் எந்தப் பகுதியையும் அது கவணிக்கத் தவறவில்லை, புறக்கணிக்கவில்லை. ஆன்மீகம், பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதாரம், பாலியல், அழகியல் என எல்லாப் பகுதிகளையும் அது தழுவி நிற்கின்றது. மனித வாழ்வு

சமனிலை குழையக் கூடாது என்பதற்காக மனிதனைப் படைத்த இறைவன் வாழ்க்கைச் சமனிலையை ஏற்படுத்துவதற்காக அமைத்திருக்கும் மிகப் பெரும் கருணையது.

அந்த வகையில் அழகியல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாடு மிகத் தெளிவாக வரையப்பட்டுள்ளது. இருப்பினும் அதனைப் புரிந்து கொள்வதிலும் உள்வாங்கிச் சீரணிப்பதிலும் நிறையப் போதாமைகளையே காண்கிறோம். இதனால் இஸ்லாம் உதடுகளைப் புன்னகைக்கவும் தடுக்கின்றன என்ற எதிர்மறையான பதிவே உருவாகியிருக்கின்றது. இதனால் இஸ்லாமும் அழகியலும் குறித்து முஸ்லிம் அல்லாதவர்களை விட முஸ்லிம்களே மிகத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இதயம் உள்ள எல்லா மனிதனும் அழகுணர்வை இயல்பாகவே பெற்றிருக்கிறான். அதனால்தான் அல்லாஹ் எல்லாவற்றையும் அழகாகப் படைத்திருக்கின்றான். மனிதனுக்கு அழகாக இருக்கச் சொல்கிறான், அழகாக ஓதச் சொல்கிறான், அழகிய அத்தாட்சிகள் குறித்துச் சிந்திக்கச் சொல்கிறான். ஏன் அல்லாஹ்வே தன்னை அழகியவன் என அறிவிக்கின்றான்.

இருந்தும் இந்தத் தனித்துவமான அழகியலை நாம் இதுவரை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளவும் இல்லை. அதனைப் பிறருக்குச் சொல்லவும் இல்லை. இதனால் இஸ்லாத்தை புன்னகைக்க மறுக்கும் ஒன்றாகவே அடையாளப்படுத்தியிருக்கிறோம்.

அழகியல் கலைகளுள் ஒன்றான இசை குறித்து கூடும், கூடாது என்ற கராரான இரண்டு நிலைப்பாடுகளே எம்மிடம் இருக்கின்றன. ஒருசாரார் இசையை முற்றாக ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை இன்னொரு சாரார் முற்றாகவே மறுக்கின்றனர். இஸ்லாம் இசையை முற்றாகவே ஏற்றுக் கொள்ளவும் இல்லை முற்றாகவே மறுக்கவும் இல்லை. அது தனக்கென ஒரு மத்திமமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை எம்மில் அநேகர் ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றோம். இதனால் இஸ்லாமிய கலை வடிவங்களை பொதுவாகவும் இசை வடிவங்களை குறிப்பாகவும் உருவாக்குவதில் இலங்கை முஸ்லிம்களாகிய நாம் பல நூற்றாண்டுகள் பின் நிற்கின்றோம். இது, மேற்கினதும் நமது அயல் தேசத்தினதும் கலைகளை நுகர்வதற்கு எம்மை இட்டுச் சென்றிருக்கின்றன என்ற உண்மையை மறந்து விட்டு அவற்றின் பாதகங்களைப் பார்த்து வாயில் கை வைத்துக் கொள்ளவே செய்திருக்கின்றது.

எனவே இலங்கை முஸ்லிம்களின் அழகியல் வெற்றிடத்தை இஸ்லாமியக் கலைப் படைப்புக்கள் நிரப்ப வேண்டிய வலுவான தேவை

இருந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில் கலைகள் குறித்த இஸ்லாமிய நிலைப்பாட்டைப் பேசும் சில புத்தகங்களை வெளியிட நிகழ் தீர்மானித்துள்ளது.

அந்த வகையிலேயே இசை குறித்த இப்புத்தகம் வெளிவருகிறது. அறபு, இஸ்லாமிய உலகத்தைப் பொருத்தவரை இசை குறித்த நீண்ட விவாதங்களும் ஆய்வுகளும் நடந்து முடிந்திருக்கின்றன. ஏராளமான புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. எமது நாட்டைப் பொறுத்தவரை முழுமையாக அந்த நிலை அடையப்படவில்லை. நாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இசையை நுகர்ந்து கொண்டுதான் இருக்கிறோம்.இருப்பினும் தத்துவச் சண்டையில் எல்லோருமே ஆர்வமாகவும் இருக்கிறோம்.

கலாநிதி இமாரா அவர்கள் நவீன உலகின் முக்கிய இஸ்லாமிய சிந்தனையாளர்களுள் ஒருவர். இப்புத்தகம் இசையின் புறக்கணிப்பு குறித்த அவரது ஆதங்கத்தின் எதிரொலியாகவே இருக்கின்றது. அது நம்மைத் தாக்குவது போல இருக்கலாம். இருப்பினும் யாரும் சினம் கொள்ளத் தேவையில்லை.

இப்புத்தகத்தின் கருத்துக்களை யாரும் முடிந்த முடிவுகளாகக் கொள்ளத் தேவையில்லை. மாற்றுக் கருத்துக்களுக்கு தாராளமாக இடமிருக்கின்றது. மாற்றுக் கருத்தென்பது மற்றக் கருத்துடயவரை எதிர்ப்பதாகப் பொருள் படாது.எந்த நிலையிலும் நடுநிலை கொள்வதே இங்கு முக்கியமானது. யாரோ சொன்னது போல நடுநிலை என்பது நடுவில் நின்று நெஞ்சைத் துருத்துவதல்ல. இரு பக்கங்களையும் பார்ப்பது. சமூக வளர்ச்சியை முன்னிலைப்படுத்தும் பெரும் கருணை அது.

இப்புத்தகத்தின் இறுதி அத்தியாயம் கலாநிதி அவர்களின் ஒரு உரையைக் கொண்டிருக்கின்றது. அதன் இறுதிப் பகுதியில் சில விடயங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன.

இப் புத்தகத்தை தமிழில் மிகச் சிறப்பாக மொழிபெயர்த்துத் தந்த நேசத்திற்குரிய சகோதரர் அஷ்ஷெய்க் தாரிக் அலி அவர்களுக்கும் இப்புத்தகத்தின் வரவில் அதிகூடிய கரிசனை செலுத்திய நண்பர் அஷ்ஷெய்க் இம்தியாஸ், தட்டச்சு மற்றும் தளக்கோளத்தில் உதவிய ஸபீர் மற்றும் அஸார் வஸீர், டலன்ட் அச்சக நிறுவனர் நண்பர் முனாப் அஸீஸ் ஆகியோருக்கு நன்றிகளும் பிரார்த்தனைகளும்...

இன்ஸாபும் ரம்ஸியும்

# மொழிபெயர்ப்பாளர் உரை

அனைத்துப் புகழ்களும் தாராளத்தன்மை மிக்க நாயன் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தம். முழு மனித இனத்துக்குமான அருட்கொடையாக அனுப்பப்பட்ட இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது வழிகாட்டல்களை முழுமையாக ஏற்றுப் பின்பற்றி வாழ்ந்த, வாழும், வாழவிருக்கும் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் உண்டாவதாக.

இஸ்லாம் மார்க்கமானது, மனித வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கு மான தெளிவான வழிகாட்டல்களை வழங்கும் சம்பூரணமான வாழ்க்கைத் திட்டமாகும். இது பற்றி அல்லாஹ், "நபியே! இந்த வேதத்தை அனைத்தை யும் விளக்குவதாகவும் நேர்வழிகாட்டலாகவும் இறை அருளாகவும் முஸ்லிம் களுக்கு நன்மாராயமாகவும் உங்களுக்கு நாம் அருளினோம்." (16:89) என்று குறிப்பிடுகின்றான்.

மேலும் இம்மார்க்கத்தை உண்மையாக ஏற்றுக் கொண்ட மனிதர்களின் பிரார்த்தனை எவ்வாறு அமைய வேண்டும்? என விளக்கும் அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது: **எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுல கில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! அவ்வாறே மறுமையிலும் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக! (2:201)**

இவ்வகையில் இஸ்லாம் மர்க்கமானது இம்மை, மறுமை ஆகிய இரண்டுக்குமிடையில் சமநிலை பேணுகின்ற ஒரு வழிகாட்டலாகத் திகழ்

கின்றது.இஸ்லாமிய வாழ்வொழுங்கின் முதன்மை முன்மாதிரியான முஹம்மத் (ஸல்)அவர்கள், தான் வாழ்ந்த சமநிலையான வாழ்க்கை குறித்தும், வணக்க வழிபாடுகள் அல்லது மறுமை வாழ்வின் வெற்றிக்கான தேட்டத்தில் தீவிரவாதத்தைக் கடைப்பிடிக்க முயன்ற சஹாபாக்கள் மூவரைக் கண்டித்தும் பின்வருமாறு கூறினார்கள்: "அறிந்து கொள்ளுங்கள்! நான் உங்கள் அனைவரையும் விட அல்லஹ்வைப் பற்றி நன் கறிந்தவன்.உங்கள் அனைவரையும் விட அவனுக்கு அஞ்சுபவன். அப்படியிருந்தும் நான் இரவில் நின்று வணங்குவது போலவே உறங்கவும் செய்கிறேன். பகலில் நோன்பு நோற்பது போலவே நோன் பின்றியும் இருக்கிறேன். மேலும் நான் பல பெண்களை மணம் முடித்து குடும்ப வாழ்க்கையும் நடத்துகிறேன் இதுதான் எனது வழி முறையாகும். யார் இதனை புறக்கணிக்கின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவரல்ல."

ஆனால் இஸ்லாம் மார்க்கத்தின் இந்த நடுநிலைத் தன்மையயை மறைத்து அதனை ஒரு தீவிரவாதமாக அல்லது மனித வாழ்விற்கான ஆன்மீக வழிகாட்டல்களை மாத்திரம் வழங்கி உலகியல் தேவைகளை முற்றாகப் புறக்கணிக்கின்ற ஒரு கொள்கையாகக் காட்ட பல முயற்சிகள் பல காலங்களில் முன்னெடுக்கப்பட்டன. விளைவாக மனிதர்களுடைய நடைமுறை வாழ்க்கையை விட்டும் தூரமான வெறும் சமயமாகவும் சடங்கு, சம்பிரதாயமாகவும் இஸ்லாம் மார்க்கம் ஆக்கப்பட்டு அதன் உயிரோட்டம் பறிக்கப்பட்டது. அதனால் முஸ்லிம்கள் தமது வாழ்க்கையை சமயம் சார்ந்த பகுதி,உலகியல் சார்ந்த பகுதி என கூறுபோட்டு,வேறாக்கி வாழத் தொடங்கினர்.

இந்நிலையை மாற்றி இஸ்லாத்திற்கு அதன் பழைய உயிரோட்டத்தையும் பூரணத்துவத்தையும், வழங்கி முஸ்லிம்களின் வாழ்வை முழுமையாகவே இஸ்லாமிய மயப்படுத்தும் முயற்சியாகவே கி.பி.18ஆம் நூற்றாண்டின் நவீன இஸ்லாமிய எழுச்சி ஆரம்பித்தது. இறையருளின் காரணமாக அம் முயற்சிகள் வெற்றியளிக்கும் ஒரு கட்டத்தை நாம் அண்மித்திருக்கிறோம். அத்தகையதோர் தருணத்தில் இஸ்லாத்தின் பூரணத்துவத்தை பறைசாற்று கின்ற கருத்துக்களைத் தாங்கிய ஒரு நூலை தமிழ் கூறும் நல்லுலகிற்கு மொழிபெயர்த்து வழங்கக் கிடைத்தமையை ஒரு நற்பாக்கியமாகவே கருதுகிறேன்.

இன்றைய இஸ்லாமிய உலகின் தலை சிறந்த அறிஞர் பெருமக்களுள் ஒருவரான கலாநிதி முஹம்மத் இமாரா அவர்களுடைய இந்நூலானது இசை

மற்றும் பாடல் உள்ளடங்கலாக அழகியற் கலைகள் பற்றிய இஸ்லாமியப் பார்வையை தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் விளக்க முனை கிறது. எமது நாட்டில் மாத்திரமன்றி இஸ்லாமிய உலகில் பலரும் புரிந்து கொண்டிருப்பது போலல்லாமல் இது குறித்த இஸ்லாத்தின் பார்வை மிக விரிந்ததும் தாராளத்தன்மை வாய்ந்ததுமாகும் என்பதை இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ள ஆதாரபூர்வமான கருத்துக்களினூடு புரிந்துகொள்ள முடியும். இசையும் பாடலும் ஏனைய அழகியற் கலைகளும் மனிதர்களை முழுமையாக ஆக்கிரமித்து அழிவின் பக்கம் அழைத்துச் சென்று கொண்டி ருக்கும் இக்காலத்தில் அவற்றை ஆக்கப்பணிகளில் எவ்வாறு ஈடுபடுத்த முடியும்? என்பதற்கான வழிகாட்டல்கள் இந்நூலில் முன்வைக்கப்பட்டி ருக்கின்றன. அவை முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி முழுமனித இனத்துக் குமான இஸ்லாத்தின் வழிகாட்டல்களாக, பங்களிப்பாக முன்வைக்கப்பட வேண்டியவை. அப்பணியையும் இந்நூல் செய்ய வேண்டும் என அவாவு கிறேன்.

இந்நூலில், வரலாற்று நெடுகிலும் வாழ்ந்த, இஸ்லாமிய உலகில் மதிக்கப் படுகின்ற, சத்தியத்தில் நிலைத்து நின்ற பேரறிஞர்கள் பலரின் கருத்துக்கள் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. அல்குர்ஆனையும் அஸ்ஸுன்னாவை யும், அறிவையும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வழங்கிய ஃபத்வாக் கள் ஆதாரபூர்வமாக முன்வைக்கப்பட்டுள்ளன.

இஸ்லாம் மார்க்கமானது தாராளத்தன்மையைக் கடைபிடிக்கும் ஒரு மார்க்கம் என்ற வகையில் கிளை விடயங்களில் பல கருத்துக்களுக்கு இடம் கொடுத்திருக்கிறது. அதனால் தான் வரலாற்றில் மத்ஹபுகள் தோற்றம் பெற்றன. இவ்வாறு மார்க்கச் சட்டங்களில் அறிஞர்கள் கொள்ளும் கருத்து முரண்பாடானது மனிதர்களுக்கான அருளாகும். என முஸ்லிம் சமூகத்தின் முதலாவது முஜத்திதாக (மார்க்கத்துக்குப் புத்துயிரூட்டியவர்) மதிக்கப்படு கின்ற அமீருல் முஃமினீன் உமர் பின் அப்தில் அஸீஸ் (ரஹ்) கூறிய கருத்து இங்கு நோக்கத்தக்கதாகும்.

எனவே ஒரு விடயம் குறித்து முன்வைக்கப்படும் வித்தியாசமான கருத்துக்களைப் புரிந்து ஏற்றுக் கொள்வதில் முஸ்லிம்கள் தாராளத்தன்மை காட்ட வேண்டும் என்பதே இஸ்லாத்தின் எதிர்பார்ப்பாகும்.இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் குறித்தும் இத்தகைய அணுகுமுறை யையே கடைப்பிடிக்க வேண்டும் என்று வாசகர்களை கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். அத்தோடு அவர்கள் இக்கருத்துக்களை முடிந்த முடிவு களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. மாறாக

வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கான அல்லது கருத்து முரண்பாடு களில் உடன்பாடு காண்பதற்கான உந்துதலைப் பெறவும் மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் மாண்பைப் பெறவும் இந்நூல் தூண்டுதலாக அமைய வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். குறிப்பாக இலங்கைச் சூழலில் வேற்றுமையில் ஒற்றுமை காணல் என்ற உயரிய நோக்கில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருவதை இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவு கூர்வதோடு, மார்க் கத்தின் கிளை விடயங்கள் குறித்து பல்வேறு காலகட்டங்களிலும் வாழ்ந்த எமது அறிஞர் பெருந்தகைகள் முன்வைத்துள்ள வித்தியாசமான கருத்துக் களை திறந்த மனதோடு ஆய்வுக்குட்படுத்தி காலத்தின் தேவைக்கேற்ற பொருத்தமானதும் சரியானதுமான முடிவுகளை முன்வைப்பதற்கும், தமது நிலைப்பாட்டுக்கு மாற்றமான கருத்துக்களை தாராளத்தன்மையோடு அங்கீகரிப்பதற்கும் எமது உலமாக்கள் முன்வந்து பொதுமக்களுக்கான சிறந்த முன்மாதிரிகளாகத் திகழ வேண்டும் என்றும் பேராவல் கொள் கின்றேன்.

இறுதியாக இம் மொழிபெயர்ப்பைச் செய்வதில் எனக்குத் தூண்டுதல் வழங்கி உற்சாகப்படுத்திய அனைவருக்கும் நன்றி கூறி தமது இரண்டாவது வெளியீடாக இந்நூலை வெளியிட முன்வந்த 'நிகழ்' பதிப்பக சகோதரர் களான இன்ஸாப் ஸலாஹுத்தீன், ரம்ஸி பாரூக் ஆகியோருக்கு உளமார்ந்த பிரார்த்தனைகளுடன், நன்றி கூறி எனது இம்முயற்சியை வல்லோன் அல்லாஹ் ஏற்று அங்கீகரிக்க வேண்டும் எனவும் யாசித்து விடை பெறுகிறேன்.

இறை ஊழியன்,

**அஷ்ஷெய்க். B. தாரிக் அலி (நளீமி)**

# மொழி, அல்குர்ஆன், அஸ்ஸுன்னா ஆகியவற்றின் ஒளியில் பாடலும் இசையும்

பாடல் என்பது (குரல்) பேச்சு, சந்தம், இசை என்பவற்றின் சேர்மான மாகும். இஸ்லாமிய சட்டப் பாரம்பரியத்தில் ஸுன்னாவிலும் பிக்ஹி லும் சிந்தனைப் பரப்பிலும் 'பாடல்' பற்றி - பல சொற்பிரயோகங்களை அடிப் படையாகக் கொண்டு பேசப்பட்டுள்ளது. அவற்றில் 'லஹ்வு' (கேளிக்கை) 'ஸமாஉ' (பாடல் கேட்டல்) ஆகிய சொற்பிரயோகங்கள் மிக முக்கியமானவை.

பாடலைக் குறிக்க லஹ்வு - கேளிக்கை என்ற பதத்தைப் பயன்படுத் தியிருப்பதானது நவீனகால மனிதர்களிடம் அதுகுறித்த எதிர்மறையான கருத்தை அதாவது பாடல் என்பது (மக்ரூஹ்) வெறுக்கத்தக்கது அல்லது (ஹராம்) தடை செய்யப்பட்டது என்ற பதிவையே ஏற்படுத்தியிருக்கின் றது. உண்மையில் இஸ்லாம் மார்க்கத்தின் ஆதாரபூர்வமான சரியான கருத்து அதுவல்ல. எனவே, லஹ்வு - கேளிக்கை என்ற பிரயோகத்தின் சரியான கருத்து என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக பாடல் குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் லஹ்வு என்னும் தலைப்பிலேயே ஹதீஸ் கிரந்தங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. அல்குர்ஆனிலும் லஹ்வு என்ற பதம் கையாளப்பட்டுள்ளது. ஆனால், அதன் உண்மையான கருத்து என்ன?

### மொழி ரீதியான விளக்கம்

அறபு மொழிப் பிரயோகத்தில் லஹ்வு - கேளிக்கை என்பது சிறந்தவைகளை அல்லது வணக்க வழிபாடுகளை அல்லது நன்மைகளை விட்டும் மனிதனை திசை திருப்பிவிடுகின்ற விடயங்கள் என திட்டவட்டமாக பொருள் கொள்ள முடியாது. உண்மையில் லஹ்வு - கேளிக்கை என்பது மனிதனுடைய கவனத்தை ஒன்றிலிருந்து பிரிதொன்றின்பால் திருப்பிவிடுகின்ற விடயங்களாகும்.

உதாரணமாக நல்ல விடயங்களில் ஈடுபடுவதானது தீயவைகளை விட்டும் கவனத்தைத் திருப்பிக் கொள்வதாகும். அவ்வாறே தீய விடயங்களில் ஈடுபடுவதானது நல்லவைகளை விட்டும் கவனத்தைத் திருப்பிக் கொள்வதாகும். எனவே, 'லஹ்வு' என்பது மனிதனைத் தன்பால் ஈர்க்கின்ற, கவர்கின்ற விடயங்களாகும். அறபு மொழிப் பிரயோகத்தில் இப்பதமானது உள்ளத்தை மகிழ்விக்கின்ற, அதனைத் தன்பால் ஈர்த்து அதற்கு புத்துணர்ச்சியை வழங்குகின்ற விடயங்களைக் குறிக்கவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இப்னு மன்ழூர் எழுதிய லிஸானுல் அறப் எனும் அகராதி இதனைப் பின்வருமாறு விளக்குகிறது. 'லஹ்வு' என்பது உன்னை (தன்னில்) ஈடுபடுத்துகின்ற (தன்பால்) உன்னை ஈர்த்துக் கொள்கின்ற, உனது கவனத்தைத் திருப்பிவிடுகின்ற ஆசைகள், இன்பங்கள் போன்றனவாகும். அறபியில் 'லஹைது அனிஷ் ஷைஇ' என்றால் ஒன்றைவிட்டும் கவனத்தைத் திருப்பிக் கொண்டேன். அதனை மறந்துவிட்டேன். புறக்கணித்து விட்டேன் எனப் பொருள்படும்.

'லஹதில் மர்அது இலா ஹதீஸில் மர்அதி தல்ஹூ லஹூவன்' என்றால் ஒரு பெண் இன்னொரு பெண்ணோடு பேச்சில் ஈடுபட்டு அதனால் ஈர்க்கப்பட்டாள் என்பது பொருளாகும். எனவே, 'லஹ்வு' என்பது ஒன்றில் ஈடுபட்டு அதனால் கவரப்படுதலைக் குறிக்கும். மேலும் அது திருமணம், பெண், பிள்ளை ஆகிய வாழ்வின் அலங்காரங்கள் என்ற கருத்தையும் உடலுறவு என்ற கருத்தையும் மொழி ரீதியாகத் தரும். 'லஹ்வு' என்ற சொல்லிலிருந்து உருவாகும் 'அல் மலாஹீ' எனும் சொல்லானது மனிதனைத் தன்பால் ஈர்க்கும், அவனது கவனத்தைக் கவரும் கருவிகளைக் குறிக்கும். அதாவது மனிதனுக்கு இன்பத்தை, ஈர்ப்பை வழங்குகின்ற, இயக்கப்படுகின்றபோது ஏனைய அம்சங்களைவிட்டும் அவனது கவனத்தைத் திருப்பிவிடுகின்ற சாதனங்களை இச்சொல் குறிக்கும்.

### அல்குர்ஆனின் பிரயோகத்தில் 'லஹ்வு' என்பதன் கருத்து

அல்குர்ஆனிலும் இச்சொல் இவ்விதமே கையாளப்பட்டிருக்கின்றது. அதாவது ஆகுமாக்கப்பட்ட மனித நடவடிக்கைகளில் ஒன்றாகவே

அல்குர்ஆன் கேளிக்கையை நோக்குகின்றது. ஆனால், அது (லஹ்வு - கேளிக்கை) மனிதனைக் கட்டாயக் கடமைகளைவிட்டும் (பர்ளு, வாஜிப்) அத்தியாவசியமான காரியங்களைவிட்டும் திசைதிருப்பாமல் இருத்தல் வேண்டுமென அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

கட்டாயக் கடமைகள், அத்தியாவசியக் காரியங்கள், ஆகுமாக்கப்பட்ட விடயங்கள் ஆகியன பற்றிப் பேசுகின்ற அல்குர்ஆன் வசனங்கள் முறையே ஜும்ஆத் தொழுகை, வியாபாரம், பூமியில் திரிதல், இறை அருட்கொடைகளைத் தேடிக்கொள்ளல், அல்லாஹ்வை நினைவுகூர்தல் (திக்ர்), கேளிக்கைகளில் ஈடுபடல் என்பன பற்றிப் பேசி இக்காரியங்களுக்கு அவற்றுக்குரிய பெறுமானத்தை, நேரத்தை வழங்கும்படி பணிக்கின்றன. இவ்வாறு அவற்றுக்குரிய பெறுமானத்தை வழங்காமல் விடுவதை அல்லது கட்டாயக் கடமைகளைப் புறக்கணித்து விட்டு ஆகுமானவைகளில் ஈடுபடுவதை அல்குர்ஆன் கண்டிக்கின்றது.

''ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வைத் தியானிக்க (பள்ளிக்கு) விரைந்து செல்லுங்கள் - நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும்.

பின்னர், (ஜும்ஆ) தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டதும், (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள்; அன்றியும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யுங்கள்.

இன்னும், (நபியே!) அவர்களில் (சிலர்) ஒரு வியாபாரத்தையோ, அல்லது ஒரு வேடிக்கையையோ, கண்டால், அதன்பால் சென்று விடுகின்றனர். மேலும், நின்ற வண்ணமே உம்மை விட்டுவிடுகின்றனர்; அல்லாஹ்விடத்தில் இருப்பது, வேடிக்கையை விடவும் வியாபாரத்தை விடவும் மிகவும் மேலானதாகும்; மேலும் அல்லாஹ் உணவளிப்பவர்களில் மிகவும் மேலானவன் என்று (நபியே!) நீர் கூறுவீராக.'' (ஜும்ஆ: 9-11)

வர்த்தகத்தில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டதல்ல. ஆனால், அது எம்மை ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றுவதைவிட்டும் திசைதிருப்பிவிடுவது தடைசெய்யப்பட்டதாகும். பூமியில் திரிந்து அல்லாஹ்வின் அருட்கொடைகளைத் தேடிக்கொள்வது அத்தியவசியமான கடமைகளில் ஒன்றாகும். ஆனால், அதற்குரிய நேரம் கடமையான தொழுகைக்குரிய நேரமல்ல. வர்த்தகமும் கேளிக்கைகளும் ஆகுமான (முபாஹ்) காரியங்களாகும். ஆனால், அவை மனிதனை ஜும்ஆத் தொழுகையைவிட்டும் திசைதிருப்பிவிடக்கூடாது. எனவே, லஹ்வு - கேளிக்கை அதாவது மகிழ்ச்சியை

அனுபவிப்பது என்பது இங்கு வர்த்தகம், பூமியில் திரிதல், அல்லாஹ்வின் அருட்கொடைகளைத் தேடிக்கொள்ளல் ஆகிய அத்தியாவசிய மற்றும் ஆகுமாக்கப்பட்ட காரியங்களோடு இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

கேளிக்கையானது ஒன்றிலிருந்து பிரிதொன்றுக்கு மனிதனின் கவனத்தைத் திருப்பிவிடுகின்ற விடயமாக இருந்தால் அல்குர்ஆன் அதனைத் தடைசெய்ய மாட்டாது. ஏனெனில், அது தன்னளவில் (தடைசெய்யப்பட்ட) ஹராமானதல்ல. கடமைகளைப் புறக்கணிக்கும்படி தூண்டினால்தான் அது ஹராமாக மாறும். இங்கு அல்குர்ஆன் கேளிக்கை என்பதை ஆகுமாக்கப்பட்ட, (முபாஹ்), அத்தியாவசியமான (ழரூரா), கடமையான, (பர்ளு/வாஜிப்) விடயங்களோடு இணைத்துக் கூறியுள்ளது. அதன்மூலம் அல்குர்ஆன் மனித வாழ்வில் ஒரு பரந்த சமநிலையைத் தோற்றுவிக்கவே விரும்புகின்றது. அதாவது மனிதன் கடமைகளையும் அத்தியவசிய காரியங்களையும் நிறைவேற்றி தனது தேவைகளைப் பூரணப்படுத்திக்கொண்டு அனுமதிக்கப்பட்ட (ஆகுமாக்கப்பட்ட) இன்பங்கள், அலங்காரங்கள், நிறைவாம்சங்கள் மூலம் தன்னுடைய வாழ்வை புதுப்பித்து அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென அல்குர்ஆன் எதிர்பார்க்கின்றது.

கடமையில்லாத (சுன்னத்தான) தொழுகைகள் மனிதனை அத்தியவசிய மற்றும் ஆகுமான காரியங்களைவிட்டும் திசை திருப்பிவிடுமாயின் அது மார்க்கத்தில் தீவிரத்தைக் கடைப்பிடிப்பதாக அமையும். அவ்வாறே அத்தியாவசியக் காரியங்கள் கடமைகளைவிட்டும் அவனது கவனத்தைத் திருப்பிவிடுவதும்கூட தீவிரவாதமாகும்.

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிப்பதாவது ''யார் அல்லாஹ்வையும் மறுமைநாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் வெள்ளிக்கிழமைகளில் ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும். ஆனால், அவர் ஒரு நோயாளியாக/பிரயாணியாக/பெண்ணாக/சிறுவனாக/அடிமையாக இருந்தால் அவருக்கு ஜும்ஆ கடமையில்லை. யார் ஒரு கேளிக்கையின் காரணமாக அல்லது வியாபாரத்தின் காரணமாக ஜும்ஆத் தொழுகையைப் புறக்கணிக்கின்றாரோ அல்லாஹ்வும் அவரைப் புறக்கணித்துவிடுவான். அல்லாஹ் சிருஷ்டிகளிடமிருந்து எவ்வித தேவையு மற்றவன். மிகவுமே புகழுக்குரியவன்.[1]

இந்த ஹதீஸின்படி யார் மீது ஜும்ஆத் தொழுகை கடமையாகின்றதோ அவர் வியாபாரத்தையும் கேளிக்கையையும்-ஜும்ஆத் தொழுகைக்குரிய நேரத்தில்- விட்டுவிட வேண்டும். ஆனால், ஜும்ஆத் தொழுகை கடமையில்லாத பெண்கள், நோயாளிகள், பிரயாணிகள், சிறுவர்கள் ஆகியோர் அந்நேரத்தில் ஆகுமான வேறு காரியங்களில் ஈடுபட முடியும்.[2]

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; பெண்கள் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டால் இசைக் கருவிகளையும் மத்தளங் களையும் பயன்படுத்தி பாடல் இசைக்கும் மரபு அறேபியாவில் காணப் பட்டது. ஒரு சந்தர்ப்பத்தில் இந்த இசையைச் செவியுற்ற மக்கள் மஸ்ஜிதி லிருந்து எழுந்து அவ்விடத்துக்குச் சென்று விட்டனர். அப்பொழுதுதான் ஸூறதுல் ஜும்ஆவின் வசனங்கள் இறங்கின. திஹ்யதுல் கல்பி (றழி) அவர்கள் வியாபாரப் பொருட்களோடு வந்து அவ்வியாபாரக் கூட்டம் தம்மைக் கடந்துசெல்வதைக் கண்டபோதே மக்கள் இவ்வாறு மஸ்ஜிதி லிருந்து வெளியேறிச் சென்றதாகவும் இச்சம்பவம் வேறொரு வழியில் அறிவிக்கப்பட்டுள்ளது.(3)

ஸூறதுல் அன்ஆமில் வரும் ''உலகவாழ்க்கை வீணும் விளையாட்டு மேயன்றி வேறில்லை. பயபக்தியுடையோருக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும். நீங்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டாமா?

என்ற வசனத்தின் கருத்து உலக வாழ்க்கையை இகழ்வதோ விளையாட் டுக்களையும் கேளிக்கைகளையும் பழிப்பதோ அல்ல. இங்கு குறிப்பிடப் படும் இகழ்ச்சிக்குரிய விடயம் 'இந்த உலக வாழ்க்கைதான் வாழ்க்கை. நாம் ஒருபோதும் மீள எழுப்பப்பட மாட்டோம்' என்ற காபிர்களின் வார்த் தைகளே. இவ்வசனத் தொடர் இதனையே குறிப்பிடுகின்றது. அன்றியும், இவ்வுலகத்தில் நாம் வாழ்ந்திருப்பதைத் தவிர (அப்பால் மறுமை வாழ்வு என்று) ஒன்றும் இல்லை; நாம் (மரணத்திற்குப் பின் மறுபடியும்) எழுப்பப் பட மாட்டோம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவர்கள் (உயிர்ப்பிக்கப்பட்டு) இவர்களுடைய இறைவனின் முன் நிறுத்தப்படும்போது இவர்களை நீர் காண்பீராயின் (அச்சமயம் இறைவன் கேட்பான்) இது உண்மையல்லவா? என்று; ஆம்! எங்களுடைய ரப்பின் மீது ஆணையாக (மெய்தான்) என்று இவர்கள் கூறுவார்கள்; அப்போது, நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்த காரணத்தால் வேதனையை அனுபவியுங் கள் என்று அல்லாஹ் கூறுவான்.

ஆகவே, (மறுமை நாளில்) அல்லாஹ்வைச் சந்திப்பதைப் பொய் என்று கூறியவர்கள் நிச்சயமாக நஷ்டம் அடைந்தவர்களாகி விட்டனர்; அவர்களி டம் மறுமை நாள் திடீரென வரும்பொழுது உலகில் நாங்கள் அலட்சியமாய் இருந்ததற்காக எங்களுக்கு ஏற்பட்ட கை சேதமே என்று கூறுவார்கள். மேலும் அவர்கள் தங்கள் (பாவச்) சுமைகளை தங்கள் முதுகுகளின் மேல் சுமப்பார் கள்; அவர்கள் சுமப்பது மிகவும் கெட்டது என்பதை அறிந்துக் கொள்ளுங்கள்.

''உலக வாழ்க்கை வீணும் விளையாட்டுமேயன்றி வேறில்லை; பயபக்தி யுடையவர்களுக்கு நிச்சயமாக மறுமை வீடே மிகவும் மேலானதாகும்; நீங்கள் இதைப் புரிந்து கொள்ள வேண்டாமா?'' (அன்ஆம் 29-32)

இவ்வசனங்களின்படி இகழ்ச்சிக்குரியவை உலக வாழ்வோ, விளையாட்டுக்களோ, கேளிக்கைகளோ அல்ல. மாறாக மீள எழுப்பப்படுவதை (மறுமை வாழ்வை) இறை நிராகரிப்பாளர்கள் மறுத்தமையே இங்கு இகழவும் கண்டிக்கவும் படுகின்றது. இதுகுறித்து இமாம் குர்துபி (றஹ்) அவர்கள்; "இவ்வசனத்தின் குறிக்கோள் இவ்வுலக வாழ்க்கைதான் வாழ்க்கை" என்ற காபிர்களின் கூற்றை மறுப்பதாகும் எனக் கூறுகிறார்கள்.(4)

எனவே, லஹ்வு - கேளிக்கை - பாடல் பற்றிய இஸ்லாத்தின் பார்வையானது அதனை (தன்னளவில்) இயல்பில் ஆகுமானவைகளின் பட்டியலிலேயே சேர்க்கிறது. அதனோடு இணைகின்ற விடயங்களின் காரணமாக அல்லது அது தருகின்ற விளைவுகளின் காரணமாக அது ஏனைய காரியங்களுக்குப் பொருந்தும் மார்க்கச் சட்டங்களுக்கு உட்படும். எனவே, பாடல் அடிப்படையில் ஆகுமானதாகும் (முபாஹ்). சில காரணங்களின் அடிப்படையில் அது வாஜிபாக, சுன்னத்தாக, மக்ரூஹாக, ஹராமாக மாறும். இவ்விடயத்தில் பாடலானது உண்ணல், பருகுதல் போன்ற ஏனைய ஆகுமான விடயங்களை ஒத்திருக்கிறது. இவை அடிப்படையில் அனுமதிக்கப்பட்டவை. சில காரணங்களின் அடிப்படையில் அவை வாஜிபாக, ஸுன்னத்தாக, மக்ரூஹாக அல்லது ஹராமாக மாறும்.

பாடல் என்பது சந்தங்களையும் இசைவான ஓசைகளையும் இணைத்து மெருகூட்டப்பட்ட அழகிய தொனியாகும். இஸ்லாமிய சிந்தனையானது, பாடலை மனித இயல்பு என்றே நோக்குகிறது. பாடல் மூலம் மனிதன், அல்லாஹ் பறவைகளிலும் மரங்களிலும் ஏற்படுத்தியுள்ள படைப்பு நுட்பங்களிலொன்றை பிரதிபண்ணுகின்றான். மனிதனின் தொண்டையிலிருந்து வெளிவரும் அழகிய ஓசையானது குயில் போன்ற பறவைகளின் தொண்டைகளிலிருந்து வெளிவரும் அழகிய ஓசைகளை ஒத்ததாகும்.

இசைக்கருவிகளால் மனிதன் உருவாக்குகின்ற அழகிய இசைவான சந்தங்கள், காற்றும் தென்றலும் பட்டு தோட்டங்களிலும் தோப்புக்களிலும் உள்ள மரங்களும் அவற்றின் கிளைகளும் இலைகளும் உருவாக்குகின்ற இசைகளுக்கும் பாடல்களுக்கும் ஒப்பானவையாகும். எனவே, பறவைகளின் தொண்டைகளிலிருந்து வெளிவரும் அழகிய ஓசைகள் 'ஹராம்' என்று மனித அறிவோ அவனது இயல்போ, இஸ்லாம் மார்க்கமோ கூறாத போது மனிதனின் தொண்டையிலிருந்து வெளிவரும் ஓசைகள் மாத்திரம் ஹராம் என்று கூறுவது எப்படி நியாயமாகும்?! ஏனெனில், மனிதர்களுடையவும் பறவைகளுடையவும் தொண்டைகளுக்கிடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

அவ்வாறே ஒன்றுக்கொன்று முரணான, வெறுப்புக்குரிய ஓசைகளும் சந்தங்களும் தடைசெய்யப்படவில்லையென்றால், அழகாக இருக்கிறது,

விரும்பத்தக்கதாக இருக்கிறது, முரண்பாடின்றி இசைவாக இருக்கிறது என்பதற்காக சில ஓசைகளை ஹராம் என்று கூறுவது எப்படி நியாயமாகும்?!

இஸ்லாம், மனித இயல்பின் மார்க்கம் என்றவகையில் முஸ்லிமின் அறிவானது பாடல் மற்றும் இசை குறித்து இத்தகையதொரு கண்ணோட்டத்துக் குத்தான் இயல்பாக வரும். இந்த இயல்பு நியாயத்தை இமாம் கஸ்ஸாலி (றஹ்) (ஹி: 450-505 / கி.பி. 1058-1111) அவர்கள் பின்வருமாறு விளக்குகிறார்கள்: ''ஓசைகளின் அடிப்படை-அவை உருவாகுமிடம்-பிராணிகளின் தொண்டைகளாகும். ஊதுகுழல்கள் (இசைக்கருவிகள்) தொண்டைகள் எழுப்பும் ஓசைகள் மீது வைக்கப்பட்டுத்தான் இசையும் பாடலும் உருவாக் கப்படுகின்றன. அது அல்லாஹ் உருவாக்கிய, படைத்த ஒரு விடயத்தோடு மனிதர்கள் ஒப்பீடு செய்யும் ஒரு முயற்சியாகும். அல்லாஹ்வின் அந்தப் படைப்பு நுட்பத்திலிருந்துதான் மனிதர்கள் கற்றுக் கொள்கிறார்கள். அல்லாஹ்வின் படைப்பையே மனிதர்கள் முன்மாதிரியாகக் கொள்கிறார்கள். எனவே, இத்தகைய ஓசைகள் சிறந்தவையாக, ஒழுங்கானவையாக இருக்கின்றன என்பதற்காக அவற்றைச் செவிமடுப்பது ஹராமாக இருக்க முடியாது. குயிலினதும் ஏனைய பறவைகளினதும் ஓசைகள் ஹராம் என்று கூறுவோர் யாருமில்லை. எனவே, (பறவைகளின்) தொண்டைக்கும் (மனித) தொண்டைக்கும் இடையிலும், சடப் பொருளுக்கும் பிராணிகளுக்குமிடையிலும் இவ்விடயத்தில் வேறுபாடுகள் இல்லை. ஆகையால் குயிலின் ஓசையோடு மனிதனின் தொண்டையிலிருந்தும் ஏனைய உறுப்புக்களிலிருந்தும் வெளிவரும் ஓசைகளை ஒப்பிட முடியும். அதாவது மனிதத் தொண்டையிலிருந்து வெளிவரும் ஓசைகளும் தடிகள், மத்தளம், ரபான் போன்ற கருவிகள் மூலம் வெளிவரும் ஓசைகளும் ஒன்றே.''[(5)]

மனித இயல்பும் பகுத்தறிவும் முன்வைக்கும் இந்த நியாயத்தையே இஸ்லாத்தின் மூலாதாரங்களும் உறுதிப்படுத்துகின்றன. அம்மூலாதாரங்களின்படி பாடல் என்பது தன்னளவில் (அடிப்படையில்) ஆகுமானதாகும் (ஹலால்). அது மக்ரூஹ் அல்லது ஹராம் என்பதற்கு வேறு நியாயங்கள் இருத்தல் வேண்டும்.

நாம் அனைவரும் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய - மனித வாழ்க்கைக்கான முழுமையான முன்னுதாரணம் இறைதூதர் (ஸல்) அவர்களாவார்கள். அவர்கள்தான் சமநிலையும் பூரணத்துவமும் கொண்ட உதாரணப் புருஷராவார்கள். அவர்கள் தனது உலக வாழ்வுக்காக உழைக்கும்போது அங்கு நிரந்தரமாக வாழ இருப்பவர் போலவும் தனது மறுமை வாழ்வுக்காக பாடுபடும்போது நாளையே மரணிக்க இருப்பவர் போலவும் செயற்பட்டார்கள். மேலும், மிகச் சிறந்ததும் நித்தியமானதுமான மறுமை

வாழ்வில் அதீத வேட்கை கொண்டிருந்தபோதும் உலக வாழ்விலும் அதன் நல்லவைகளிலும் இருந்து தான் அனுபவிக்க வேண்டிய, தனக்குரிய பங்கை ஒருபோதும் அவர்கள் மறந்துவிடவில்லை. அத்தோடு அவர்கள் வாழ்வின் அனைத்து அம்சங்களிலும்-கூடுதல் குறைத்தல் செய்யும் -தீவிரத்தைத் தவிர்த்து வாழ்ந்தவர்களாவார்கள்.

முழு மனித இனத்துக்குமான மிகச் சிறந்த முன்மாதிரியாகக் கருதப் படும் அந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் போர்களின்போது தனது மக்களை வழிநடாத்திய ஒரு தலைவராகவும் மக்களுக்கு அன்பையும் இரக்கத்தையும் போதித்த ஒரு நபியாகவும் இருந்தார்கள். ஏழைகளோடு மிகவும் அன்பாக நடந்துகொண்டே அவர்கள் தனது வாழ்வு - ஏன் தனது படுக்கை விரிப்பு கூட- கடினமானதாக இருக்க வேண்டும் என விரும்பினார்கள். அதேநேரம் ஏழ்மையையும் கடனையும் விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார் கள். மேலும் அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தி வைத்துள்ள அழகின் அத்தாட்சிகளை, வெளிப்பாடுகளை, மூலங்களை ஆழ்ந்து உணர்ந்து கொண்டவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். எனவேதான், அவர்கள் பிரயாணத்தின் போதான பிரார்த்தனையில் ''தீய காட்சிகளை விட்டும்'' அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள். மழை வேண்டித் தொழும் தொழுகையில் ''இறைவா! எங்கள் பூமியில் அதன் அலங்காரத்தை எமக்குத் தந்தருள்'' என்று பிரார்த்தித்தார்கள்.

மேலும், -ஓர் ஏழ்மைச் சமூகத்தில் தான் வாழ்ந்தாலும்கூட- முஸ்லிம்கள் தமது பெயர்களில், ஆடைகளில் ஏன் காலில் அணியும் செருப்புக்களில்கூட அழகையும் அலங்காரத்தையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர்கள் கூறினார்கள். நபி (ஸல்) அவர்களுடைய பணியாளர் அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் இதுபற்றி அறிவிக்கும்போது ''நான் இறைதூதர் (ஸல்) அவர்களுடைய வாசனையைவிட சிறந்த எந்தவொரு நறுமணத்தையும் என்வாழ்வில் நுகர்ந்ததில்லை. அவர்களுடைய கைகளைவிட மென்மை யான எந்தவொரு பட்டையும் நான் தொட்டதில்லை. அவர்கள் மிகவும் பிரகாசமான நிறத்தவராக இருந்தார்கள். அவர்களுடைய வியர்வை முத்துக் கள் போன்றிருந்தன''(6) எனக் கூறுகிறார்கள்.

இவையனைத்தும் சேர்ந்துதான் முழுமையானதும் அனைத்தையும் உள்ளடக்கியதும் சமநிலை மிக்கதுமான முன்மாதிரியாக அவர்களை ஆக்கி யிருக்கிறது. அல்லாஹ்வுக்கு முன்னிலையில் நிற்கும்போது அன்னாரு டைய கால்கள் வீங்கியிருக்கின்றன. அழகை உய்த்து, உணர்ந்து ரசிப்பதா னது அவர்களது வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் இழையோடியிருக் கின்றது. அவர்களது உண்மையான, தூய புன்னகையுடன் இனிய நகைச் சுவையும் கலந்திருந்தது. ஏனெனில் அல்லாஹ்வை வணங்குவது என்பது

அவன் மனித வாழ்வுக்கு குறைவின்றி சொரிந்திருக்கின்ற அருட்கொடைக ளுக்கு நன்றிசெலுத்துவதாகும். அந்த அருள்களில் ஒன்றே 'அழகு' என்பதா கும். அந்த அருளை -அதனை மிகவும் விரும்புகின்ற- அழகிய படைப்பா ளன் அல்லாஹ்தான் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தி வைத்துள்ளான். ஆனால், நாம் அதனை அனுபவிக்காமல் அதனைப் புறக்கணித்து எமது அறிவையும் உணர்வையும் அதனை விட்டும் திருப்பி அதனை உணர்ந்துகொள்வதற்கான வாயில்கள் அனைத்தையும் மூடிவிட்டோம் என்றால் அந்த அருளின் மகத்துவத்தை புறக்கணித்தவர்களாக ஆகிவிடுவோம். அல்லாஹ் எம்மீது புரிந்துள்ள அருளுக்கு நன்றி செலுத்தாதவர்களாக (அவனை வணங்காதவர் களாக) ஆகிவிடுவோம்.

நாம் எமது வாழ்வின் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய இறைதூதர் (ஸல்) அவர்களுடைய சமூக வாழ்வில் பாடலுக்கு உரிய இடம் வழங்கப் பட்டிருந்தது. நபியவர்களின் முன்மாதிரி வழிகாட்டல்களான சொல்லி லும் அங்கீகாரத்திலும் மாத்திரமன்றி காலங்களின் சிறந்த காலமாகிய அன்னாரது கால நடைமுறையிலும் இதற்கான உறுதியான ஆதாரங்கள் உண்டு. ஸஹீஹுல் புஹாரியில் பதியப்பட்டுள்ளதாவது: முஃமின்களின் தாய் ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்; ''ஒருநாள் எனது வீட்டில் இரண்டு சிறுமிகள் புஆஸ்[7] பற்றிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்த போது இறைதூதர் (ஸல்) அவர்கள் வீட்டினுள் நுழைந்து தனது விரிப்பில் சாய்ந்து தனது முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே வந்த அபூபக்ர் (றழி) என்னைக் கடிந்து, அல்லாஹ்வின் தூதருக்கு முன்னிலையில் ஷைத்தானின் இசைக்கருவிகளை இசைப்பதா? என்று கேட்டார்கள். அப்போது அபூபக்ர் (றழி) அவர்களை நோக்கிச் சென்ற நபியவர்கள் சிறுமிகள் இருவரையும் பாட்டுப்பாட விட்டு விடுங்கள்'' என்று கூறினார்கள்.

இங்கு நாம் நபியவர்களின் செயல் சார்ந்த ஒரு வழிகாட்டலின் (முன் மாதிரியின்) முன்னால் நிற்கிறோம். நபித்துவத்தின் வீட்டில் இரண்டு யுவதி கள் பாடுவதையும் அப்பாடலை ஆண்கள் கேட்பதையும் இங்கே நபியவர் கள் அனுமதித்திருக்கிறார்கள். அத்தோடு அந்த யுவதிகள் இருவரும் ஜாஹி லிய்யாக் காலத்தில் இடம்பெற்ற போர்களைப் பற்றிய பாடல்களையே பாடியும் இருக்கின்றனர். அதனை அபூபக்ர் (றழி) ஆட்சேபித்து தடைசெய்ய முற்பட்டபோது நபியவர்கள், அவ்வாறு செய்வதைத் தடுத்து இத்தகைய பாடல்கள் ஆகுமானவையென வலியுறுத்தியிருக்கிறார்கள்.

பாடல் இசைத்த அவ்விரு யுவதிகளைவிட்டும் நபியவர்கள் தனது முகத் தைத் திருப்பிக் கொண்டமையானது பார்வையைத் தாழ்த்திக்கொள்ளுதல் என்ற அடிப்படையில் செய்யப்பட்டதன்றி பாடல் கேட்பதைவிட்டும்

தனது காதுகளை மூடிக்கொள்வதற்காக அல்ல. அத்தோடு இமாம் புஹாரி தனது ஸஹீஹில் பதிவுசெய்துள்ள இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப் பாளர்களில் எந்தவொருவரைப் பற்றியும் ஹதீஸ்துறை அறிஞர்கள் எவ் விதக் குறையையும் கூறவில்லையென்பதும் இங்கும் கவனத்திற் கொள் ளத்தக்கதாகும்.

இதே ஹதீஸில் மேற்படி கருத்தை முழுமைப்படுத்தும் வகையில் நபி யவர்களின் நடைமுறைசார்ந்த சுன்னாவிலிருந்து இரண்டாவது நிகழ்வை யும் ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ''அது ஒரு பெருநாள் தினமாக இருந்தது. ஹபஷி நாட்டவர்கள் தோலினால் செய்யப்பட்ட மத்தளங்களையும் ஈட்டிகளையும்கொண்டு மஸ்ஜிதில் சில விளையாட்டு களில் ஈடுபட்டனர். அதுபற்றி நான் நபியவர்களிடம் கேட்டபோது அதனைப் பார்க்க விரும்புகிறீர்களா? என்று என்னிடம் கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்றேன். பின்னர் நபியவர்கள் எனது கன்னங்கள் அன்னாரின் கன்னங்களில் படும்படி என்னை அவர்களுக்குப் பின்னால் நிற்க வைத்து அவர்களது ஆடைகளால் என்னை மறைத்துக்கொண்டார்கள்.

அப்போது ஹபஷி நாட்டவர்கள் நடனமாடி விளையாடியதை நான் பார்த்தேன். அப்போது அங்குவந்த உமர் (றழி) அந்த சாகசக்காரர்களை விரட்டினார்கள். உடனே நபியவர்கள் ஹபஷி நாட்டவர்களைப் பார்த்து அர்ஃபதாவின் பிள்ளைகளே! நீங்கள் பயப்பட வேண்டாம். உங்கள் சாகசங் களை நிறுத்த வேண்டாம் என்று கூறினார்கள். எனவே, அவர்களது சாகச விளையாட்டுக்கள் தொடர்ந்து இடம்பெற்றன. அவற்றைப் பார்த்து நான் சளித்துவிட்டபோது நபியவர்கள் என்னிடம் போதுமா? என்று கேட்டார் கள். நான் ஆம் என்றதும் என்னை வீட்டுக்கு அனுப்பினார்கள்.

இங்கு நடைமுறை சார்ந்த ஒரு ஸுன்னா, விளையாட்டை - பாடலுடன் கூடிய நடிப்பையும் நடனத்தையும்- அங்கீகரித்திருப்பதை நாம் பார்க்கி றோம். சில அறிவிப்புக்களின்படி அவர்கள் பின்வரும் கவிதையைப் பாடியதாகவும் அறிய முடிகிறது. ''இரவு நேரத்தில் திரும்பிச் செல்கின்ற விருந்தா ளியே! அப்துத்தார்களின் குடும்பத்தைக் கடந்து நீ செல்லக் கூடாதா? அவர்களது விருந்தை நாடி அவர்களைக் கடந்து செல்லக்கூடாதா? அவ்வாறு சென்றால் அவர்கள் உன்னை களைப்பைவிட்டும் வறுமையை விட்டும் பாதுகாப்பார்கள்'' என்று பாடியதாகவும் வேறுசில அறிவிப்புக் களில் அந்த ஹபஷி நாட்டவர்கள் நடனமாடினார்கள் என்றும் இன்னும் சில அறிவிப்புக்களில் அவர்கள், ''முஹம்மத் (ஸல்) சிறந்த இறை அடியார்'' என்று கூறிய வண்ணம் நபியவர் களுக்கு முன்னிலையில் நடன மாடினார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.[8]

ஆகுமான பாடல்கள் சில சந்தர்ப்பங்களில் விரும்பத்தக்கவையாகவும் வேண்டப்பட்டவையாகவும் அமைய முடியும் என்பதற்கு ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கும் ஸஹீஹுல் புஹாரியில் பதிவாகியுள்ள மற்றொரு ஹதீஸ் சான்றாக அமைகிறது. அதில் பாடல் பாடும்படி கோரிக்கை விடுப்பவராக, தூண்டுபவராக நபியவர்களே இருக்கிறார்கள். ''முஃமின்களின் தாய் ஆயிஷா (றழி) அறிவிப்பதாவது அன்ஸாரித் தோழர் ஒருவருக்கு திருமணம் நடைபெற்றது. அப்போது நபியவர்கள் ஆயிஷா (றழி) அவர்களிடம் 'ஆயிஷாவே! உங்களிடம் கேளிக்கைகள் ஏதும் இல்லையா? ஏனெனில், அன்ஸாரிகள் கேளிக்கைகளை பெரிதும் விரும்புவார்கள்' என்று கேட்டார்கள்.

இதே ஹதீஸை இமாம் நஸாஈ (றஹ்) அவர்கள் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்கள். நபியவர்கள் கூறினார்கள்: ''ஆயிஷாவே மணப் பெண்ணை அன்பளிப்புச் செய்துவிட்டீர்கள். அவளோடு சேர்த்து 'நாங்கள் வந்து விட்டோம், நாங்கள் வந்துவிட்டோம். எங்களுக்கும் உங்களுக்கும் வாழ்த்துக்கள் உண்டாகட்டும்' என்று பாடும் நபர்களை நீங்கள் அனுப்பக் கூடாதா?''

இங்கே நபியவர்கள் ஆகுமான பாடலுக்குத் தூண்டுதல் வழங்கி அதற்கான வார்த்தைகளையும் முன்மொழிகிறார்கள். உரிய பொருத்தமான தருணங்களில் பாடல் பாடும்படி தூண்டுகின்ற இதேபோன்ற மற்றொரு ஹதீஸை இமாம் அஹ்மத் (றஹ்) அவர்கள் தனது முஸ்னதிலும் பதிவு செய்துள்ளார்கள். அப்துல்லாஹ் பின் உமைர் அல்லது உமைரா (றழி) அறிவிப்பதாவது, அபூலஹபின் மகளின் கணவன் என்னிடம் பின்வருமாறு கூறினார்: நான் அபூலஹபின் மகளைத் திருமணம் முடித்தபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்து கேளிக்கைகள் ஏதும் உண்டா என்று கேட்டார்கள்''

இமாம் நஸாஈ (றஹ்) அவர்கள் பதிவு செய்துள்ள மற்றொரு ஹதீஸில் அஸ்ஸாஇப் பின் யஸீத் (றழி) அவர்கள் அறிவிப்பதாவது நபியவர்களிடம் ஒரு பெண் வந்தாள். அப்போது நபியவர்கள் ஆயிஷா (றழி) அவர்களைப் பார்த்து ஆயிஷாவே இது யார் என்று உங்களுக்குத் தெரியுமா? எனக் கேட்டார்கள். அதற்கு ஆயிஷா (றழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே எனக்குத் தெரியாது என்றார்கள். பின் நபியவர்கள் இப்பெண் ஒரு பாடகி. நீங்கள் விரும்பினால் அவர் உங்களுக்குப் பாடிக்காட்டுவார் என்றார்கள். பின்னர் அப்பெண் ஒருபாடலைப் பாடிக் காட்டினாள்.

அந்நிய ஆண்களுக்காகவும், பெண்களுக்காகவும் பாடல் இசைப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்த ஒரு பெண்ணை நபியவர்கள் ஆயிஷா (றழி) அவர்களுக்கு அறிமுகப்படுத்தி அவளது பாடலையும் கேட்கச் செய்திருக்

கின்றார்கள். அப்பெண்ணும் நபியவர்களுக்கு முன்னிலையில் பாடிக் காட்டியிருக்கிறாள். எனவே, பாடல் இசைப்பது ஆகுமானது விரும்பத்தக் கது என்ற நடைமுறை ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தில் பரவலாக இருந் திருக்கின்றது.

இமாம் நஸாஈ (றஹ்) அறிவிக்கும் மற்றொரு ஹதீஸில் ஆமிர் பின் ஸஃத் (றழி) அவர்கள் கூறுவதாவது: கர்ழா பின் கஃப் (றழி), அபூ மஸ்ஊத் அல் அன்ஸாரி (றழி) ஆகியோரின் வீட்டுக்கு ஒரு திருமண வைபவத்திற் காக நான் அங்கு சென்றிருந்தேன். அப்போது அங்கே சில யுவதிகள் பாடிக் கொண்டிருந்தனர். உடனே நான் அவர்களிடம் ''நீங்கள் இருவரும் நபித் தோழர்கள். அதுமாத்திரமன்றி பத்ர் போரில் கலந்துகொண்டவர்கள். இத் தகையதொரு செயல் (பாடல் இசைத்தல்) உங்களுக்கு முன்னிலையில் நடக்க அனுமதிப்பதா? என்று கேட்டேன். அப்போது அவ்விருவரும் நீங்கள் விரும்பினால் உட்கார்ந்து பாடலைக் கேளுங்கள் இல்லையென்றால் இங்கிருந்து சென்றுவிடுங்கள். திருமண வைபவங்களின்போது பாடல் இசைக்க எமக்கு சலுகை தரப்பட்டிருக்கிறது எனக் கூறினார்கள். எனவே, பத்ர் போரில் கலந்து கொண்ட மூத்த ஸஹாபாக்கள் ஆகுமான, ஹலாலான பாடல்களைக் கேட்டு மகிழும் நடைமுறையை கையாண்டிருக்கிறார்கள்.

இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்கள் பாடல்களை அவற்றின் வார்த் தைகளையும் நோக்கங்களையும், விளைவுகளையும் அடிப்படையாகக் கொண்டு ஹலாலானவை, ஹராமானவையென வகைப்படுத்தியிருக் கிறார்கள். அப்துல்லாஹ் பின் புரைதா அல் அஸ்லமி (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''உமர் (றழி) அவர்கள் ஓர் இரவில் நகர்ச் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது ஒரு பெண் ''நான் அருந்த மதுவைப் பெற்றுக்கொள்ள ஏதும் வழியிருக்கிறதா? இல்லையென்றால் நஸ்ர் பின் ஹஜ்ஜாஜை அடைந்துகொள்ள ஏதும் வழியிருக்கிறதா?'' என்று பாடிக்கொண்டிருந்தாள். காலையில் உமர் (றழி) அவர்கள் இந்த நஸ்ர் பின் ஹஜ்ஜாஜைப் பற்றி விசாரித்தார்கள். போர்க்களங்களுக்குச் சென்றிருக்கும் போராளிகளின் மனைவியரை கவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஓர் அழகிய வாலிபனே அவன் என்று தெரியவந்தது. பின்னர் உமர் (றழி) அவர்கள் அவ்வாலிபனை சீர்திருத்தி பஸராவில் இருந்த படை முகாமுக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்தார்கள்.[9]

எனவே, பாடல்கள் தவறான நோக்கங்களையும் பிழையான வார்த்தைப் பிரயோகங்களையும் கொண்டிருக்குமாயின் அவை ஹராமானவையாக ஆகிவிடும் என்பதையே உமர் (றழி) அவர்களின் இந்நடவடிக்கை உணர்த்துகிறது. பாடல் குறித்த உமர் (றழி) அவர்களின் மற்றொரு

நிலைப்பாட்டை இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கிறார்கள். ''ஒரு குழுவினர் உமர் (றழி) அவர்களிடம் வந்து முஃமின்களின் தலைவரே! எமக்குத் தொழுகை நடாத்தும் இமாம் தொழுகை முடிந்தபின்னர் பாடல் இசைக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார் என முறையிட்டனர். அப்போது உமர் (றழி) அவர்கள் யார் அந்த இமாம் என்று கேட்டார்கள். அவரது பெயர் சொல்லப்பட்டதும் என்னை அவரிடம் அழைத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டு நபித்தோழர்கள் சிலரை அழைத்துக்கொண்டு அம்மனிதரிடம் சென்றார்கள். மஸ்ஜிதில் அமர்ந்திருந்த அவர் உமர் (றழி) அவர்களைக் கண்டதும் எழுந்து வரவேற்றார். பின்னர் அவர்களிடையே இடம்பெற்ற உரையாடல் வருமாறு:

அம்மனிதர்: முஃமின்களின் தலைவரே! என்ன தேவைக்காக இங்கு வந்தீர்கள்? எமது தேவையொன்றை நிறைவேற்றி வைப்பதற்கென்றால் நாங்கள் உங்களிடம் வருவதே மிகவும் பொருத்தமானது. உங்களது தேவையொன்றுக்காகவெனில் அதற்கும் கூட நாங்களே உங்களிடம் வர வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் தூதரின் பிரதிநிதி என்ற வகையில் தாங்கள் எங்களுடைய கௌரவத்திற்குரியவராக இருக்கின்றீர்கள்.

உமர் (றழி): உங்களைப் பற்றி ஒரு தீய செய்தி என்னிடம் வந்திருக்கிறது.

அம்மனிதர்: முஃமின்களின் தலைவரே! என்ன அது?

உமர் (றழி): வணக்க வழிபாடுகளில் ஈடுபடும்போது உமக்குப் பைத்தியம் பிடிக்கிறதா? (தொழுகை முடிந்ததும் நீர் பாடல் பாடுகிறீராமே?)

அம்மனிதர்: இல்லை, முஃமின்களின் தலைவரே! அது எனக்கு நானே செய்துகொள்ளும் உபதேசம்.

உமர் (றழி): அதனை எனக்குச் சொல்லிக்காட்டுங்கள். அது நல்ல வார்த்தைகளால் ஆனதாக இருந்தால் நானும் உங்களோடு சேர்ந்து அதனைச் சொல்வேன். அது தீயதாக இருந்தால் அதனைத் தடைச் செய்வேன்.

அம்மனிதர் பாடலைப் பாடிக் காட்டினார்.

அதன் பொருள் வருமாறு: உள்ளம், அதனை நான் கண்டிக்கும் போதெல்லாம் பாவங்களை வெறுக்கும் போராட்டத்தில் களைப்படைவதையே அது விரும்புகிறது.

காலமெல்லாம் கேளிக்கைகளில் மூழ்கியிருப்பதில் அது பிடிவாதமாய் இருக்கிறது.

அது என்னை குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது.

ஏய் தீமையின் நண்பனே இந்த சிறுபராயம் என்ன?

ஆயுள் இவ்வாறு விளையாட்டிலேயே கழிந்துவிட்டது

இளமையும் என்னை மறந்து சென்றுவிட்டது.

அதில் எமது நோக்கத்தை நாம் நிறைவு செய்துகொள்ளவில்லை.

அதன்பிறகு அழிவைத் தவிர வேறெதனையும் நான் எதிர்பார்க்க வில்லை.

எனது தேவைகளை நரை குறுக்கிவிட்டது.

ஓ எனது உள்ளமே! ஒருபோதும் நான் அதனை அழகாக அடக்கமாகக் காணவில்லை.

உள்ளமே! நீ அப்படி இருக்கவில்லை. மனோ இச்சையுந்தான்.

உன் எஜமானனைப் பற்றிச் சிந்தித்து அவனைப் பயந்து அஞ்சிக் கொள்!

பின்னர் உமர் (றழி) அவர்களும் உள்ளமே நீ அப்படி இருக்கவில்லை. மனோஇச்சையும்தான் உன் எஜமானனைப் பற்றிச் சிந்தித்து அவனைப் பயந்து அஞ்சிக்கொள் என்று பாடிவிட்டு இப்பாடலைப் பாடுபவர் இப்படியே பாடட்டும் என்று கூறினார்கள்.[10]

இங்கு நாம் தொழுகை நடாத்துகின்ற ஒரு இமாம் தொழுது முடிந்ததும் நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தி பாடல் பாடுவதையும் உமர் (றழி) மஸ்ஜிதில் அப்பாடலை செவிமடுத்து சேர்ந்து பாடுவதையும் அதனைப் பாட விரும்புகிறவர்கள் அப்படியே பாடும்படி பரிந்துரை செய்வதையும் பார்க்கிறோம். இங்கு உமர் (றழி) அவர்கள், ''அது நல்ல வார்த்தைகளால் ஆனதாக இருந்தால் நானும் உங்களோடு சேர்ந்து அதனைச் சொல்வேன். அது தீயதாக இருந்தால் அதனைத் தடைச் செய்வேன் என்ற விதியின் மூலம் ஆகுமான பாடலுக்கும் தடைசெய்யப்பட்ட பாடலுக்குமான அளவுகோளை தெளிவுபடுத்தியிருப்பதைப் புரிந்துகொள்கிறோம்.

பாடல் குறித்த நபி வழிகாட்டல் முன்மாதிரி (ஸுன்னா) இதுதான். நபித்துவமும் பின்னர் நல்லாட்சியும் (கிலாபத்துர் ராஷிதா) நிலவிய சமூகத்தின் நடவடிக்கைகள் இந்த அடிப்படையில்தான் அமைந்திருந்தன. ஆகுமான பாடல்கள், கேளிக்கைகள் மூலம் மனித உள்ளத்தை ஆறுதல் படுத்துகின்ற அவனது உணர்வுகளுக்குத் தீனி போடுகின்ற, மறைந்துள்ள அவனது ஆற்றல்களுக்கு புத்துணர்ச்சியூட்டுகின்ற இந்த அம்சம் அந்த ஆரம்பகால இஸ்லாமிய சமூகத்தில் நிலை பெற்றிருந்தது.

எனவே, பாடலானது அடிப்படையில் ஆகுமான, ஹலாலான விடயமாகும். பயன்படுத்தப்படுகின்ற நோக்கங்களைப் பொருத்து அது ஹராமாக மக்ரூஹாக அல்லது ஸுன்னத்தாக அல்லது வாஜிபாக மாறும். உண்மையில் அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்தல் என்ற புனிதப்

போராட்டமும் இத்தகையதே. அது தொடுக்கப்படுகின்ற காரணிகளைப் பொறுத்து ஹராமாக மக்ரூஹாக, ஸுன்னத்தாக, வாஜிபாக மாறும்.

பாடல் என்பது குரலும் சந்தமும் இசையுமாகும். இவற்றின் மூலம் இப்பிரபஞ்சத்தின் அற்புதப் படைப்புக்களில் அல்லாஹ் தாரளமாக ஏற் படுத்தி வைத்திருக்கின்ற அழகுகளிலிருந்து இனிமையானதும் இசைவா னதுமான அழகிய ஓசைகளை மனிதன் பிரதி பண்ணுகின்றான். அவ்வளவே.

## அப்படியாயின் கருத்து முரண்பாடு ஏன்?

விடயம் இவ்வாறு இருக்கும்போது இஸ்லாமிய வரலாற்று நெடுகிலும் இஸ்லாமிய சிந்தனைப் பரப்பில் பாடல் குறித்து பரவலாக நிலவுகின்ற கருத்து முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன?

அது குறித்து இரண்டு விடயங்களை முன்வைக்க முடியும்.

1. வெறுப்புக்குரிய அல்லது தடைசெய்யப்பட்ட கருத்துக்களைக் கொண்ட பாடல்களை தடைசெய்யும் மார்க்கத் தீர்ப்புக்களை (பத்வா) அடிப்படையாகக் கொண்டு சிலர், அனைத்து வகையான பாடல்களுக்கும் அதே தீர்ப்புக்களை பொதுவாக வழங்க முற்பட்டமை.

2. பாடலையும் இசைக்கருவிகளையும் தடைசெய்து வந்துள்ள குறிப் பிட்ட 19 ஹதீஸ்களை அப்படியே அறிவிப்புச் செய்தமையும் அவை அனைத்துமே ஹதீஸ் துறை அறிஞர்களின் அளவீடுகளின்படி பலவீன மானவை, அவற்றில் ஒன்றுகூட அறிவிப்பாளர்களில் ஒருவரை அல்லது பலரைப் பற்றி விமர்சிக்கப்படாமல் இல்லை என்பதை கவனிக்கத் தவறியமையும்.

இந்நூலில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள இமாம் புஹாரி (றஹ்) அவர்களின் நிபந்தனைகளுக்கமைய ஸஹீஹான ஹதீஸ்களுக்கு, குறிப் பிட்ட இந்த 19 ஹதீஸ்களும் முரண்படுகின்றமையும் கவனத்திற்கொள்ளத் தக்கதாகும்.

மேலும் ஸூறது லுக்மானின் 6ஆம் வசனத்தில் வருகின்ற 'லஹ்வு' என்ற சொல்லுக்கு மிகைப்படுத்தப்பட்ட விளக்கத்தைக் கொடுத்தமையும்

இதற்கான மற்றொரு காரணமாகும். (இவர்கள் தவிர) மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் - அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுக்கவும், அல்லாஹ்வின் பாதையைப் பரிகாசமாக்கிக் கொள்ளவும் (முயல்கிறார்கள்) இத்தகையோருக்கு இழிவுதரும் வேதனையுண்டு. (லுக்மான்: 06)

இத்தகைய காரணங்களால்தான் பாடல் ஒட்டுமொத்தமாகவே ஹராம் என்ற பிழையான முடிவுக்கு சிலர் வந்தனர். ஆனால், பாடலானது தன்னளவில் ஆகுமானது; ஹலாலானது. அது பாடப்படுகின்ற சந்தர்ப்ப சூழல், நோக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அது ஹராமானதாக அல்லது மக்ரூஹானதாக, சுன்னத்தானதாக, அல்லது கடமையானதாக மாறுகின்றது என்பதே இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

**ஃபத்வாக்கள் - மார்க்கத் தீர்ப்புகள்**

பாடலுக்கான மார்க்கத்தீர்ப்பு குறித்து ஒரே காலத்தில், ஒரே நகரத்தில் வாழ்ந்த ஒரே மத்ஹபைப் பின்பற்றிய சட்டவியல் அறிஞர்கள் (புகஹாக்கள்) ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். ஏன், குறித்த ஓர் அறிஞர் (பகீஹ்) பாடல் ஆகுமானது, வெறுக்கத்தக்கது, தடைசெய்யப்பட்டது என ஒன்றுக்கொன்று முரண்பட்ட வித்தியாசமான பத்வாக்களை வெளியிட்டிருப்பதையும் நாம் காண்கிறோம். அந்த வகையில்,

1. இமாம் அபூஹனீபா (றஹ்) (ஹிஜ்ரி 80-150/கி.பி. 699-767) பாடல் மக்ரூஹாகும் என்ற கருத்தைக் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.
2. அதேநேரம் நீதிபதியும் சட்ட அறிஞரும், ஹதீஸ் வல்லுனருமான இமாம் உபைதுல்லாஹ் பின் அல்ஹஸன் அல் அன்பரீ (றஹ்) (ஹி: 105-168/கி.பி 723-785) பாடல் ஆகுமானது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.
3. இமாம் மாலிக் பின் அனஸ் (றஹ்) (ஹி: 93-179/கி.பி. 712-795) பாடல் ஹராம் என்ற கருத்தைக் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.
4. அதேநேரம் மதீனாவின் நீதிபதியாகவும் ஹதீஸ் வல்லுனராகவும் இருந்த இப்றாஹீம் பின் ஸஃத் அஸ்ஸுஹ்ரி (றஹ்) (ஹி: 183 / கி.பி. 799) அது ஆகுமானது என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.
5. இமாம் முஹம்மத் பின் இத்ரீஸ் அஷ் ஷாபிஈ (றஹ்) (ஹி: 150-204/கி.பி 767-820) பாடலானது பொய்மைக்கு நிகரான வெறுக்கத்தக்க விடயம் என்ற கருத்தைக் கொண்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

6. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்) (ஹி: 164-241/கி.பி. 780-855) பாடல் குறித்து ஹலால், மக்ரூஹ், ஹராம் ஆகிய மூன்று கருத்துக்களை முன் வைத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடலில் ஒருவகைக்கு, ஒரு இமாம் அல்லது ஒரே நகரத்தில், ஒரே காலத்தில் வாழ்ந்த ஒரே மத்ஹபைப் பின்பற்றிய பல இமாம்கள் ஒன்றுக் கொன்று முரணான பத்வாக்களை வெளியிடுவது ஏற்புடையதல்ல. எனவே, பத்வாக்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, வித்தியாசப்பட்டு அமைந்திருப்பதற்கான காரணம் புகஹாக்கள் தம்மிடம் பத்வாக் கேட்கப் பட்ட வித்தியாசமான வகைகளைச் சார்ந்த பாடல்களுக்கு வித்தியாசமான பத்வாக்களை வழங்கினார்கள் என்பதாகும். பாடல் ஹலாலானது என்ற பத்வா ஆகுமான, அங்கீகரிக்கத்தக்க பாடல்கள் குறித்து வழங்கப்பட்ட தாகும். அது ஹராம் என்ற பத்வா ஹராமான கருத்துக்களைத் தாங்கிய (உதா ரணமாக ஆபாசம், இணைவைத்தல்) பாடல்களுக்கானது. அது மக்ரூஹா னது என்ற பத்வா வெறுக்கத்தக்க கருத்துக்களை, பின்னணியைக் கொண்ட பாடல்களுக்கானது என்று சிந்திப்பதே அறிவார்ந்ததாகும். இக்கருத்துக்கு பின்வருவன சான்றாகும்.

இமாம் மாலிக் (றஹ்) அவர்கள் திட்டவட்டமாகவே ஹராமான பாடல் கள் குறித்தே ஹராம் என்ற பத்வாவை வழங்கினார்கள். ஏனெனில், மதீனா வில் சில தீயவர்களால் உருவாக்கப்பட்ட குறித்த ஒருவகைப் பாடல் குறித்து வினவப்பட்டபோதே இமாமவர்கள் மேற்படி பத்வாவை வழங்கினார்கள். அவர்களுடைய பத்வாவில் 'இதனை எங்களில் உள்ள தீயவர்களே பாடுவர்' என்ற வசனமும் இணைந்துள்ளது.

இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ள 'பொய்மைக்கு நிகரான வெறுக்கத்தக்க' வகையைச் சார்ந்த பாடல் எது என்பது பற்றியும் அந்த பத்வா வெளியிடப்பட்ட பின்னணி பற்றியும் ஷைகுல் இஸ்லாம் இமாம் இப்னு தைமியா (றஹ்) (ஹி:661-728/கி.பி. 1263-1328) பின்வரு மாறு விளக்குகிறார். ''இமாம் ஷாபிஈ (றஹ்) பக்தாதிலிருந்து எகிப்துக்குச் சென்ற பின்னர் பக்தாதில் நாஸ்திகர்கள் (ஸிந்தீக்குகள்) உருவாக்கியிருந்த ''அத்தஃக்பீர்'' எனப்படும் ஒருவகைப் பாடல் பற்றி கேள்விப்பட்டார்கள். அல்குர்ஆனை விட்டும் மக்களைத் திசை திருப்பிவிடும் நோக்கில் நாஸ்தி கர்கள் அதனை உருவாக்கியிருந்தனர். இதுபற்றிய இமாம் இப்னு தைமியா (றஹ்) அவர்களின் நேரடிக் கூற்று வருமாறு: 'அல்குர்ஆனை விட்டும் மக்களைத் திசை திருப்பிவிடுவதற்காக ஸிந்தீக்குகள் உருவாக்கிய அத்தஃக்பீர் எனப் படும் ஒரு பாடல் வகையை நான் பக்தாதில் கண்டேன்' என இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்கள் கூறினார்கள்.

மேற்படி அத்தஃக்பீர் எனப்படும் பாடல் வகையையே இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்) அவர்கள் மக்ரூஹ் என்று கூறினார்கள். இதனையும் எங்களுக்கு விளக்குபவர் இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்களே. இதுபற்றிய இமாம் இப்னு தைமியா அவர்களின் கூற்று வருமாறு: 'இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்) அவர்களிடம் பக்தாதில் வைத்து இந்த அத்தஃக்பீர் எனும் பாடல்வகை பற்றி வினவப்பட்டபோது 'நான் அதனை வெறுக்கிறேன். அது நூதனமான (பித்அத்) ஒன்று. இஸ்லாத்தின் ஆரம்பம் முதல் முஸ்லிம்கள் அறிந்திருந்த பாடல்வகைகளைச் சார்ந்த பாடல் அல்ல அது' என்று கூறினார்கள்.[11]

எனவே, பாடல் குறித்து ஹலால், மக்ரூஹ், ஹராம் என பத்வாக்கள் வித்தியாசப்படுவதற்கான காரணம் அதன் வகைகள் வித்தியாசப்படுவதே ஆகும். அதாவது, பாடலானது அடிப்படையில் ஹலாலானதாகும். ஆகுமாக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்களையும்போல அது அதன் நோக்கங்கள், அதனோடு இணைகின்ற பேச்சு (குரல்), சந்தம், இசை ஆகியவற்றைப் பொறுத்து ஹராமானதாக அல்லது மக்ரூஹானதாக மாறும். பாடலின் அனைத்து வகைகளும், வடிவங்களும் பொதுவாக ஆகுமானதோ அல்லது பொதுவாகவே ஹராமானதோ அல்ல. உண்மையில் அது குரலும் சந்தமும் இசையுமாகும். அவற்றில் நல்லவை நல்லவையாகும். மோசமானவை மோசமானவையாகும். இந்த அளவுகோளை ஏற்படுத்தியவர்கள் கலீபா உமர் (றழி) ஆவார்கள்.

அதாவது மக்களுக்குத் தொழுகை நடத்திய ஒரு இமாம் தொழுகை முடிந்ததும் ஒரு பாடலைப் பாடும் வழமையைக் கொண்டிருக்கிறார் எனக் கேள்விப்பட்டு அங்கு சென்று அந்த இமாமிடம் அதனை எனக்குப் பாடிக்காட்டுங்கள். அது நல்லதாக இருந்தால் நானும் உம்மோடு சேர்ந்து பாடுவேன். அல்லது தீயதாக இருந்தால் அதனை நான் தடை செய்வேன் எனக் கூறினார்கள். கலீபா அப்பாடலை செவியுற்ற பின்னர் அது நல்லதாக இருப்பதைக் கண்டு அவர்களும் சேர்ந்து பாடியதோடு இதனைப் பாடுபவர்கள் இவ்விதமே பாடட்டும் என்று பரிந்துரையும் செய்தார்கள். என்றாலும் பாடல் குறித்த வித்தியாசமான பல பத்வாக்களில் ஒன்றை மாத்திரம் பிரித்தெடுத்து அதனை பொதுவான ஏக பத்வாவாக ஆக்கிவிடுவதும் பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்ப சூழல்களையும் அவற்றின் வசனங்கள் தரும் கருத்துக்களையும் பொருட்படுத்தாமல் விடுவதும்தான் புகஹாக்களின் கருத்துக்களை விகாரப்படுத்துகிறது.

**பாடல் ஹராம் என்ற கருத்தைத் தரும் ஹதீஸ்கள் (அறிவிப்புக்கள்)**

*பாடலும் இசைக்கருவிகளும் ஹராம் என அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் அறிவிப்புக்களும் - இல் முல்ஜரஹ் வத்தஃதீல் (ஹதீஸ் திறனாய்வுக் கலை) அளவீடுகளின்படியும் அறிவிப்புக்களின் நம்பகத்தன்மையை அறிந்துகொள்வதற்கான ஏனைய அடிப்படைகளின்படியும் - குறையுள்ளவை, விமர்சனத்திற்குரியவை. அவற்றில் ஒரு ஹதீஸ்கூட ஸஹீஹானதல்ல என்பது உறுதியானதாகும். அவ்வாறிருந்தும்கூட ஹதீஸ் துறை பற்றிய, ஒரு ஹதீஸ் ஸஹீஹ் என்பதற்கான அளவீடுகள் பற்றிய அறிவற்றவர்கள் இந்த ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பரப்பியதோடு அவற்றைப் பயன்படுத்தி பத்வாக்களையும் வெளியிட்டனர். இத்தகையவர்களைப் பற்றி இமாம் அல்ஹாபில் இப்னுல் கைஸரானி அபுல் ஃபழ்ல் முஹம்மத் பின் தாஹிர் (றஹ்) (ஹி: 448-507/கி.பி. 1056-1113) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.**

*'பாடல் கூடாது, தடைசெய்யப்பட்டது என்ற கருத்தைக் கொண்டிருந்தவர்கள் ஹதீஸ்துறை பற்றிய அறிவில்லாத காரணத்தால் இந்த ஹதீஸ்களை ஆதாரமாக எடுத்துக் கொண்டனர். ஏதேனும் ஒரு புத்தகத்தில் ஒரு ஹதீஸ் எழுதப்பட்டிருந்தால் இவர்கள் அதனை தமக்கான மத்ஹபாக ஆக்கிக் கொண்டு எதிர்க்கருத்துக் கொண்டவர்களோடு விவாதிக்க ஆரம்பித்துவிடுவர். இது மிகப்பெரிய தவறாகும். பாரதூரமான அறியாமையாகும்.''*(12)

*ஹதீஸ் ஆய்வுத்துறை முக்கியஸ்தரும் ழாஹிரி மத்ஹபைச் சார்ந்தவருமான இமாம் இப்னு ஹஸ்ம் அல் அந்தலூஸி (றஹ்) (ஹி: 384-456/ கி.பி.994-1064) ''தன்னுடைய ரிஸாலதுன் பில் ஃகினா அல் முல்ஹி அ முபாஹுன் ஹுவ அம் மக்ரூஹுன்?'' (செவிக்கினிய பாடல்கள் ஆகுமானவையா அல்லது தடைசெய்யப்பட்டவையா?) என்ற நூலிலும் அல் முஹல்லா என்ற நூலிலும் மேற்படி ஹதீஸ்கள் அனைத்தினதும் அறிவிப்பாளர் வரிசைகள் (இஸ்னாத்) குறையுடையவை, ஏற்கத்தக்கவையல்ல என்பதை விரிவாக விளக்கியுள்ளார்.*

*மீஸானுல் இஃதிதால் எனும் நூலின் ஆசிரியர் அல் ஹாபிழ் அத்-தஹபி (றஹ்) (ஹி: 683-748/கி.பி. 1274-1348), லிஸானுல் மீஸான் எனும் நூலின் ஆசிரியர் இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (றஹ்) (ஹி: 773-823/ கி.பி. 1372-1449) போன்ற ஹதீஸ் திறனாய்வுக் கலை அறிஞர்களும்*

---

★ (இவர் தஸ்கிரதுல் மவ்ழூஆத், அத்ராபுல் குதுபிஸ் ஸித்தா, அல் ஜம்உ பைனகிதாபயில் கலாபாதி வல் அஸ்ஃப ஹானி ஃபீ ரிஜாலிஸ் ஸஹீஹைன் ஆகிய நூல்களின் ஆசிரியராவார்)

இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்களின் மேற்படி விமர்சனங்களை ஏற்று அங்கீகரித்திருக்கின்றனர்.

இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்கள் இந்த ஹதீஸ்களின் இஸ்னாத் களைப் பற்றி கூறுவதாவது:

1. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (றழி) அறிவிப்பதாக வந்துள்ள ''நிச்சயமாக அல்லாஹ் பாடலையும் அதனைப் பாடி விற்பதை யும் அதன் பெறுமதியையும், அதனை கற்றுக் கொடுப்பதையும், அதனை செவிமடுப்பதையும் தடைசெய்திருக்கிறான் (ஹராம்)'' என்ற இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் ஸஈத் பின் ரஸீன் என்பவர் தனது சகோதரரிடம் இருந்து அறிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவ்விருவரும் யார் என அறியப்படவில்லை.

2. நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலி பின் அபீதாலிப் (றழி) அவர்களி டம் இருந்து முஹம்மத் பின் அல்ஹனபிய்யா என்பவர் அறிவித்தாக வந் துள்ள, ''எனது சமூகம் 15 பண்புகளைக் கடைப்பிடித்தால் அவர்கள்மீது அல்லாஹ்வின் சோதனை இறங்கும். அவற்றுள் ஒன்றுதான் பாடகிகளை யும் இசைக் கருவிகளையும் எடுத்துக் கொள்வது'' என்ற இந்த ஹதீஸின், யஹ்யா பின் ஸஈத் என்பவர் வரையான அனைத்து அறிவிப்பாளர்களும் யார் என அறியப்படாதவர்கள். மேலும் இந்த யஹ்யா பின் ஸஈத் என்பவர் முஹம்மத் பின் ஹனபிய்யாவை சந்திக்கவோ அவரிடம் இருந்து ஒரு வார்த்தையையேனும் அறிவிக்கவோ இல்லை.

3. ''அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் 9 விடயங்களை தடுத்தார்கள். அவற்றில் ஒன்றுதான் பாடலாகும்'' என முஆவியா (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள ஹதீஸின் அறிவிப்பாளர்களில் கைஸான் என்ற ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆனால், அவர் யார் என அறியப்படவில்லை. மேலும், இவ்வறிவிப்பாளர் தொடரில் வந்துள்ள முஹம்மத் பின் முஹாஜிர் என்பவர் பலவீனமானவராவார். அத்தோடு இந்த 'ஹதீஸில் கவிதையும் தடை செய்யப்பட்டதாகும்' என்று கூறப்பட் டுள்ளது. ஆனால், கவிதை அனுமதிக்கப்பட்டது என்பதே முஸ்லிம் சமூகத்தின் ஏகோபித்த (இஜ்மாவான) கருத்தாகும். நபித்துவ காலத்தில் இருந்தே இஸ்லாமிய அழைப்புப் பணியின் சாதனங்களில் ஒன்றாக கவிதை இருந்திருக்கிறது.

4. ஷெய்க் ஷஹ்த் பின் மஸ்ஊதிடம் இருந்து சலாம் பின் மிஸ்கீன் அறிவிக்கும், ''பாடல் உள்ளத்தில் ஏற்படும் நயவஞ்சகமாகும்'' என்ற ஹதீ ஸின் அறிவிப்பாளர்களில் பெயர் குறிப்பிடப்படாத ஓர் ஷெய்க் இருக்கி றார். அவரை யாருக்குமே தெரியாது.

5. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள, ''பாடல்களை கற்றுக் கொடுப்பதும் அவற்றை விலைக்கு வாங்குவதும் விற்பனை செய்வதும், அவற்றை எடுத் துக் கொள்வதும் அவற்றின் பெறுமதியும் தடைசெய்யப்பட்டதாகும். (ஹறாம்). இதுபற்றி அல்லாஹ் அல்குர்ஆனிலே பின்வருமாறு கூறியிருக்கின்றான்: ''அல்லாஹ்வின் பாதையைவிட்டும் மக்களை வழிகெடுப்பதற்காக சிலர் வீண் வார்த்தைகளை விலைக்கு வாங்குகின்றனர். (லுக்மான்: 6)

எனது உயிர் யார் கைவசம் இருக்கிறதோ அந்த அல்லாஹ்வின் மீது ஆணையாக ஒரு மனிதர் பாடல் பாடுவதற்காக தனது சப்தத்தை உயர்த்தும் போது இரண்டு ஷைத்தான்கள் அவனுக்குப் பின்னால் வந்து அவனை இழுத்து தமது கால்களால் அவனது முதுகிலும், நெஞ்சிலும் உதைப்பர். அவன் தனது சப்தத்தை நிறுத்தும்வரை இவ்விதமே செய்துகொண்டிருப்பர்'' என்ற இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் இஸ்மாஈல் பின் அப்பாஸ், அல் காஸிம் ஆகியோர் பலவீனர்களாவர். அத்தோடு பாடல் ஹராம் என்றால் அவ்வாறு பாடல் இசைப்பவர் பாவம் செய்வதையிட்டு மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக ஷைத்தான்கள் ஏன் அவனைத் தாக்க வேண்டும்!?

6,7. -i. அப்துல் மலிக் பின் ஹபீப் அறிவிக்கும், ''பாடல் இசைப்பவனது காதை ஷைத்தான் பிடித்துக் கொள்வான். அவன் பாடுவதை நிறுத்தும் வரை ஷைத்தான் அதனை அசைத்துக் கொண்டிருப்பான்'' என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக வந்துள்ள ஹதீஸும்,

-ii. பாடல்களைக் கற்றுக்கொடுப்பதையும் அவற்றை விலைக்கு வாங்குவதையும் விற்பனை செய்வதையும் அப்பெறுமதியைப் பாவித்துச் சாப்பிடுவதையும் அல்லாஹ் தடைசெய்துள்ளான் (ஹராம்) என நபியவர்கள் கூறியதாக வந்துள்ள ஹதீஸும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும். ஏனெனில், இந்த அப்துல் மலிக் பின் ஹபீப் அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் நிராகரிக்கப்பட வேண்டியவையாக துறை சார்ந்தவர்களால் கருதப்படுகின்றன.

8. இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் அறிவிக்கும் ''எமது சமூகத்தில் ஒரு கூட்டத்தினர் தோன்றுவர். அவர்கள் விபச்சாரத்தையும், பட்டாடைகளையும் மதுவையும் இசைக் கருவிகளையும் ஹலாலாக்கிக் கொள்வர் என்ற ஹதீஸை அவர் 'முஸ்னதாக' (நபியவர்கள் வரை தொடரும் முழுமையான அறிவிப்பாளர்கள் வரிசையைக் கொண்ட ஒரு ஹதீஸாக) அறிவிக்கவில்லை. மாறாக அபூ ஆமிர் அல்லது அபூ மாலிக் என்பவருக்கு ஹிஷாம் பின் அம்மார் கூறியதாகவே அறிவித்திருக்கிறார்; இந்த அபூ ஆமிர் யார் என அறியப்படவில்லை.

இஸ்னாதில் காணப்படுகின்ற இக்குறைபாட்டிற்கு மேலதிகமாக இந்த ஹதீஸானது விபச்சாரத்தையும் மதுவையும் ஹலாலாக்கிக் கொண்டு அவை இடம்பெறுகின்ற சபைகளில் ஒன்றுகூடல்களில் இசைக்கருவி களை இசைத்து அவ்வாறான பெரும்பாவங்களுக்கு துணையாக இசை யைப் பயன்படுத்துவதனையே தடைசெய்வதாகக் கொள்ள வேண்டும். அஃதன்றி இசைக்கருவிகள் மாத்திரம் தனியாக இங்கு நாடப்படவில்லை என்பது கவனத்திற்கொள்ளத்தக்கதாகும்.

9. இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள ''யார் ஒரு பாடகரிடம் அமர்ந்து பாடல் கேட்கி றாரோ, மறுமை நாளில் அவரது காதில் ஈயம் உருக்கி ஊற்றப்படும்'' என்ற ஹதீஸ் மிகவும் பலவீனமானதாகும்.

ஏனெனில், அறியப்படாத அறிவிப்பாளர் குழுவொன்றால் இது அறி விக்கப்பட்டிருக்கிறது. மேலும், இதன் அறிவிப்பாளர்களில் அபூ நுஈம் - உபைத் பின் முஹம்மத் - என்பவரும் ஒருவராவார். அவர் பலவீனரா வார். மேலும் அவர் இப்னுல் முபாரக்கிடமிருந்து அறிவிப்பதாகக் குறிப் பிட்டாலும் அவரைச் சந்திக்கவில்லை. அத்தோடு இதன் அறிவிப்பாளர் களில் மாலிக் என்ற ஒருவர் இருக்கிறார். அவர் மிகவுமே நிராகரிக்கப் பட்ட ஒருவராவார். அவர் இப்னுல் முன்கதிர் என்பவரிடமிருந்து முர்ஸலாகவே* இதனை அறிவித்துள்ளார்.

10. '(இவர்கள் தவிர) மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள் - அவர்கள் அறிவில்லாமல் வீணான பேச்சுக்களை விலைக்கு வாங்கி, (அவற்றால் மக்களை) அல்லாஹ்வின் பாதையிலிருந்து வழி கெடுக்கவும், அல்லாஹ் வின் பாதையைப் பரிகாசமாக்கிக் கொள்ளவும் (முயல்கிறார்கள்) இத்தகை யோருக்கு இழிவுதரும் வேதனையுண்டு.' (லுக்மான்: 6) என்ற அல்குர் ஆன் வசனத்தில் வரும் வீண்பேச்சு என மொழிபெயர்க்கப்படும் 'லஹ்வுல் ஹதீஸ்' என்பதற்கான விளக்கம் பாடல் என்பதாகும் என இப்னு அப்பாஸ் (றழி) கூறியதாக இப்னு ஷஃபான் அறிவிக்கும் ஹதீஸைப் பொறுத்தவரை யில் அவர் அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் மிகவும் பலவீனமானவை என்ற வகையிலேயே நோக்கப்படல் வேண்டும். மேற்படி குர்ஆன் வசனத்தில் 'லஹ்வு' எனும் சொல் தரும் கருத்து பாடல் எனக் கொண்டா லும் அது அனைத்து வகையான பாடல்களையும் குறிக்க மாட்டாது.

---

★ ஒரு தாபிஈ நேரடியாக றஸூலுல்லாஹ்விடமிருந்து கேட்டதாக அறிவிக்கப்பட்ட ஹதீஸ். இதில் ஸஹாபி விடப்பட்டிருப்பார்.

மாறாக இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வின் பாதையைவிட்டும் மக் களை வழிகெடுப்பதற்காகவும் அல்லாஹ்வின் பாதையை பரிகாசமாக எடுத்துக் கொள்வதற்காகவும் உருவாக்கிய பாடல்களையே குறிக்கும். பாடல் என்பதற்காக இவை ஹராமாக்கப்படவில்லை. அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களை வழிகெடுப்பதாலேயே இவை ஹராமாக்கப் பட்டுள்ளன. ஏனெனில், அல்லாஹ்வின் பாதையைவிட்டும் மக்களை வழிகெடுக்கும் அனைத்தும் அவை (வாஜிபான) கடமையானவையாக அல்லது ஸுன்னத்தானவையாக (வரவேற்கத்தக்கவை) -இருந்தாலும்கூட- ஹராமாகும்.

11. இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டதாக அபூ மாலிக் அல் அஷ்அரீ அவர்களிடமிருந்து இப்னு அபி ஷைபா அறிவிக்கும் ''எனது சமூகத்தில் சில மனிதர்கள் மது அருந்துவார்கள். ஆனால், அதனை வேறு பெயரால் அழைப்பார்கள். அவர்களது ஒன்றுகூடல்களில் இசைக்கருவிகள் இசைக்கப்பட்டு பாடல்கள் பாடப்படும். அல்லாஹ் இவர்களை பூமியினுள் சுழிவாங்கச் செய்வான்'' என்ற ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான முஆவியா பின் ஸாலிஹ் பலவீனமானவர். மாலிக் பின் அபீ மர்யம் யாரென்று அறியப்படாதவர்.

இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்களின் இவ்விமர்சனத்திற்கு மேலதிகமாக, இந்த ஹதீஸானது, மது அருந்தப்படும் சபைகளில் அத்தகைய பெரும் பாவத்திற்குத் துணையாக இசைக்கருவிகளையும் பாடல்களையும் பயன்படுத்துவதையே ஹராமாக்கியிருக்கின்றது. இங்கு இசையும் பாடலும் ஹராமாக்கப்பட்டுள்ளதற்கான காரணம் அவை தீய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதே. அஃதன்றி உலக வாழ்வை வளப்படுத்தல் என்ற தனது பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்காக மனிதனுடைய இயலு மையை அதிகரிக்கச் செய்வதற்கும் அவனது ஆற்றல்களை புதுப்பிப்பதற் கும் அவனது உள்ளத்திற்கும் உயிருக்கும் புத்துணர்வூட்டுவதற்கும் அந்த இசையும் பாடலும் பயன்படுத்தப்படுவது தடைசெய்யப்பட்டதல்ல.

12. 'ஒப்பாரி வைக்கின்ற பெண்ணின் சத்தம், பாடல் இசைக்கின்ற பெண்ணின் சத்தம் ஆகிய சபிக்கப்பட்ட இரு சத்தங்களையும் அல்லாஹ் தடுத்திருக்கின்றான்' என்ற ஹதீஸைப் பொறுத்தவரையில் அதனை அறிவித்தவர் யார் என அறியப்படவில்லை.

13. இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக உக்பா பின் ஆமிர் அல் ஜுஹனி அறிவிக்கும் 'அம்பெறிதல், குதிரையைப் பயிற்றுவித்தல், மனிதன் தன் மனைவியோடு கொஞ்சுதல் போன்ற அனுமதிக்கப்பட்ட கேளிக்கை கள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கேளிக்கைகளும் பொய்யானவையாகும்,

அனுமதிக்கப்படாதவையாகும் என்ற ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான அப்துல்லாஹ் பின் ஸைத் இப்னுல் அஸ்ரக் என்பவர் அறியப் படாதவர், இந்த ஹதீஸின் மற்றொரு அறிவிப்பின் அறிவிப்பாளர்களில் ஒருவரான காலித் பின் ஸைத் என்பவரும் அறியப்படாதவராவார்.

அத்தோடு இந்த ஹதீஸானது அனுமதிக்கப்பட்ட கேளிக்கைகள் இந்த மூன்றும் மாத்திரம்தான் என வரையறுக்கவில்லை. அனுமதிக்கப்பட்ட கேளிக்கைகளில் இந்த மூன்றும் அடங்கும் என்ற கருத்தையே தருகிறது. இவ்வகையில் பின்வரும் ஹதீஸ் அனுமதிக்கப்பட்ட கேளிக்கைகள் மூன்று அல்ல நான்கு என தெரிவிப்பதோடு வித்தியாசமான அம்சங்களை முன் வைக்கிறது.

14. அல்லாஹ்வை திக்ரு செய்தல் (ஞாபகப்படுத்தல்) அல்லாத அனைத்து விடயங்களும் வீணான (விளையாட்டான) காரியங்களாகும் (லஇப்). ஆனால், நான்கு விடயங்கள் இவ்வீணான காரியங்களில் அடங்க மாட்டாது. ஒரு மனிதன் தன் மனைவியோடு கொஞ்சுதல், தனது குதிரையைப் பயிற்றுவித்தல், இரு இலக்குகளை வைத்து அவற்றுக்கிடையில் நடந்து பயிற்சிபெறல், நீச்சல் கற்றுக் கொள்ளல் என்பவையே அவையாகும். இந்த ஹதீஸ் தீய நோக்கில் இடைச்செருகல் செய்யப்பட்ட ஒன்றாகும் ஏனெனில், இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான அஸ்ஸுஹ்ரி என்பவர் இப்னு ஷிஹாப் அஸ்ஸுஹ்ரி அல்ல. அப்துர் ரஹ்மான் எனும் பெயர் கொண்ட அறியப்படாத ஒருவராவார்.

இந்த ஹதீஸ் மற்றொரு வழியிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான அப்துல் வஹ்ஹாப் பின் பஹ்த் என்பவர் 'அதாலா' எனும் நேர்மைப் பண்பு அற்றவராவார். (ஹதீஸை ஏற்க முடியாது) மேலும் இந்த ஹதீஸ் (லஇப்) விளையாட்டுத்தான் ஹராம் என்று கூறவும் இல்லை. இந்த அறிவிப்பில் வந்துள்ள 'லஇப்' விளையாட்டு என்பதும் வேறு அறிவிப்புக்களில் வந்துள்ள கேளிக்கைகள் (அஸ்ஸஹ்வு வல் லஹ்வு) என்பனவும் ஹராமாக்கப்பட்டவையல்ல. மாறாக விளையாட்டுக்களில் நான்கு வகைகளுக்கு இந்த ஹதீஸ் விதிவிலக்களிப்பதும் அனுமதிக்கப்பட்ட கேளிக்கைகள் இவை இவைதான் என்று வரையறுத்துச் சொல்லும் நோக்கில் இங்கு சொல்லப்படவில்லை என்பதற்கான ஆதாரமாகும்.

15. இறை தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள, ''ஒரு பாடகியை தன்வசம் கொண்டிருந்த ஒரு மனிதன் மரணித்தால் அவருக்காக தொழுகை நடாத்தாதீர்கள்'' என்ற ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஹாஷிம், உமர் ஆகிய அறியப்படாத இரு

அறிவிப்பாளர்கள் காணப்படுகின்றனர். மேலும் இந்த ஹதீஸை ஆயிஷா (றழி) அவர்களிடமிருந்து அறிவிக்கும் மக்ஹூல் என்பவர் ஆயிஷா (றழி) அவர்களை சந்தித்தவரல்ல.

மேலும் இந்த ஹதீஸ் பாவம் செய்வதனை இறைநிராகரிப்பை (குப்ரை) ஏற்படுத்தும் ஒரு காரணியாகக் காட்டுகிறது. அவ்வகையில் ஒரு பாடகியை அமர்த்திக் கொள்வதானது அவ்வாறு செய்யும் மனிதனை மார்க்கத்திலி ருந்து வெளியேற்றிவிடும் ஒரு செயலாக, அவன் இறந்த பின்னர் அவனுக் காக தொழுகை நடாத்துவதை தடை செய்கின்ற ஒரு காரியமாக காட்டு கின்றது. அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சார்ந்த அனைத்து மத்ஹபுகளும் இக்கருத்துக்கு எதிரானவையாகும்.

16. அப்துல்லாஹ் பின் உமர் (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள ஒரு ஹதீஸ் பின்வருமாறு: ''நபியவர்களிடம் வந்த ஒருவர் அல்லாஹ்வின் தூதரே! எனக்கு ஓர் ஒட்டகை இருக்கிறது. அதில் பயணம் செய்யும்போது அதனை ஓட்டுவதற்காக வேண்டி அதன் லாடத்தின் சத்தத்திற்கேற்ப நான் பாடுவேன் என்றார்கள். அதற்கு நபியவர்கள் சரி என்றார்கள். பின்னர் அம்மனிதர் நான் வேறு பாடல்களைப் பாடமுடியுமா? என்று கேட்டார். உடனே நபியவர்கள் 'அறிந்துகொள், பாடுகின்ற மனிதனது இரு காதுகளும் ஷைத்தானின் கைகளில் இருக்கின்றன. அவன் பாட ஆரம்பித்துவிட்டால் அதனை நிறுத்தும் வரை ஷைத்தான் அவனது காதுகளை பிடித்தசைப்பான்' என்று கூறியதாக வந்துள்ள இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் வரிசையில் ஒருவரான அப்துல் மலிக் மிகவுமே பலவீனமானவர். அல் உம்ரி அஸ்ஸகீர் என்பவர் பலவீனமானவர்.

அத்தோடு இந்த ஹதீஸின் கருத்து சீரற்று, சமநிலையற்று நபியவர்களின் அணியிலக்கணப்பாங்கிற்கு முரணாகக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதா கும். அதாவது ஷைத்தான் பாடல் இசைப்பவனின் காதுகளையன்றி வாயைப் பிடித்துக்கொள்வான் என்று வந்தால்தான் வசனம் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில், மனிதர்கள் பாடுவதற்கு பயன்படுத்தும் உறுப்பு காதுகளன்றி வாயாகும். மேலும் பாடுகின்ற மனிதனோடு ஷைத்தானுக்கு ஏன் கோபம் வர வேண்டும்? பாடுபவனை அமைதிப்படுத்த ஷைத்தான் ஏன் முயல வேண்டும்? என்பதும் சிந்தனைக்குரியதாகும். உண்மையில் இதற்கு மாற்றமான கருத்தே தர்க்க ரீதியாக நியாயமாகும்.

17. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (றழி) அறிவிப்பதாக வந்துள்ள ஒரு ஹதீஸ் பின்வருமாறு, ''கடைசி காலத்தில் எனது சமூகத்தில் ஒரு பிரிவினர் குரங்குகளாகவும் பன்றிகளாகவும் உருமாற்றப்படுவர்'' என நபி (ஸல்) கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே!

அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் இல்லை. நாங்கள் அல்லாஹ்வின் தூதர் என சாட்சியம் கூறும் நிலையிலுமா? என ஸஹாபாக்கள் கேட்டனர். அதற்கு நபியவர்கள்: ''ஆம். அதுமாத்திரமல்ல அவர்கள் தொழுது, நோன்பு நோற்று ஹஜ்ஜைக் கூடச் செய்வர்'' எனக் கூறினார்கள். அப் போது ஸஹாபாக்கள், அவர்களுக்கு ஏன் இந்த நிலைமை ஏற்படுகின்றது? என வினவினர். அதற்கு நபியவர்கள் கூறினார்கள்: ''அவர்கள் இசைக் கருவிகளையும் பாடகிகளையும், ரபான்களையும் எடுத்துக் கொள்வதோடு மதுபானத்தையும் அருந்துவர். இவ்வாறான கேளிக்கைகளிலும் மது அருந்துவதிலும் அவர்கள் தமது இரவுகளைக் கழிப்பர். அதன் காரணமாக காலையில் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாறிவிடுவர்.'' இந்த ஹதீஸ் பெயர் குறிப்பிடப்படாத யார் என்று அறியப்படாத ஒருவரால் அறிவிக்கப்பட்டதாகும்.

இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்களின் இந்த விமர்சனத்திற்கு மேலதிகமாக, இந்த ஹதீஸின் உள்ளடக்கம் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் உறுதியான அடிப்படைகளோடு முரண்படுகிறது. ஏனெனில், இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் மனிதனது ஈமானையும் நற்செயல்களையும் பாழ்படுத்தி விடுகின்றவை, இணைவைப்பதும் (ஷிர்க்) இறை நிராகரிப்பும் (குப்ர்) மதம் மாறுவதும் (ரித்தத்) அன்றி பாவச் செயல் களில் ஈடுபடுவது அல்ல. இந்த ஹதீஸின் வசனங்களில் கவனயீனத்துடன் பொய்யுரைத்தல் (இட்டுக்கட்டல்) நிகழ்ந்திருப்பது தெரிகிறது. ஏனெனில், இந்த ஹதீஸானது, ரபான்களும் ஹராமானவை என்று கூறுகிறது. ஆனால், ரபான்களைப் பயன்படுத்துவது ஆகுமானது (ஹலால்) என்பது இஜ்மா வான முடிவாகும். ஏனைய இசைக் கருவிகள் ஹராம் என்று கூறுபவர்கள் கூட ரபான் ஹலால் என்றே கூறுகின்றனர்.

இறுதியாக இந்த அறிவிப்பானது இரவில் தொடங்கி காலைவரை நீடிக் கின்ற மது அருந்தும் சபைகளில் இசைக் கருவிகளையும் பாடல்களையும் ரபான்களையும் ஈடுபடுத்துவதையே குறிப்பிடுகின்றது. எனவே, இங்கும் இசை ஹராமாக்கப்பட்டிருப்பதற்கான காரணம் அது பயன்படுத்துகின்ற நோக்கங்கள், அது ஈடுபடுத்தப்படுகின்ற பணிகள் என்பனவாகும். அவ்வா றன்றி இசை தன்னளவில் ஹராமானதல்ல.

18. இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள, ''எனது சமூகத்தில் ஒரு பிரிவினர் கேளிக்கைகளி லும் விளையாட்டுக்களிலும் சாப்பிடுவதிலும் குடிப்பதிலும் தமது இரவைக் கழிப்பர். காலையில் இவர்கள் குரங்குகளாகவும், பன்றிகளாகவும் மாற்றப்பட்டிருப்பர். இழிவும் அவமானமும் அவர்களைப் பீடிக்கும். அவர்

கள் வாழ்கின்ற பிரதேசத்திற்கு ஒரு காற்று வீசும். அது அவர்களை துகள் துகளாக பறக்கடிக்கும். அதற்குக் காரணம் தமக்கு முன்பிருந்தவர்களைப் போல இவர்கள் ஹராம்களை ஹலாலாக்கிக் கொண்டதும் பட்டாடை அணிந்ததும் ரபான்களை இசைத்தமையும் பாடகிகளை அமர்த்திக் கொண்டமையுமாகும்'' என்ற ஹதீஸின் அறிவிப்பாளர்களில் அல்ஹாரிஸ் பின் நப்ஹான் என்ற ஒருவர் இருக்கிறார். இவரிடமிருந்து யாரும் ஹதீஸ்களைக் கேட்டு எழுதுவதில்லை.

மேலும் ஃபர்கத் அஸ்ஸுபுஹி என்ற ஒருவர் இருக்கிறார். அவர் பலவீன மானவர். அத்தோடு ஸலீம் பின் ஸாலிம், ஹஸ்ஸான் பின் அபூ ஸினான் ஹாஸிம் பின் உமர் ஆகியோரும் இருக்கின்றனர். இவர்கள் யார் என்றே அறியப்படாதவர்களாவர். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்கள் பற்றி இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்களின் இந்த விமர்சனத்திற்கு மேலதிகமாக அதன் உள்ளடக்கத்திலும் பெருந்தவறு காணப்படுகின்றது. ஏனெனில், இந்த ஹதீஸானது ஹராம்களை ஹலாலாக்கிக் கொள்ளும் ஒரு பிரிவினரைப் பற்றிப் பேசுகிறது. இச்செய்கையானது இஸ்லாத்தை விட்டும் மனிதனை வெளியேற்றிவிடுகின்ற குப்ர் (இறை நிராகரிப்பு) ஆகும். மேலும் அது முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஒரு பிரிவினரைப் பற்றிப் பேசுவதோடு சாப்பிடுதல், குடித்தல், ரபான்களைப் பயன்படுத்தி இசைத்தல் ஆகிய செயல்களை தடை செய்யப்பட்ட பெரும் பாவங்களின் பட்டியலில் சேர்க்கிறது.

புத்தியுள்ள ஒருவர் ஒருபோதும் இவ்வாறு சொல்ல மாட்டார். மேலும் இது, அல்லாஹ்வுக்கு இணைவைத்து அத்துமீறி பாவங்கள் செய்த முன்னைய சமூகங்கள் அழிக்கப்பட்டதுபோல முஹம்மத் (ஸல்) அவர்களின் சமூகத்திலிருந்து முஃமின்களில் ஒருபிரிவினர் அழிக்கப்படுவர் என இறைதூதர் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்ததாகவும் குறிப்பிடுகிறது. ஆனால், இறைதூதர் (ஸல்) அவர்களின் சமூகத்தை அல்லாஹ் இத்தகைய தண்டனைகளிலிருந்து பாதுகாத்திருக்கிறான் என்பதும், இந்த ஹதீஸ்கள் சுட்டிக் காட்டுகின்ற பாவங்கள், எவ்வளவு அதிகமாக இடம்பெற்ற போதும் இத்தகைய தண்டனை இந்த சமூகத்திற்கு இறங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

19. இறைதூதர் (ஸல்) அவர்களிடமிருந்து அபூ உமாமா (றழி) அவர்கள் அறிவிப்பதாக வந்துள்ள ''நிச்சயமாக அல்லாஹ் என்னை உலகங்களுக்கு அருளாக அனுப்பியுள்ளான். மேலும் அவன் இசைக் கருவிகளையும் சிலைகளையும் சிலுவைகளையும் அழித்துவிடும்படியும் என்னை ஏவியுள்ளான். இவற்றை விற்பதும் வாங்குவதும் கற்றுக் கொடுப்பதும் இவற்றை வைத்து வியாபாரம் செய்வதும் ஹலாலாக மாட்டாது. இவற்றின் கிரயமும் ஹராமா

கும்'' என்ற ஹதீஸின் அறிவிப்பாளர்களின் ஒருவரான அல் காஸிம் பலவீன ராவார்.

20. ''மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் அறிவில்லாமல் வீண் வார்த்தைகளை விலைக்கு வாங்குகின்றனர்'' என்ற அல்குர்ஆன் வசனம் பாடல்களையே குறிப்பதாக அல்குர்ஆன் விரிவுரையாளர்கள் (முபஸ்ஸிர்கள்) குறிப்பிடுவதாக வந்துள்ள கருத்தானது கேளிக்கை என்ற பெயரில் பாடல்களை அனுமதித்து வந்துள்ள ஆதாரபூர்வமான ஹதீஸ் களுக்கு முரணானதாகும். ஏனெனில், ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் தெளி வாகவே பாடல்களை அனுமதித்திருக்கின்றன. உதாரணமாக; ''உங்களிடம் கேளிக்கைகள் ஏதும் இல்லையா? ஏனெனில், அன்ஸாரிகள் கேளிக்கை களை பெரிதும் விரும்புவர்'' ''கேளிக்கைகள் ஏதும் உண்டா? திருமண வைபவங்களில் கேளிக்கைகளை வைத்துக் கொள்வதில் எமக்கு சலுகை தரப்பட்டுள்ளது'' போன்ற ஸஹீஹான ஹதீஸ்களைக் குறிப்பிடலாம்.

இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்களின் அபிப்பிராயப்படி, வீண் வார்த்தை-லஹ்வுல் ஹதீஸ் என்பது பாடலையே குறிக்கும் என்ற விளக்க மானது இறைதூதர் (ஸல்) அவர்களது ஹதீஸோ ஸஹாபாக்களில் யாரேனும் ஒருவரது கூற்றோ அன்றி சில முபஸ்ஸிர்களின் தனிப்பட்ட விளக்கமாக மாத்திரமே நோக்கப்படல் வேண்டும். எனவே, அதனை சட்டங்களை உருவாக்குவதற்கான ஓர் அடிப்படையாகக் கொள்ள முடியாது. அவ்வாறு அதனை ஓர் ஆதாரமாகக் கொள்வதென்றாலும் அல்லாஹ்வின் பாதையை விட்டும் மனிதர்களை வழிகெடுக்கும் கேளிக்கைகள் அல்லது பாடல்கள் தடை செய்யப்பட்டிருக்கின்றன என்பதே இவ்வசனத்தின் விளக்கமாகும். அல்லாஹ்வின் பாதையைவிட்டும் வழிகெடுக்கும் அனைத்துக் காரியங் களும் அவை அல்குர்ஆன் பிரதிகளை விலைக்கு வாங்குவது அல்லது அதனைக் கற்றுக் கொடுப்பது என்றிருந்தாலும் தடைசெய்யப்பட்ட பாவ மான காரியங்களாகும் என்பதும் கவனத்திற்கொள்ளத்தக்கதாகும்.

சட்ட வசனங்களின் (நஸ்) ஆதாரபூர்வத்தன்மையை நிறுவுவதில் தேர்ச்சி பெற்றவரும் அத்துறையில் முக்கியஸ்தருமான இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்கள் பாடல்கள் ஹராம் என்பதற்கு ஆதாரமாக முன்வைக்கப் படும் அறிவிப்புக்களை இவ்வாறுதான் விமர்சனத்திற்குட்படுத்தி, அவற்றின் குறைகளை சுட்டிக்காட்டி அவற்றை ஆதாரமாகக் கொள்ள முடி யாது என நிறுவுகிறார். இறுதியாக அவர், இத்தலைப்பில் வந்துள்ள ஒரு ஹதீஸ்கூட ஆதாரபூர்வமானதல்ல. அனைத்துமே இட்டுக் கட்டப்பட்டவை யாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக இந்த ஹதீஸ்கள் அனைத்தும் அல்லது அவற்றில் ஒன்றேனும் நம்பத்தகுந்த அறிவிப்பாளர்களால் அறிவிக் கப்பட்டு அவ்வறிவிப்பாளர் வரிசை இறைதூதர் (ஸல்) அவர்கள் வரை

இடைமுறிவின்றி தொடராக இருக்குமாயின் எவ்விதத் தயக்கமுமின்றி நாம் அவற்றை ஏற்றுக் கொண்டிருப்போம் என்று கூறுகிறார்கள். எனவே, பின்வரும் காரணங்களுக்காக இந்த அறிவிப்புக்களை ஆதாரமாகக் கொள்ள முடியாதுள்ளது.

1. இறைதூதர் (ஸல்) அவர்கள் தவிர்ந்த வேறு யாரும் ஷரீஆவின் (இஸ் லாம் மார்க்கத்தின்) சட்டவியல் ஆதாரங்களை உருவாக்க முடியாது.

2. பாடல் ஆகுமானது என்ற கருத்தைத் தருகின்ற ஆதாரபூர்வமான ஹதீஸ்களை அறிவித்துள்ளதோடு பாடல்களை செவிமடுத்து ரசித்த நபித்தோழர்களதும் தாபிஈன்களதும் நிலைப்பாட்டுக்கு முரணாக இவை அமைந்துள்ளன.

''மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் அறிவில்லாமல் வீண் வார்த்தைகளை விலைக்கு வாங்குகின்றனர்'' என்ற அல்குர்ஆன் வசனமும்கூட இவர்களது வாதத்தைப் பொய்ப்பிப்பதாகவே அமைந்துள்ளது. ஏனெனில், அவ்வசனத்தில் ''மனிதர்களில் சிலர் இருக்கின்றனர். அவர்கள் அறிவில்லாமல் வீண் வார்த்தைகளை விலைக்கு வாங்கி அவற்றின் மூலம் அல்லாஹ்வின் பாதையைவிட்டும் மனிதர்களை வழிகெடுக்கவும் அல் லாஹ்வின் பாதையை பரிகசிக்கவும் முற்படுகின்றனர். இத்தகையோருக்கு இழிவுதரும் வேதனை உண்டு'' என்றுதான் வந்துள்ளது.

இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ள செயல்களைச் செய்பவன் எவ்வித சந்தேகமுமின்றி காபிராவான். ஏனெனில், அவன் அல்லாஹ்வின் பாதையை விட்டும் மனிதர்களை வழிகெடுக்கவும் அப்பாதையை பரிகசிக்கவும் செய் கின்றான். இத்தீய நோக்கங்களுக்காக ஒரு மனிதன் குர்ஆன் பிரதியொன்றை விலைக்கு வாங்கினாலும்கூட அவன் காபிராகிவிடுவான். எனவே, இங்கு இத்தீய செயல்களையே அல்லாஹ் இகழ்ந்துள்ளான். மாறாக அல்லாஹ் வின் பாதையைவிட்டும் தன்னையோ பிறரையோ வழிகெடுக்கும் நோக்க மின்றி தன்னை ஆறுதல் படுத்திக்கொள்வதற்காகவும் ரசனைக்காகவும் அனுமதிக்கப்பட்ட வார்த்தைகளை -கேளிக்கைகளை விலைக்கு வாங்கு வதை அல்லாஹ் இங்கு இகழ்ந்துரைக்கவில்லை. எனவே, பாடல் ஹராம் என்று நிறுவுவதற்கு இந்த வசனத்தை ஆதாரமாகக் காட்ட முயல்வது பொருத்தமற்றதாகும்.

அவ்வாறே ஒரு மனிதன் அல்குர்ஆனை ஓதுவதன் மூலம் அல்லது ஹதீஸ்களை வாசிப்பதன் மூலம் அல்லது ஒரு ஹதீஸை அறிவிப்பதன் மூலம் அல்லது தனது செல்வங்களை பராமரிப்பதன் மூலம் அல்லது பாடல் மூலம் அல்லது அதுவல்லாத வேறு செயல்கள் மூலம் வேண்டுமென்றே தொழுகையைப் புறக்கணித்தால் அவன் அல்லாஹ்விற்கு மாறு செய்த

பாவியாக ஆகிவிடுவான். மேற்கூறிய செயல்களில் ஈடுபடுவதன் மூலம் ஒருவன் தனது கடமைகளை புறக்கணிக்கவில்லையெனில் அவன் நல்லதையே செய்தவனாவான்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள், ''செயல்கள் யாவும் எண்ணங்களைப் பொறுத்ததே. ஒவ்வொரு மனிதனுக்கும் தான் நாடியதே கிடைக்கும்'' என்று கூறியுள்ளார்கள்.(13) எனவே, பாடல் கேட்பதன் மூலம் அல்லாஹ் வுக்கு மாறு செய்வதற்கான தூண்டுதலைப் பெற ஒருவர் நினைத்தால் அவர் பாவியாவார். பாடல் அல்லாத ஏனைய அனைத்து அம்சங்களும் அவ்வாறே. மாறாக, பாடல் கேட்பதன் மூலம் தனது உள்ளத்தை ஆறுதல் படுத்தி, அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதற்கான சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கும் நன்மைகளின் பால் தன்னை உற்சாகப்படுத்திக் கொள்வதற்கும் ஒருவர் நினைத்தால் அவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படும் ஒரு நல்லடியாராவார். அவருடைய அந்தச் செயல் சத்தியம் சார்ந்ததாகும்.

பாடல் கேட்பதன் மூலம் ஒருவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவ தையோ அல்லது அவனுக்கு மாறுசெய்வதையோ நாடவில்லையெனில் அவருடைய செயல் அங்கீகரிக்கப்பட்ட கேளிக்கையாகக் கொள்ளப்படும். இது மனிதன் தனது தோட்டத்தில் உல்லாசமாக சுற்றித் திரிவதைப் போன்ற, தனது வீட்டு வாசலில் அமர்ந்து காட்சிகளை ரசிப்பதைப் போன்ற தனது ஆடைகளுக்கு பல வர்ண சாயமிடுவதைப் போன்ற தனது கால்களை நீட்டி மடிப்பதைப் போன்ற ஆகுமான செயல்களில் ஒன்றாகும். எனவே, பாடல் தடைசெய்யப்பட்டதாகும் என்ற இவர்களது வாதம் திட்ட வட்டமாகவே பிழையானதாகும்.(14)

இமாம் புஹாரி (றஹ்) அவர்கள் தனது ஸஹீஹில், இவ்விடயம் தொடர்பாக, ''அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதை விட்டும் மனிதர்களைத் திசைதிருப்பிவிடுகின்ற அனைத்துக் கேளிக்கைகளும் தடைசெய்யப்பட்ட தாகும். (பாதில்)'' என்ற தலைப்பில் ஓர் அத்தியாயத்தை அமைத்துள்ளார் கள். அதன் கருத்து யாதெனில், கேளிக்கை அதாவது பாடல்-குரல், சந்தம், இசை ஆகியன- அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுவதை விட்டும் மனிதர்களை திசைதிருப்பவில்லையெனில் அது தடை செய்யப்பட்டதல்ல என்பதே. வேறு வார்த்தைகளில் சொல்வதாயின் அது மக்ரூஹோ ஹராமோ அல்ல. ஆகுமான (முபாஹ்) விடயங்களில் உள்ளதாகும்.

பாடல் 'ஹராம்' என்பதற்கு முன்வைக்கப்பட்ட ஆதாரங்கள்-அவற்றின் அறிவிப்பாளர் வரிசைகளில் (இஸ்னாத்) குறையுடையவையாதலால்- செல்லுபடியற்றவையாக இருப்பதே பாடல் ஆகுமானது என்பதை நிறுவப் போதுமானதாகும். பாடல் ஹலால் என்பதற்கு வேறு தனியான ஆதாரங்களோ, நடைமுறை உதாரணங்களோ தேவையில்லை. ஏனெனில்,

பாடல் என்பது மாற்றமுறுகின்ற, புதிதாகின்ற மனித ஆக்கத் திறனின் ஒரு வெளிப்பாடாகும். அது அவனது ஏனைய உலகியல் நடவடிக்கை களைப் போன்ற ஒன்றுமாகும். அதாவது பாடல் ஒரு உலகியல் நடவடிக் கையேயன்றி மார்க்கக் கிரியையல்ல. அது ஹலால் என்பதற்கு மார்க்கச் சட்டங்களுக்கு (குர்ஆனுக்கும் ஹதீஸுக்கும்) அது முரணில்லாமல் இருப்பதே போதுமானதாகும். அது ஹலால் என்று குர்ஆனும் ஹதீஸும் தெளிவாகக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், மார்க்கக் கிரியைகளை, வணக்க வழிபாடுகளைத்தான் அல்குர்ஆனும் ஹதீஸும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மார்க்க ஆதாரங்களைக் கொண்டிராத கிரியைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட வேண்டியவையாகும்.

பாடல் ஹலால் என்பதற்கு இதுவொன்று மாத்திரமே போதுமானதா கும். அரசியலிலும் அதன் சட்டபூர்வத் தன்மை ஷரீஆவின் அடிப்படைக ளுக்கு அது முரணில்லாமல் இருக்க வேண்டும் என்ற வகையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதன் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியான மார்க்க ஆதாரங்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை. இது பற்றிய இமாம் அபுல் வஃபா பின் அகீல் அல் பக்தாதியின் (ஹி. 431-513/கி.பி. 1040-1119) கருத்தை இமாம் இப்னுல் கையிம் அல் ஜவ்ஸிய்யா (ஹி. 691-571/கி.பி. 1292-1350) தனது இஃலாமுல் முவக்கிஈன் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

''நேர்மையான அரசியல் என்பது மக்களை பாவச் செயல்களை விட்டும் தூரமாக்கி நன்மைகளில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகளாகும். அவை பற்றி நேரடியாக நபியவர்கள் எதையும் பேசியிருக்காவிட்டாலும் அல்லது வஹி அருளப்படாதிருந்தாலும் அந்நடவடிக்கைகள் சட்டபூர்வ மானவையாகும். ஏனெனில், அவை மார்க்கம் சொல்லியுள்ள சட்டங் களுக்கு முரண்படவோ அவை கூடாதவை என்று மார்க்கம் கூறவோ இல்லை.(15)

பாடல் ஹலால் என்பதற்கும் அது தன்னளவில் ஆகுமானது என்பதற் கும் அது மார்க்க அடிப்படைகளுக்கு முரணில்லாமல் இருப்பதே போதுமா னதாகும். பாடல் ஹராம் என்று வந்திருக்கின்ற அறிவிப்புக்களில் அறிவிப் பாளர் வரிசைகள் குறையுடையவை என்பது உறுதியாவது கொண்டு அது நிரூபனமாகிறது. அத்தோடு பாடல் ஆகுமானது. விரும்பத்தக்கது, நபித்துவ சமூகத்தில் இஸ்லாத்தின் ஆரம்பக்கட்டத்தில் மக்களுக்கு மத்தியில் அவை புழக்கத்தில் இருந்தன என்பதனை நிறுவும் ஆதாரபூர்வமான பல ஹதீஸ்கள் காணப்படுகின்றமையும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும்.

## வெவ்வேறு மத்ஹப்களின் பார்வையில் பாடலும் இசையும்

பாடலுக்கான மார்க்கத்தீர்ப்பு குறித்து வெவ்வேறு மத்ஹப்களைச் சார்ந்த புகஹாக்கள் தம்முன் வைக்கப்பட்ட வித்தியாசமான பாடல் வகைகளைப் பொறுத்து வித்தியாசமான பத்வாக்களை வெளியிட்டனர் என்பதை நாம் மேலே விளக்கினோம். குறிப்பாக பாடலின் அனைத்து வகைகளும் பொதுவாகவே ஹராம் என்று வாதிடுவோர் ஆதாரமாக முன்வைக்கும் அறிவிப்புக்கள் குறித்து ழாஹிரி கோட்பாட்டாளரான இமாம் இப்னு ஹஸ்ம் அல் அந்தலூஸி (றஹ்) முன்வைக்கும் விமர்சனங்களையும், அவ்வறிவிப்புக் களை அடிப்படையாகக் கொண்டு பாடல் ஹராம் என்று வாதிப்பவர்கள் குறித்து அல் ஹாபில் இப்னுல் கைஸரானி அபுல் பழ்ல் முஹம்மத் பின் தாஹிர் (றஹ்) குறிப்பிடும், ''இவர்கள் ஹதீஸ் துறை பற்றிய அறிவில்லாத காரணத்தால் மேற்படி ஹதீஸ்களை எடுத்துக் கொண்டனர். ஏதேனும் ஒரு புத்தகத்தில் ஒரு ஹதீஸ் எழுதப்பட்டிருந்தால் இவர்கள் அதனை தமக்கான மத்ஹபாக ஆக்கிக் கொண்டு எதிர்க்கருத்துக் கொண்டவர்களோடு விவாதிக்க ஆரம்பித்துவிடுவர். இது மிகப்பெரிய தவறும் பாரதூரமான அறியாமையுமாகும்'' என்ற கருத்தையும் நோக்கினோம். பாடல் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள இவை போதுமானவை யென்றாலும் இவ்விடயம் தொடர்பாக வேறு சில மூத்த புகஹாக்கள் முன்வைத்திருக்கும் கருத்துக்களை -மேலதிக தெளிவுக்காக- தொகுத்துத் தருகிறோம்.

01- இது பற்றிய இமாம் ஹஸனுல் பஸரி (றஹ்) (ஹி. 21-110, கி.பி. 642-728) அவர்களின் கருத்தை இமாம் குர்துபி (றஹ்) (ஹி.671 - கி.பி.1282) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''மனிதர்களில் சிலர் இருக்கின்றனர், அவர்கள் அறிவில்லாமல் வீண் வார்த்தைகளை விலைக்கு வாங்குகின்றனர்'' என்ற வசனம் குறிப்பிடும் தடைசெய்யப்பட்ட கேளிக்கை யாதெனில், இறை நிராகரிப்பும் இணை வைத்தலுமாகும். மாறாக பாடல் அல்ல.

02 - மாலிகி மத்ஹபைச் சேர்ந்த பெரும் பகீஹும் முபஸ்ஸிருமான இமாம் குர்துபி (றஹ்) அவர்கள் கூறுவதாவது; தடைசெய்யப்பட் கேளிக்கை என்பது மனித உள்ளத்தை மனோ இச்சை, எதிர்ப்பால் கவர்ச்சி, வெட்கமின்மை என்பவற்றின்பால் தூண்டுகின்ற, பெண்களைப் பற்றியும் அவர்களது அங்கலட்சணங்களைப் பற்றியும் மதுவையும், ஹராமாக்கப் பட்ட ஏனைய விடயங்களைப் பற்றியும் பாடுகின்ற அவற்றின்பால் தூண்டுகின்ற பாடல்களும் கவிதைகளுமே. இவை தடைசெய்யப்பட்டவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. மேற்படி பண்புகளைப் பெற்றிராத பொதுவான பாடல்களை திருமண வைபவங்கள், பெருநாள் கொண்டாட் டங்கள் போன்ற மகிழ்ச்சிகரமான வேளைகளிலும் கடினமான வேலை களில் ஈடுபடும்போது உற்சாகமூட்டுவதற்காகவும் -குறைந்தளவில்- பாட முடியும்.

போர் முரசு கொட்டுவது அனுமதிக்கப்பட்டதாகும். ஏனெனில், அதன் மூலம் போராளிகளின் உள்ளங்கள் உத்வேகம் பெறுகின்றன. எதிரிகள் அச்சமுறுகின்றனர். ரபான் இசைப்பது ஆகுமாகும். திருமண வைபவங் களில் முரசுகொட்டுவதும் ரபான் கொட்டுவதைப் போன்றதே. திருமணத்தை பகிரங்கப்படுத்துவதற்காக வேறு இசைக் கருவிகளைப் பாவிப்பதும் ஆபாச மற்ற நல்ல வார்த்தைகளைப் பாவித்து பாடல் பாடுவதும் ஆகுமானதாகும்.[16]

எனவே, மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களிலும் கடினமான வேலைகளில் ஈடுபடுவதற்காக மனித ஆற்றல்களையும் இயலுமைகளையும் உற்சாக மூட்டுவதற்காகவும் நல்ல வார்த்தைகளைப் பயன்படுத்தி பாடுவதும் ரபான், முரசு (மத்தளம்) உள்ளிட்ட ஏனைய இசைக்கருவிகளைப் பயன் படுத்துவதும் ஹலாலான ஆகுமான காரியங்களாகும்.

இஸ்லாமிய தத்துவஞானியும் மார்க்க அடிப்படைகள் (உஸூல்) துறை அறிஞரும் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த பகீஹுமான இமாம் ஹுஜ்ஜதுல் இஸ்லாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (றஹ்) (ஹிஜ்ரி. 450-505, கி.பி. 1058-1111) தனது இஹ்யாஉ உலூமித்தீன் (மார்க்கக் கல்விகளை உயிர்ப் பித்தல்) என்ற அரிய நூலில் பாடல் கேட்டல் என்ற தலைப்பில் ஓர் அத்தியாயத்தையே அமைத்திருக்கிறார்கள்.

அதன் இறுதியில் அவர் கூறுவதாவது; ''கேளிக்கைகள் உள்ளத்துக்குப் புத்துயிரூட்டி சிந்தனைச் சுமையை அதனைவிட்டும் இறக்கிவிடுகின்றன. அளவுக்குமிஞ்சிய சுமை சுமத்தப்பட்டால் உள்ளங்கள் மரத்துவிடும். எனவே, அவற்றுக்குப் புத்துயிரூட்டுவது அவை வினைமையுடன் (சீரியஸாக) இயங்க வுதவும். உதாரணமாக கற்றல் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபடும் ஒருவர் வெள்ளிக்கிழமைகளில் ஓய்வெடுக்க வேண்டும். ஏனெனில், வாரத்தில் ஒருநாள் ஓய்வெடுப்பது ஏனைய நாட்களில் உற்சாகத்தோடு இயங்க உதவும் ஓய்வு நேரங்களில் சுன்னத்தான தொழுகைகளை தொடர்ந்து தொழும் ஒரு வர் இடையில் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டும் என்பதற்காக குறிப்பிட்ட சில நேரங்களில் தொழுவது மக்ரூஹாக்கப்பட்டுள்ளது.

எனவே, ஓய்வானது வேலை செய்வதற்கான உற்சாகத்தைத் தரும். கேளிக்கைகள் வினைமையுடன் செயற்படுவதற்கான உத்வேகத்தை தரும். நூறுவீத வினைமையையும், கசப்பான உண்மைகளையும், நபிமார்களின் உள்ளங்களே தாங்கிக் கொள்ள முடியும். கேளிக்கையானது களைப்பு, சலிப்பு ஆகிய நோய்களிலிருந்து உள்ளத்தை விடுவிக்கும் மருந்தாகும். ஆனால், அக்கேளிக்கைகள் அனுமதிக்கப்பட்டதாக இருத்தலும் மருந்து போல் அளவோடு இருப்பதும் அவசியம். பாடல் கேட்பதென்பது -இசை வான, பொருள் விளங்கும், நல்ல வார்த்தைகளை -செவிமடுப்பதாகும். அது ஆகுமான காரியங்களிலொன்றாகும். அதன் அசல் தன்மைக்கு வெளியிலிருந்து வருகின்ற புறக்காரணிகளின் காரணமாகவே அது ஹராமாக மாறுகிறது. வசந்தமும் அதன் பூக்களும், இசைக்கருவிகளும் அவற்றின் நரம்புகளும் யாரைக் கவரவில்லையோ அவன் இயல்பு கெட்ட ஒருவனாவான். அந்நோய்க்கு சிகிச்சையில்லை.(17)

முதுபெரும் தத்துவஞானியும், முஜத்திதும் (சமூகத்தைப் புனரமைத் தவர்) முஜ்தஹிதுமான (சட்டவியல் அறிஞர்) ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (றஹ்) (ஹி: 661-728, கி.பி. 1263-1328) அவர்கள், பாடல்கள் பொதுவாகவே ஹராமாகும் என்று நினைத்து சர்ச்சைப்பட்டுக் கொண்டி ருப்பவர்களுக்கு மாற்றமாக அது ஆகுமாகும் என்ற கருத்தையே முன்வைக் கிறார்கள். ஆனால், சில ஸூபிய்யாக்கள் (ஆத்மஞானிகள்) செய்ததைப் போன்று அதனை இபாதத்தாக ஆக்கிக் கொள்வது ஹராமாகும் என்றும் கூறுகிறார்கள். ஏனெனில், இபாதத்துக்கள் அல்லாஹ்விடம் இருந்தும் அவனது தூதரிடமுமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவை, அவற்றில் நூதனங்களை மேலதிக இணைப்புக்களைப் புகுத்த முடியாது. பாடல் கேட்டலில் மூன்று வகைகள் இருப்பதாக இமாமவர்கள் விளக்கு கிறார்கள்.

01- மார்க்க விடயத்தில் பயனுள்ள செவிமடுத்தல், அதாவது அழகிய குரலில் அல்குர்ஆன் ஓதுவதை செவிமடுத்தல். அல்குர்ஆனின் மூலம்

அல்லாஹ்வை நெருங்குபவர்களின் முக்கிய பண்பாக இது இருக்கும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும், ஸஹாபாக்களும், தாபியீன்களும் இப்பண்பைக் கடைப்பித்தனர்.

2. ஆகுமான பாடல்களை செவிமடுத்தல். இது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது சமூகத்திற்கு, அவர்கள் தமது வாழ்வின் நெருக்கடிகளை தீர்த்துக் கொள்வதற்கான சலுகையாக அனுமதித்த ஒரு விடயமாகும். திருமணம் போன்ற மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளின் போது பலவகை கேளிக்கைகளை வைத்துக் கொள்வதற்கு நபியவர்கள் சலுகை தந்திருக்கிறார்கள். திருமண வைபவங்கள் போன்ற மகிழ்ச்சிகளின்போது ரபானைப் பயன்படுத்தி இசைப்பதற்கு பெண்களுக்கு சலுகை வழங்கினார்கள். ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் இதற்கான ஆதாரமாகும்.

அதாவது அன்னாரது வீட்டில் ஒரு பெருநாளன்று இரு யுவதிகள், மதீனாவாசிகள் (அன்சாரிகள்) தமக்கிடையே அடிக்கடி கதைத்துக் கொண்ட ''புஆஸ்'' யுத்தங்கள் பற்றிய பாடல்களைப் பாடியபோது அபூ பக்கர் (றழி) அவர்கள், ''அல்லாஹ்வின் தூதரின் வீட்டில் ஷைத்தானின் ஊதுகுழல்களா? என்று கூறினார்கள். அதற்கு நபியவர்கள், ''அவர்கள் இருவரையும் பாடவிடுங்கள். ஏனெனில், ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு பெருநாள் இருக்கிறது. இது முஸ்லிம்களாகிய எங்களுடைய பெருநாளாகும்'' என்று கூறினார்கள்.

03. நூதனமான வழிபாடுகளை (பாடல்களை) செவிமடுத்தல். இது திட்டவட்டமாகவே ஹராம் என்பதே இமாம்களின் கருத்தாகும். ஏனெனில், ஜாஹிலிய்யாக் காலத்தில் இணைவைப்பாளர்கள் தமது சிலைகளுக்குச் செலுத்திய வணக்கமான சீட்டியடித்தலையும் கைதட்டுதலையும் (முகாஅன் வதஸ்தியா) அல்குர்ஆன் ஹராம் என்றே கூறுகிறது.

இத்தகைய பாடல்கள் ஹராம் என்பதற்குக் காரணம் ஸூஃபிய்யாக்கள் அவற்றை இபாதத்தாக, அல்லாஹ்வை நெருங்குவதற்கான ஒரு செயலாக ஆக்கிக் கொண்டதன் மூலம் அல்லாஹ்வும் அவனது தூதரும் மார்க்கமாக ஆக்காத ஒன்றை அவர்கள் மார்க்கமாக ஆக்கிக் கொண்டிருப்பதே. இத்தகைய பாடல்களைக் கேட்பதன் மூலம் இவர்கள் தமது மன நெருக்கடிகளை நீக்கிக்கொள்வதை மாத்திரமன்றி அல்லாஹ்வை நெருங்குவதற்கான ஒரு வழிமுறையாகவும் இவற்றை எடுத்துக் கொள்கின்றனர். உள்ளங்களை சீர்படுத்திக் கொள்வதற்கும் இறை அருட்கொடைகளை வரவழைத்துக் கொள்வதற்குமாக இவர்கள் இப்பாடல்கள் பாடப்படும் இடங்களில் ஒன்று சேர்கின்றனர். இவர்களில் சிலர் இப்பாடல்களைக் கேட்பது அல்குர்ஆனை செவிமடுப்பதைவிடச் சிறந்தது என்று வேறு கூறுகின்றனர்.

மேலும் இவர்கள் இப்பாடல்களை தமது உள்ளத்துக்கான உணவாக ஆன்மாவுக்கான தீனியாக, அல்லாஹ்வின்பால் தம்மை வழிநடாத்தும் சக்தியாக, அவனது நெருக்கத்தைப் பெறத் தூண்டும் சாதனமாக ஆக்கிக் கொள்கின்றனர். இவற்றுக்கு அடிமையானவர்கள் அல்குர்ஆன் ஓதப் படுவதை விருப்பத்தோடு செவிமடுக்க மாட்டர். அதனைச் செவிமடுத்து மகிழ்ச்சியுறமாட்டர். செவிமடுத்தாலும் கவனயீனத்துடனேயே செவி மடுப்பர். ஆனால், தமது சீட்டியடித்தல்களையும் கைதட்டல்களையும் செவிமடுத்தார்கள் என்றால் அவற்றுக்கு முன்னால் பூரண பக்திவயப்பட்டு அசைவற்று சமைந்து நின்றுவிடுவர்.(18)

எனவே, இதுதான் ஹராமான பாடல் கேட்டலாகும். பாடல் கேட்டல் என்பதற்காக இது ஹராமாக்கப்படவில்லை. அதன் நோக்கத்தைப் பொறுத்தே ஹராமாக்கப்பட்டது. ஆனால், உள்ளத்திற்கு இன்பமூட்டி அதன் நெருக் கடிகளை நீக்குவதற்கான பாடல்களையும் மனித ஆற்றல்களைப் புதுப் பித்து அவனது இயலுமைகளை தூண்டிவிடுவதற்கான பாடல்களையும் செவிமடுப்பது ஆகுமான காரியமாகும். ஏனெனில், பாடல் கேட்பதானது உள்ளத்துக்கு இன்பமூட்டுகின்ற ஏனைய காரியங்களைப் போன்றது. திருமண வைபவங்களில் பாடப்படும் பாடல்களில் கேளிக்கையும் விளை யாட்டும் கலந்திருந்தாலும்கூட மக்கள் அவற்றை ஒரு வணக்கம் புரிகி றோம் என்ற எண்ணத்திலன்றி ஓர் இன்பத்தை நுகர்கின்றோம் என்ற எண்ணத்திலேயே செவிமடுக்கின்றனர். எனவே, அது ஆகுமானதாகும்.

ஸூபியாக்கள் அல்லாஹ்வை நெருங்குவதற்கான வணக்கமாக ஆக்கிக் கொண்டுள்ள பாடல்களை செவிமடுப்பது ஹராமானது என்பதற்கான கார ணத்தை மேலும் தெளிவுபடுத்துவதற்காக இமாம் இப்னு தைமியா (றஹ்) அவர்கள் ஓர் உதாரணத்தை முன்வைக்கிறார்கள். அதாவது ஒரு மனிதன் இரண்டு மலைகளுக்கிடையில் உடற்பயிற்சிக்காக அல்லது விளையாட் டுக்காக ஓடினான் என்றால் அதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவன் அதனை ஸபா-மர்வா மலைகளுக்கிடையிலான ஓட்டம் போன்ற ஒரு இபாதத் என ஆக்கிக் கொள்வது ஹராமாகும். இங்கு ஓடுவது ஹராமானதல்ல. ஆனால், அதை இபாதத்தாக ஆக்கிக் கொள்வது ஹராமாகும்.(19)

இறுதியாக அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் தலைவராகவும், (ஷைஹுல் ஜாமிஇல் அஸ்ஹர்) பேரறிஞர் பேரவையின் உறுப்பினராக வும், இஸ்லாமிய ஆய்வு மையத்தின் தலைவராகவும் இருந்த, ஹனபி மத்ஹபைச் சேர்ந்த பேரறிஞர், சட்ட மேதை அஷ்ஷெய்க் மஹ்மூத்

ஷல்தூத் (றஹ்) (ஹி. 1310-1383, கி.பி. 1893-1963) அவர்கள் இதுகுறித்து வெளியிட்ட பத்வாவை முழுமையாகத் தருகிறோம்.

**இஸ்லாம் மனித இயல்பை நெறிப்படுத்தும் மார்க்கமாகும்**

**பாடலும் இசையும்:**

இளைஞரொருவர் எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில் தான் இளமை முதலே இசையை விரும்புவதாகவும் அதனை தான் முயன்று கற்றுக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டு, தனது நண்பர்களில் ஒருவர், ''இசை ஹராமாகும். ஏனெனில், அது தொழுகையையும் இபாதத்துக்களையும் விட்டு எம்மை திசைதிருப்பிவிடக் கூடிய ஒரு கேளிக்கை. அனைத்து கேளிக்கைகளுமே ஹராமாகும்'' என்று தெரிவித்ததாகவும் அதற்கு அவருக்குதான் ''நான் நேரம் தவறாமல் தொழுவதோடு, ஏனைய இபாதத்துகளிலும் பேணுதலாக இருக்கிறேன். எனது ஓய்வு வேளைகளில், உழைப்பினதும் இரவு நேர பாட மீட்டலினதும் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காகவே இசையை ரசிக்கிறேன்'' என்று கூறியதாகவும் குறிப்பிட்டிருந்தார். அவரது நண்பர் இந்தப்பதிலால் திருப்தியடையவில்லை. எனவே, அவ்விருவரும் அறிஞர்களிடம் இதுகுறித்த பத்வாவை கேட்க முடிவெடுத்தனர். அவ்வகையில் அவ்விளைஞர் பாடல் குறித்த மார்க்கச் சட்டத்தை விளக்குமாறு கோரி இக்கடிதத்தை எனக்கு அனுப்பி இருந்தார்.

**பாடலும் இசையும் ஹலால் என்று கூறுவோருக்கும், அவை ஹராமென்று கூறுவோருக்கும் இடையிலான குழப்ப நிலை**

எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு இந்த ஃபத்வா பயனுள்ளதாய் அமையும் எனவும் இதன் மூலம் அவர்கள், மார்க்கத்தில் ஹலாலா? ஹராமா? என்று தடுமாற்றம் நிலவுகின்ற விடயங்கள் பற்றிய சரியான இறை தீர்ப்பைப் புரிந்துகொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கிறேன். உண்மையில் முஃமின்கள் என்போர் தமது விவகாரங்களில் இத்தகைய குழப்பநிலைகளை, தெளிவின்மைகளை, தடுமாற்றங்களை விட்டும் விலகியிருக்க வேண்டியவர்களாவர்.

அவ்வாறு குழப்பநிலை நிலவுகின்ற பிரச்சினைகளுக்கான ஓர் உதாரணம்தான் மேலே நான் குறிப்பிட்ட இசையைக் கற்றுக் கொள்வதும் செவிமடுப்பதும் பற்றிய கேள்வியாகும்.

இசை தொடர்பான மார்க்கத் தீர்ப்புக் குறித்து இரு வித்தியாசமான கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன. ஒன்று: சில மார்க்கச் சட்டப்

புத்தகங்களிலிருந்து ஒரு சில பக்கங்களை வாசிக்கின்ற அல்லது தாம் பேணுதலானவர்கள் (தக்வா உள்ளவர்கள்) என்று காட்டுகின்ற ஆடைகளை அணியும் சிலர் கூறுகின்ற சில வார்த்தைகளை, சொற்பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டது.

மற்றையது: சரியான மார்க்க அறிவால் வழிப்படுத்தப்பட்ட, தூய மனித இயல்பின் அடியாகப் பிறந்தது.

முதலாவது சிந்தனையானது, தாம் வாசித்த அல்லது செவிமடுத்த வார்த் தைகளை அடிப்படையாகக் கொண்டு இசை கற்பதும் கேட்பதும் ஹராம் என்று கூறுகிறது. இரண்டாவது சிந்தனையானது, தூய மனித இயல்பை அடிப்படையாகக் கொண்டு இசை கற்பதும் கேட்பதும் ஹராமானதல்ல ஹலாலானது என்று குறிப்பிடுகின்றது.

**மனித இயல்பு இன்பங்களில் நாட்டம் கொண்டதாகும்**

ஹலாலா? ஹராமா? என்று கருத்துமுரண்பாடு நிலவும் இதுபோன்ற விடயங்களில் மனிதர்கள் உணர்ந்து கொள்ளவேண்டிய அடிப்படையாதெனில் அல்லாஹ் திட்டவட்டமாகவே மனிதனை இன்பங்களையும் நல்லவைகளையும் விரும்பும் இயல்போடு படைத்திருக்கின்றான் என்பதாகும். அத்தகைய இன்பங்கள் அவனது உள்ளத்திலே செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றின் மூலம் அவன் அமைதியடைகிறான். ஓய்வைப் பெற்றுக் கொள்கிறான். உற்சாகம் அடைகிறான். அவனது உறுப்புக்களும்கூட புத்துணர்ச்சியைப் பெறுகின்றன. எனவேதான், அழகிய காட்சிகளைக் காணும்போது அவனது உள்ளம் விரிவடைகிறது.

பச்சைப் பசேலென்ற தாவரங்கள், அலைபாயும் தூய நீர், புன்னகைக்கும் அழகிய வதனம் ஆகியன அவனை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. தூய நறுமணங்கள் அவனது உடலிலும் ஆன்மாவிலும் பரவசத்தை உண்டு பண்ணுகின்றன. மென்மையான பொருட்களை ஸ்பரிசிக்கும்போது அவன் ஓர் இன்பத்தை அனுபவிக்கிறான். தான் அறியாதிருந்த ஒன்றை அறிந்து கொள்ளும்போது அறிவின் சுவையை அவன் சுகித்து இன்புறுகிறான். மேலும் அவன் பெண்கள், பிள்ளைகள், தங்கம், வெள்ளி ஆகியவற்றின் குவியல்கள், அடையாளமிடப்பட்ட உயர்ரகக் குதிரைகள், கால்நடைகள், பயிர் நிலங்கள் போன்ற வாழ்வின் அலங்காரங்களையும் இன்பங்களையும் விரும்பும் இயல்போடு படைக்கப்பட்டவனாகவும் இருக்கின்றான்.

"பெண்கள், ஆண் மக்கள்; பொன்னிலும், வெள்ளியிலுமான பெருங் குவியல்கள்; அடையாளமிடப்பட்ட (உயர்ந்த) குதிரைகள்; (ஆடு, மாடு,

ஒட்டகை போன்ற) கால் நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சை மனிதர்களுக்கு அழகாக்கப்பட்டிருக்கிறது; இவை(யெல் லாம் நிலையற்ற) உலக வாழ்வின் சுகப்பொருள்களாகும்; அல்லாஹ் விடத்திலோ அழகான தங்குமிடம் உண்டு.'' *(ஆல இம்ரான்-14)*

### மார்க்கம் மனிதனின் இயல்பான உணர்வுகளை நெறிப்படுத்துமேயன்றி கொன்றுவிடுவதில்லை

வாழ்வில் எப்பணியை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ் மனிதனைப் படைத்திருக்கின்றானோ அதனை உரிய அமைப்பில் அவன் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே இச்சைகள், விருப்பங்களின்பால் தன்னை செலுத்துகின்ற உணர்வுகளுடன் அவன் படைக்கப்பட்டிருக்கின்றான். இவ்வுலக வாழ்வில் தன்னோடு இணைத்து அல்லாஹ் படைத்துள்ள அந்த இன்பங்களிலிருந்து அவன் தனக்குத் தேவையான அளவை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதனால்தான் மனிதனை இந்த உணர்வுகளுடன் படைக்க வேண்டு மென அல்லாஹ் தீர்மானித்தான். எனவே, இன்பங்களை அனுபவிக்கத் தூண்டும் இந்த இயல்பை அவன் கட்டுப்படுத்திக் கொன்றுவிட வேண்டும் என எதிர்பார்ப்பது அறிவுபூர்வமாகாது. எனவே, இறைவேதங்கள் எவை யும் மனித இனத்தின் வரலாற்றின் எந்தக் கட்டத்திலும் அவனது வாழ்வின் இயக்கத்துக்குத் தேவையான இந்த இயல்பை கொன்றுவிடும்படி கோர வில்லை. ஆனால், அவை இந்த இயல்பான உணர்வுகள் குறித்து சில வரை யறைகளைச் சொல்லியிருக்கின்றன. அதாவது மனிதன் தனது கடமைகளை மறக்கின்ற அளவுக்கு, தனது பண்பாடுகளை கெடுத்துக் கொள்கின்ற அளவுக்கு தனது வாழ்வின் அத்தியாவசியக் காரியங்களைப் புறக்கணிக்கின்ற அளவுக்கு இந்த உணர்வுகள் அமையுமாயின் அவை கட்டுப்படுத்தப் படல் வேண்டும்.

### நடுநிலைமை பேணல் இஸ்லாத்தின் மிக முக்கிய அடிப்படையாகும்.

மனித உணர்வுகள் குறித்த இறைவேதங்களின் நிலைப்பாடு இதுவே. காய்தல், உவத்தல் அற்ற நடுநிலைமை பேணும் சீரான நிலைப்பாடும் இதுவே. மனித உணர்வுகளை அவை மரித்துப் போகச் செய்வதில்லை. இந்த அடிப்படை நியதியை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதன் மூலம் இறை மார்க்கத்தின் நோக்கங்களுக்கிடையில் சமநிலை பேணப் படல் வேண்டும். இதுபற்றி அல்குர்ஆன் பல இடங்களில் சுட்டிக் காட்டி யுள்ளது.

''(உலோபியைப் போல் எதுவும் வழங்காது) உம் கையை உம் கழுத்தில் கட்டப்பட்டதாக்கிக் கொள்ளாதீர்; அன்றியும், (அனைத்தையும் செலவழித்து உம் கையை) ஒரே விரிப்பாக விரித்தும் விடாதீர்; அதனால் நீர் நிந்திக்கப்பட்டவராகவும், (கையில் எதுவுமில்லாது) துக்கப்பட்டவராகவும் அமைந்து விடுவீர்.'' (அல் இஸ்ரா: 29)

''ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள்; உண்ணுங்கள், பருகுங்கள்; எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (அல் அஃராப்: 31)

உன் நடையில் நடுத்தரத்தை மேற்கொள்; உன் குரலையும் தாழ்த்திக் கொள்; குரல்களி லெல்லாம் வெறுக்கத்தக்கது நிச்சயமாக கழுதையின் குரலேயாகும். (லுக்மான்: 19)

அவ்வாறெனில், இஸ்லாம் மார்க்கமானது மனித உணர்வுகளின் தேவைகள் விடயத்தில் சமநிலை தவறாத ஒரு வழிகாட்டலை வழங்குகிறது. அதாவது, மனிதன் செல்வத்தை விரும்பும் இயல்பு கொண்டவன். இஸ்லாம் அவ்வியல்பை அடியோடு கிள்ளியெறிவதற்காக அருளப்படவில்லை. மாறாக பேராசை, வீண்விரயம் போன்றவற்றை இல்லாதொழித்து செல்வத்தை விரும்பும் இயல்பை நெறிப்படுத்தவே அது முயற்சிக்கின்றது. அதற்காகவே அது அருளப்பட்டது.

அவ்வாறே இஸ்லாம் மார்க்கமானது அழகிய காட்சிகளையும் இனிய ஓசைகளையும் விரும்புகின்ற மனித இயல்பை இல்லாதொழிக்க முயற்சிப்பதில்லை. அதனை தீமைகள் அற்ற விதத்தில் நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துவதற்காகவே அது அருளப்பட்டது. மேலும், கவலை என்ற உணர்வை பிடுங்கி எறிவது இஸ்லாத்தின் நோக்கமல்ல. மாறாக பொறுமையிழத்தல், பதற்றம் என்பவற்றைத் தவிர்த்து மனிதன் தனது கவலையை வெளிப்படுத்துவதை அது அனுமதிக்கின்றது. மனிதனுடைய ஏனைய உணர்வுகள், இயல்புகள் குறித்தும் இஸ்லாம் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது.

இந்த உணர்வுகளை இறைமார்க்கம் எதிர்பார்க்கின்ற அமைப்பில் நெறிப்படுத்துகின்ற பொறுப்பை அல்லாஹ் மனித அறிவுக்கு வழங்கியிருக்கின்றான். ஒரு மனிதன் அழகிய குரலை, இனிய சந்தத்தை ஒரு பிராணியிடமிருந்து அல்லது மனிதனிடமிருந்து, அல்லது ஏதும் கருவியிலிருந்து செவிமடுத்தால் அல்லது அவற்றைக் கற்றுக்கொள்வதில் ஈடுபட்டால் அவன் தனது இயல்பின் தேவையை நிறைவேற்றியவனாகிறான். இவை மார்க்கக் கடமைகளையும் நற்பண்புகளையும் அவனது அந்தஸ்துக்குப்

பொருத்தமான ஸ்தானத்தையும் விட்டு அவனை திசை திருப்பிவிட வில்லை என்றால் அவன் தனது உணர்வுகளையும் இயல்பையும் நெறிப் படுத்திக் கொண்ட, சீரான பாதையில் பயணிக்கின்ற, அல்லாஹ்வாலும் மனிதர்களாலும் பொருந்திக் கொள்ளப்பட்ட மனிதனாக ஆகிவிடுவான்.

இவ்விளக்கத்தின்படி ஐநேரத் தொழுகையை உரிய நேரத்தில் நிறை வேற்றுவதிலும் தனது பொறுப்புக்களைச் சரிவரச் செய்வதிலும் தீவிர ஆர்வம் காட்டுவதோடு இசை கற்பதிலும் ஈடுபாடு கொண்டுள்ள இவ் விளைஞனின் நிலைப்பாடு தொடர்பான இஸ்லாமியச் சட்டம் தெளி வாகிறது. உண்மையில் இந்த நிலைப்பாடு மனித உணர்வுகளை, அவனது அறிவு மற்றும் இறைமார்க்கத்தின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப நெறிப்படுத் தியதன் விளைவாக உருவானதாகும். மனித வாழ்வில் மனிதர்களிடமிருந்து இறைமார்க்கம் இதனைத்தான் எதிர்பார்க்கின்றது.

### பாடல் கேட்பதுபற்றி புகஹாக்கள் முன்வைக்கும் கருத்துக்கள்

இசை மற்றும் மனித இயல்பு விரும்புகின்ற ஏனைய அம்சங்கள் பற்றிய மார்க்கத்தீர்ப்பைப் புரிந்துகொள்ள இந்த விளக்கம் போதுமானது. என்றா லும், மனிதர்களில் பலருக்கு இவ்விளக்கம் போதுமானதாய் இருக்காது. ஹராம் ஹலால் பற்றி அறிந்துகொள்வதற்கான இவ்வகை வழிகாட்டல் களை சிலர் நம்பாமல் இருக்கவும் கூடும். புத்தகங்களில் எழுதப்பட்டிருப் பவற்றையும் புகஹாக்களின் கருத்துக்களையும் அடுக்கடுக்காய் முன்வைப் பதே அத்தகையவர்களை திருப்திப்படுத்தும். அவ்வாறெனில் அவர்கள் அறிந்துகொள்ளட்டும்;

ஹஜ்ஜுக்கு ஆர்வமூட்டுவதற்காகவும் ஜிஹாதில் கலந்துகொள்ளத் தூண்டுவதற்காகவும், பெருநாட்கள், திருமணம் போன்ற மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பங்களிலும் காணாமல் போயிருந்த ஒருவர் மீண்டும் வந்த சந்தர்ப் பத்திலும் இதுபோன்ற வேறு நிலைமைகளிலும் பாடல் பாடுவதும், அதனை செவிமடுப்பதும் ஆகுமானதாகும் என்பது புகஹாக்களின் ஏகோபித்த கருத் தாகும். இதற்கு அப்பால் அவர்கள் பாடலும் இசையும் குறித்து இரு விதமான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றனர். அவற்றில் ஒன்று: பாடலும் இசை யும் ஹராமாகுமென ஹதீஸ்களை ஆதாரம் காட்டி நிறுவுகிறது. மற்றையது: ஹதீஸ்களை ஆதாரம் காட்டியே பாடலும் இசையும் ஹலால் என நிறுவுகிறது. ஹலால் என்று வாதிடுவோர் பின்வருமாறும் கருத்து தெரிவிக் கின்றனர்.

‘‘இறைவேதத்திலோ அவனது தூதருடைய சுன்னாவிலோ கியாஸ் போன்ற ஏனைய மார்க்க அடிப்படைகளிலோ கருவிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படுகின்ற இசைவான நல்ல ஓசைகளை செவிமடுப்பது

ஹராம் என்று நிறுவப் போதுமான ஆதாரங்கள் இல்லை''. மேலும் இவர்கள் பாடல் ஹராமாகும் என்று கூறுவோர் ஆதாரமாக முன் வைக்கும் அனைத்து ஹதீஸ்களையும் ஆராய்ந்து அவற்றில் ஒன்றுகூட ஸஹீஹான தல்ல என்று நிரூபித்துமிருக்கின்றனர்.

**அஷ்ஷெய்க் அந்நாபுலுசி (றஹ்) அவர்களின் கருத்து:**

ஹிஜ்ரி 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஃபுகஹாக்களில் ஒருவரும் தக்வாவும் பேணுதலும் உடையவர் என நன்கு அறியப்பட்டவருமான அஷ் ஷெய்க் அப்துல் கணீ அந்நாபுலுஸீ அல் ஹனஃபி (றஹ்) அவர்கள் இவ்விட யம் குறித்து எழுதிய, ''இசை கேட்டலுக்கான ஆதாரங்களை தெளிவு படுத்தல்'' எனும் ஆய்வை வாசித்தபோது, இசைகேட்பது ஹராம் என்று கூறுவோர் ஆதாரமாகக் கொள்ளும் ஹதீஸ்கள்-ஸஹீஹானவை என்று எடுத் துக் கொண்டாலும் கூட- அவை கேளிக்கைகளையும் ஒழுக்கவீனத்தையும் ஒன்றாக இணைத்தே பேசியுள்ளன. அவற்றில் ஒரு ஹதீஸ்கூட மேற்படி விடயங்களை இணைத்துப் பேசாததாக இல்லை.

அவ்வகையில் மனிதனுக்கு மகிழ்வூட்டும் இசையானது, திட்டவட்டமா கவே ஹராமான விடயங்களோடு இணைந்ததாக அல்லது ஹராமான காரி யங்களில் மனிதன் ஈடுபடத் தூண்டும் அல்லது வீழ்த்திவிடும் காரணியாக இருந்தால் ஹராமாகும். அவ்வாறு ஹராம்களில் மனிதனை வீழ்த்தாததாக அது இருக்குமாயின் அதனை செவிமடுப்பதும் அது இசைக்கப்படும் சபை களுக்குச் செல்வதும் அதனைக் கற்பதும் ஆகுமானதாகும். வெட்கமின்மை யும் ஹராமும் கலக்காத இசையும் பாடலும் இசைக்கப்பட்ட சபைகளுக்கு நபி (ஸல்) அவர்களும் ஏராளமான ஸஹாபாக்களும் தாபிஈன்களும், இமாம் களும் புகஹாக்களும் சமூகமளித்தனர். அவற்றை செவிமடுத்தனர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதிகமான புகஹாக்கள் இந்த முடிவுக்கே வந்துள்ளனர். மனிதனின் இயல்பான உணர்வுகள் குறித்த இஸ்லாம் மார்க்கத்தின் நிலைப்பாடு இதுவே.

**அஷ்ஷெய்க் ஹஸன் அல் அத்தார் (றஹ்) கூறுவதாவது:**

ஹிஜ்ரி 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரும் அல் அஸ்ஹர் சர்வகலா சாலையின் தலைவராக இருந்தவருமான அஷ்ஷெய்க் ஹஸன் அல் அத்தார் (றஹ்) அவர்கள் இசை கேட்பதில் ஆர்வம் கொண்டிருந்ததோடு அது பற் றிய அடிப்படைகளை நன்கு அறிந்தவராகவும் இருந்தார். அவர் கூறுவதா வது; நதிக்கரைகளில் மரங்களின் நிழலில் இசைக்கருவிகளின் நரம்புகள் இசைக்கும் மெல்லிய கவிதைகளை ரசிக்கத் தெரியாதவன் கடின சித்தம் கொண்டவனும் கழுதைக்கு நிகரானவனுமாவான்.

## இசை கேட்டல் அடிப்படையில் ஹலாலானது. வேறு காரணங்களின் நிமித்தமே அது ஹராமாக மாறுகின்றது

அழகிய ஓசையும் சந்தமும் கொண்ட இசையை செவிமடுப்பது - அது கருவிகளின் அல்லது மனிதர்களின் அல்லது விலங்குகளின் ஓசையாக இருக்கிறது என்பதற்காக - ஹராமாகமாட்டாது. ஆனால், அதனை ஹராமான ஒரு காரியத்தைச் செய்வதற்குத் துணையாகக் கொண்டால் அல்லது ஹராமான ஒன்றின்பால் இட்டுச் செல்லும் வழிமுறையாக அதனைக் கொண்டால் அல்லது கடமைகளை விட்டும் அது மனிதனது கவனத்தைத் திருப்பிவிட்டால் ஹராமானதாக மாறும்.

இதுபோன்ற விடயங்களில் அல்லாஹ்வின் தீர்ப்பை மனிதர்கள் இவ்வாறு தான் புரிந்துகொள்ள வேண்டும். இதன்பிறகு இத்தகைய விடயங்கள் குறித்து ஹலால் என்றும் ஹராம் என்றும் மொத்தமான பத்வாக்கள் வழங்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும். ஏனெனில், அல்லாஹ் ஹராமாக்காத ஒன்றை ஹராமாக்குவதும் அல்லது அவன் ஹராமாக்கியதை ஹலாலாக்குவதும் ஆகிய இரண்டுமே, அல்லாஹ் கூறியதாக வேண்டுமென்றே இட்டுக் கட்டுவதும் அறிவின்றி அல்லாஹ்வுக்கெதிராகப் பேசுவதுமாகும்.

''என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான, மானக்கேடான செயல்கள்; பாவங்கள்; நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்வது ஆதாரமில்லாமலிருக்கும் போதே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைகற்பித்தல், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுவது (ஆகிய இவையே என்று நபியே!) நீர் கூறுவீராக.'' (அல் அஃராப்: 33)

பாடல் அல்லது கேளிக்கை அல்லது பாடல் கேட்டல் குறித்த சட்டத் தீர்ப்பு இதுதான். பாடல் என்பது வார்த்தைகளும் சந்தங்களும் இசையுமாகும். அவற்றில் சிறந்தவை சிறந்தவையாகும். மோசமானவை மோசமானவையாகும். நபியவர்களின் வீட்டில் இரு யுவதிகள் பாடியதை ஆண்கள் செவிமடுத்தது முதலே, ஸஹாபாக்களின் வீடுகளில் பாடல்கள் இசைக்கப்பட்டது முதலே அது ஆகுமானது என்பது மார்க்கமாகிவிட்டது. எமது காலத்தில் வாழ்ந்தவரான இமாம் அஷ்ஷெய்க் ஷல்தூத் (றஹ்) அவர்களின் ஃபத்வாவும் கூட அதனையே வலியுறுத்துகின்றது.

மேலே நாம் குறித்த பாடல் பற்றிய மார்க்கச் சட்டத்தையும் ''பொதுவாகவே அது ஹராமாகும்'' என்ற பிழையான முடிவுக்கு வரத்தூண்டிய காரணிகளையும், அம்முடிவுக்கு வர ஆதாரமாய் எடுத்துக் கொள்ளப்பட்ட

இஸ்னாதிலும் (அறிவிப்பாளர் வரிசை) மதனிலும் (ஹதீஸின் விடய தானம்) குறையுடைய விமர்னசத்துக்குட்பட்ட ஹதீஸ்களையும் எடுத்து நோக்கினோம். மேலும் பாடல்கள் அடிப்படையில் ஹலாலாகும் என்ப தற்கும் அந்த அசல் தன்மையிலிருந்து அவற்றை வெளியேற்றி ஹராமாக ஆக்கிவிடுகின்ற காரணிகளைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட குளறுபடி களையும் பாடல் பொதுவாகவே ஹராமாகும் என்ற முடிவு பெறப்பட்ட தனால் விளைந்த ஆபத்துக்களையும் நாம் விளக்கினோம்.[20] மிகவும் தூய்மையானவனான அல்லாஹ்வே அனைத்தையும் அறிந்தவன்.

## கலைகள் பற்றிய ஒரு பொதுப் பார்வை

***அம்மான் நகர சுல்தான் காபூஸ் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் 1997 ஆம் ஆண்டு கலாநிதி முஹம்மத் இமாரா அவர்கள் நிகழ்த்திய விரிவுரை***

எல்லாப் புகழும் அகிலங்களின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே. சாந்தியும் சமாதானமும் அதி கண்ணியத்துக்குரிய இறைதூதர் எங்கள் தலைவர் முஹம் மத் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர், தோழர்கள் மீதும் அவர்களது வழிகாட்டலைப் பின்பற்றி அவர்கள் சென்ற பாதையில் பயணித்த, இறுதிநாள்வரை பயணிக்க இருக்கின்ற அனைவர் மீதும் உண்டாவதாக!

மதிப்புக்குரிய சகோதர, சகோதரிகளே! அல்லாஹ்வின் சாந்தியும் அருளும் அபிவிருத்திகளும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

பயன்மிக்க இச்சந்திப்பின் ஆரம்பத்தில், உங்களை சந்திக்கக் கிடைத்த இந்த அரிய வாயப்புக் குறித்து எனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள் கிறேன். முஸ்லிம் தேசத்தின் மதிப்புக்குரிய ஒரு நிலப்பகுதிக்கு வந்திருப்ப தாக நான் உணர்கிறேன். உங்கள் நாட்டுக்கான எனது முதலாவது வருகை யாக இது இருந்தாலும் அறபு முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கத்தவன் -அதன் விவகாரங்களில் அக்கறையுள்ளவன்- என்றவகையில் உங்கள் நாடு எனது உணர்வுகளுடன் ஒன்றித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு வழங்கப்பட்டுள்ள தலைப்பு இஸ்லாமும் அழகியல் கலைகளும் என்பதாகும். இது அறபு-முஸ்லிம் சிந்தனைப் பரப்பில் பெரும் வாதப்பிரதிவாதங்களை கிளறிவிட்டுள்ள ஒரு விவகாரம் என்பதனை நீங்கள் அறிவீர்கள். நாம் வாழும் இந்நவீன யுகத்தில் மாத்திரமல்ல, பல நூற்றாண்டுகளாக எமது பாரம்பரியத்தில் இவ்விவாதம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றது. எனது இந்தச் சிற்றுரையில் இவ்விடயம் குறித்தும் இதுபோன்ற ஏனைய விடயங்கள் குறித்துமான இஸ்லாம் மார்க்கத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் ''அழகியல் கலைகள்'' பற்றிய அடிப்படைகளை முஸ்லிமின் அறிவும் உணர்வுகளும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறு காய்தல் உவத்தலின்றி முன்வைக்க நாடுகின்றேன்.

முதலில் இந்த விடயம் குறித்த இஸ்லாமியப் பார்வையை வரையறை செய்துகொள்ள வேண்டும் என நினைக்கிறேன். இஸ்லாம் மார்க்கமானது மனிதனது அனைத்து நடவடிக்கைகளையும் இபாதாத்துக்களாக, மனிதன் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டுச் செய்யும் காரியங்களாக கணிக்கிறது என்பதை நாமறிவோம்.

''நபியே கூறுவீராக! எனது தொழுகையும் ஏனைய கிரியைகளும் வாழ்வும் மரணமும் உலகங்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே'' (அன்ஆம்: 162) என இது பற்றி அல்குர்ஆன் கூறுகிறது.

எமது ஃபுகஹாக்களும் உலமாக்களும் மார்க்கச் சட்டங்களை, இபாதத் (வணக்க வழிபாடுகள்), முஆமலாத் (மனித நடவடிக்கைகள்) என இரண்டாக வகைப்படுத்தியிருக்கிறார்கள். அழகியல் கலைகள் குறித்த எமது ஆய்வுக்கு இவ்வகைப்படுத்தல் மிக முக்கியமானது. ஏனெனில், வணக்க வழிபாடுகள் மார்க்கம் விதியாக்கியவையாக, ஏற்படுத்தியவையாக இருத்தல் வேண்டும். மார்க்கம் சொன்ன அளவில், முறைமைகளில் அவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும், நிறைவேற்ற வேண்டும். ஆனால், மனித நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் அவை மார்க்கம் விதியாக்கியவையாக இருக்க வேண்டியதில்லை. மார்க்கச் சட்டவிதிகளுக்கு வரையறைகளுக்கு முரணில்லாதவகையாக இருந்தால் போதுமானது.

இவ்விடயங்கள் ஒவ்வொன்றும் குறித்த இஸ்லாமியப் பார்வையைப் புரிந்து கொள்ள இந்த அடிப்படை மிகவும் இன்றியமையாதது. இதுபற்றி அதிகமான இஸ்லாமிய அறிஞர்கள் விளக்கியுள்ளனர். உதாரணமாக அரசியல் பற்றி விளக்கும்போது, ''அரசியல் என்பது மக்களை பாவச் செயல்களை விட்டும் தூரமாக்கி நன்மையான காரியங்களில் ஈடுபடுத்துவதற்கான திட்டங்களாகும். அவைபற்றி அல்லாஹ்வும் அவனது தூதரும் நேரடியாக எதையுமே கூறியிருக்காவிட்டாலும் கூட, அவை சட்டபூர்வமானவையாகும்'' என்று கூறியுள்ளனர்.

அவ்வாறெனில் மனித நடவடிக்கைகள், அவனது வாழ்வியல் அம்சங்கள் இபாதாத் எனப்படும் அடிப்படை வணக்க வழிபாடுகளின் வகையில் அடங்கமாட்டா. அவை ஹலால் அல்லது ஹராம் என்று மார்க்கம் சொல்லியிருக்கிறதா? என்று நாம் தேடிப்பார்க்க வேண்டியதில்லை. அவை மார்க்கச் சட்டங்களுக்கு முரண்படுகிறதா? இல்லையா? என்றுதான் பார்க்க வேண்டும். அவ்வாறு முரண்பட்டால் மாத்திரமே அவற்றைப் புறந்தள்ள வேண்டும். அழகியல் கலைகள் குறித்த இஸ்லாமியப் பார்வையைத் தெரிந்துகொள்ள இந்த அடிப்படையை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அழகியல் கலைகள் அனைத்தும் பொதுவாகவே ஆகுமானவை. இஸ்லாம் மார்க்கம் அந்த நிலைப்பாட்டைத்தான் கொண்டிருக்கிறது என்று நான் சொல்லவில்லை. மாறாக அக்கலைகள் மார்க்கச் சட்டங்களுக்கு முரண்படவில்லையென்றால் ஆகுமானவையாகும் என்றே கூறுகிறேன்.

இரண்டாவதாக: கலை என்றால் என்ன? என்பதை வரையறுத்துக் கொள்ள வேண்டும். சுருக்கமான வார்த்தைகளில் சொல்வதாயின் அது ஒரு திறமை/ஆற்றல்/நிபுணத்துவம் எனலாம். அது எத்தகைய திறமையாக இருந்தாலும் சரியே. அது நல்லதா? கெட்டதா? பண்பாடு சார்ந்ததா? பண்பாட்டுக்கு விரோதமானதா? என்றெல்லாம் ஆராயத் தேவையில்லை. அதாவது ஏதேனும் ஒரு திறமை/ஆற்றல்/நிபுணத்துவம், யாரிடமாவது காணப்பட்டால் அது ஒரு கலையாகும் என்பதே கலை பற்றி நிலவும் பொதுவான கருத்தாகும். எனவே, கலைகள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு பற்றிப் பேசும்போது இப்பொதுக் கண்ணோட்டத்தில் பேசக் கூடாது என்பது கட்டாயமாகிறது.

### இஸ்லாமிய நோக்கில் கலை

இஸ்லாமிய நோக்கிலும் கலை என்பது ஒரு திறமையாகும்/ஆற்றலாகும். ஆனால், எல்லாவகையான திறமைகளையுமே இஸ்லாம் கலை என்று அழைப்பதில்லை. நல்ல ரசனையுணர்வு, நன்மையை விரும்பும் சீரிய இயல்பு ஆகியவற்றால் நெறிப்படுத்தப்பட்ட திறமைகளே கலை எனப்படுகின்றன. அது, மனித உள்ளத்தில் மறைந்திருப்பவற்றை, அதன் தன்மைகளை வெளிக்காட்டுகின்ற அவனது திறமைகளாகும். வேறு வார்த்தையில் கூறுவதாயின், இப்பிரபஞ்சத்தில் உள்ள அழகை உணர்ந்துகொள்வதற்கான மனித முயற்சியே கலையாகும். பிரபஞ்சத்தில் இந்த அழகைப் படைத்தவன், அதனை அங்கு அளவின்றிச் சொரிந்தவன் அல்லாஹ் ஆவான். எனவே, அழகு எனும் அந்த அருட்கொடையை நுகராமலும் அனுபவிக்காமலும் இருந்தால், ஒரு முஸ்லிம் தனக்கு அல்லாஹ் சொரிந்துள்ள

அழகு என்னும் அருட்கொடைக்காக அவனுக்கு நன்றி செலுத்தாதவனாக ஆகிவிடுவான்.

இஸ்லாம் கலைகளை வெறுக்கிறது என்ற எண்ணத்தில் கலைகள் விடயத்தில் கடினபோக்கு காட்டுவோர் இப்பிரபஞ்சத்தில் கொட்டிக்கிடக்கின்ற அழகை உய்த்துணர்வதற்கான வாயில்களை மூடிக் கொள்கின்றனர். இதனால் அவர்கள் அழகு என்னும் இந்த அருளுக்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாதவர்களாக ஆகிவிடுகின்றனர். அவ்வாறு இருக்க அவர்கள் விரும்பாவிட்டாலும் கூட. அதாவது பைத்தியக்காரன் 'அறிவு' என்னும் அருளுக்காக அல்லாஹ்வுக்கு எப்படி நன்றி செலுத்துவான்?! ஏனெனில், அவனிடம் அறிவு இல்லை எனும்போது, அந்த அருள் அவனுக்கு வாய்க்காதபோது அவன் எப்படி அதன் பெறுமதியை உணர்ந்து அதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த முடியும்?! இப்பிரபஞ்சத்தில் கொட்டிக் கிடக்கும் அழகின் அத்தாட்சிகளுக்கு புறமுதுகு காட்டுவோர், அல்லாஹ் சொரிந்திருக்கின்ற அந்த அருளின் பெறுமதியை எப்படி உணர முடியும்?! எனவே, கலைகள் தொடர்பான இஸ்லாத்தின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள இந்தத் தர்க்கவியல் நுழைவு இன்றியமையாதது. உண்மையில் இஸ்லாம் மார்க்கம் கூறியுள்ள வழிமுறையும் ஒழுங்கும்கூட இதுதான்.

கலை என்பது ஒரு திறமையாகும். என்றாலும் நான் மேலே கூறியது போல இந்தத் திறமையானது பண்பாடுகளுக்கு இயைபானதாக அல்லது பண்பாடுகளுக்கு முரணானதாக இருக்க முடியும். இஸ்லாம் மார்க்கமானது பண்பாடுகளுக்கு முரணில்லாத திறமைகளையே கலை என அங்கீகரிக்கும். முஸ்லிம் தத்துவஞானிகளுள் ஒருவரான இப்னு ஸீனா முன்வைக்கும், ''பண்பாட்டுக்கு இயைபாக இருப்பவையே அழகானவையாக கருதப்படும்'' என்ற கருத்து இவ்விடத்தில் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். இக்கருத்தோடு ரஷ்ய ஆய்வாளர் பிளென்ஸ்கியும் (மரணம் கி.பி. 1848) உடன்படுகிறார். இவ்விவகாரத்தின் மையப்புள்ளி இதுதான்.

எந்தவொரு சமூகத்திலாயினும் கலையானது பண்பாட்டு ரீதியான நோக்கங்களைக் கொண்டிருக்குமாயின் இஸ்லாம் அதனை ஏற்றுக்கொள்ளும். அதற்கு ஆசீர்வாதம் வழங்கும். ஆனால், கலையானது தடம்புரண்டு இன்றைய சில சமூகங்களில் நடந்திருப்பதுபோல-ஆபாசமும் ஒழுக்க வீழ்ச்சியும் பாவகாரியங்களும் கலந்து -மனிதனின் சீரிய இயல்பைக் கெடுத்து அவனை மிருகமாக மாற்றிவிடுமாயின், அவனது ஆன்மீக ஈடுபாட்டையும் உயர் பெறுமானங்களையும் சிதைத்து விடுமாயின் அவை கலையாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. ஏனெனில், அவை பண்பாடு சார்ந்தவையாக இல்லை. அதற்கு விரோதமாகவே இருக்கின்றன.

## இன்றைய முஸ்லிம்களும் கலைகளும்

அத்தோடு இங்கு நாம் மற்றொரு வினாவுக்கும் விடைதேட வேண்டும். முஸ்லிம்களும் அறபிகளும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் யதார்த் தத்தில், எத்தகைய கலை எமக்குத் தேவை? என்பதே அது.

அச்சுறுத்தல்கள் எதுவுமில்லாத ஒரு சமூகம், உள்ளிருந்தோ வெளி யிலிருந்தோ சவால்கள் எதனையும் எதிர்நோக்காத ஒரு சமூகம் அத்தகைய பாதுகாப்பான சூழ்நிலையில் பல்வேறு வகையான இன்பங்களையும் சொகுசுகளையும் அனுபவிப்பது அந்த சமூகத்தின் இருப்புக்கும் நிலை பேற்றுக்கும் பெரிய ஆபத்துக்களை, அச்சுறுத்தல்களை விளைவிக்க மாட் டாது. ஆனால், சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கிக் கொண் டிருக்கும் ஒரு சமூகம் இத்தகைய இன்பங்களில் கவனக் களைப்பான்களில் மூழ்கிவிடுவது அதன் அழிவுக்கே வழிகோலும். எனவே, இந்தப் பின்னணி யில் எங்களுக்கு எத்தகைய கலைகள் தேவைப்படுகின்றன என்பது மிக முக்கியமானதாகும். (ஏனெனில், நாம் முஸ்லிம்கள் என்றவகையில் எமது அத்திவாரத்தையே ஆட்டம் காணச் செய்துகொண்டிருக்கும் பல சவால் களை இன்று எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, இது நாம் இன்பங்களில் மூழ்கிவிடுவதற்கான தருணம் அல்ல)

இக்கேள்விக்கு விடையளிக்க இன்னுமொரு கேள்வியையும் நாம் கேட்டாக வேண்டும். அதாவது, ''முஸ்லிம்களாகிய நாம் எத்தகைய மனிதர் களை உருவாக்க விரும்புகின்றோம்?'' என்பதே அது. நாம் இன்று வாழ்வது போன்ற ஒரு யதார்த்தத்தில் எண்ணற்ற ஆபத்துக்களுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். அவை எமது வீடுகளுக்குள்ளால் புகுந்து எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே, கட்டற்ற இன்பங்களையும் கேளிக்கைகளையும் இன்று நாம் எமது பிள்ளைகளுக்கு திறந்து விட முடியாது. ஆனால், இஸ்லாமிய வரலாற்றில் எமது பாரம் பரியத்தில் அபூநவாஸ் போன்றவர்கள் மதுவையும் காதலையும் பெண் கவர்ச்சியையும் ஒழுக்கயீனத்தையும் போற்றிப்பாடிய பாடல்கள் காணப் படுவதை சுட்டிக் காட்டும் சிலர் எமது முன்னோர் அவைபற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாதபோது இன்று நீங்கள் ஏன் இவற்றை தடை செய்கி றீர்கள்? உங்களது உள்ளங்கள் ஏன் அவ்வளவு குறுகியவையாக இருக் கின்றன? என்று கேள்வி கேட்கின்றனர்.

இவர்களுக்கு நான் சொல்லும் பதில், அபூநவாஸ் போன்றவர்கள் வாழ்ந்த காலத்தில் இஸ்லாமிய அரசானது மிகவும் பலம்வாய்ந்த வல்லர சாக இருந்தது. ஆபத்துக்கள் எதுவும் அதனைச் சூழ்ந்திருக்கவில்லை. அதற்கு முன்னால் பெரும் சவால்களும் இருக்கவில்லை. எனவே, இத்

தகைய சூழலில் சிற்றின்பக் கலைகளும் இலக்கியங்களும் முஸ்லிம் சமூகத்தின் இருப்பைப் பாதிக்கவில்லை. எனவேதான், அன்று அவை பற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளப்படவில்லை.

அது மாத்திரமன்றி அந்தக் காலத்தில் அபூநவாஸின் இலக்கியங்களை வாசிப்பதற்கும் யாரும் இருக்கவில்லை. ஏனெனில், அன்று அச்சகங்களோ, வானொலி, தொலைக்காட்சி, இண்டர்நெட் போன்ற ஊடகங்களோ இருக்கவில்லை. அபூ நவாஸின் இலக்கியங்களை, அவை தேவையென்று தேடிச் சென்றவர்கள் மாத்திரமே வாசிக்க, கேட்க முடிந்தது. ஆனால், இன்று நிலைமை அவ்வாறல்ல. சக்திவாய்ந்த தொடர்புசாதனங்கள் இருக் கின்றன. தொடர்பாடல் துறையில் பெரும் புரட்சி நிகழ்ந்துள்ளது. மக்கள் நித்திரை கொள்ளும் அறைகளுக்குள் அவர்களின் அனுமதியின்றியே செய்திகளும் விவரணங்களும் உட்புகுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது.

ஆனால், இந்தக் கலையானது ஆபாசமும் பாவகாரியங்களும் ஒழுக்க வீழ்ச்சியும் விபச்சாரமும் என்று மாறி இந்த ஊடகங்கள் அவற்றை சமூகத் தில் பொதுவாக பரப்பிவிட்டன என்றால் அதன் பாரதூரத்தை என்னென் பது?! எனவே, அறபு, முஸ்லிம் சமூகத்தில் இந்த ஒழுக்கவீழ்ச்சியைப் போற்றுகின்ற ஒரு சிறுபிரிவினர் இருப்பதனால், மிகச் சிறிய சந்து களினூடாக அவை இந்த சமூகத்தினுள் புகுவதை தவிர்க்க முடியாமல் இருக்கலாம். ஆகவே, எமது மொத்தக் கலைகளினதும் அடிப்படைப் பண்பாக குறியீடாக (Brand) இவ்வொழுக்கயீனங்கள் இருப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இவை எமது இளைஞர்கள் மீதும் யுவதிகள் மீதும் மக்கள் மீதும் பலவந்தமாக திணிக்கப்படுமாயின் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ஏனெனில், நாம் இன்று இருக்கும் நிலையில் எமது சமூகத்தைப் பற்றிய இந்தப் பற்றுதல், கவன உணர்வு மிக மிக இன்றியமையாதது.

இங்கே நாம் தீர்மானிக்க வேண்டிய விடயம், மதுவையும் காதலையும் பற்றிய அபூநவாஸின் பாடல்கள் பற்றியதோ, ஆடைதுறந்த கலை வடிவங் கள் பற்றியதோ, கலை என்ற பெயரில் எமது சமூகத்தின் தூய அடிப்படை கள் மீதும் கௌரவத்தின் மீதும் தொடுக்கப்படுகின்ற அத்துமீறல்கள் பற்றியோ அல்ல. எத்தகைய கலைகள் எங்களுக்குத் தேவை என்பதைப் பற்றியாகும். இக்கேள்விக்கு விடைகாண எத்தகைய மனிதர்களை நாம் உருவாக்க விரும்புகிறோம்? என்ற கேள்விக்கு முதலில் விடைகாண வேண்டும்.

இன்று நாம், எமது சமூகத்தின் இருப்பையே அச்சுறுத்தலுக்குட்படுத்தி யிருக்கின்ற, காட்டுமிராண்டித்தனமான பல சவால்களுக்கு முகம்கொடுக் கின்றோம். எனவே, இவற்றை எதிர்கொண்டு, முறியடிக்கும் ஆற்றல் கொண்ட தனிமனிதர்களே இன்று எமக்குத் தேவைப்படுகின்றனர்.

எனவே, கலைகள் பண்பாட்டுக்கு முரணில்லாதவையாக, உண்மையில் அழகானவையாக அமைந்து, அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்பாடு செய்து வைத்துள்ள அழகின் அத்தாட்சிகளை மனிதன் உணரச் செய்பவையாகவும் இருந்தால் இஸ்லாம் ஒருபோதும் அதற்கு எதிராக நிற்கமாட்டாது. மனித இயல்பின் அடிப்படையில் நோக்கும்போது, இஸ்லாம் மனித இயல்பின் மார்க்கமாகும் என்றவகையில்- தோட்டங்களில் மரங்கள் எழுப்புகின்ற அழகிய ஓசைகளை செவிமடுப்பது ஹராம் என்று யாரும் சொல்ல மாட்டர். குயில்போன்ற பறவைகள் எழுப்புகின்ற அழகிய ஓசைகளை ரசிப்பது ஹராம் என்றும் யாரும் சொல்ல மாட்டர். அவ்வாறெனில் பறவைகளின் தொண்டைகளிலிருந்து வெளிவரும் ஓசைகள் ஹராமானதல்ல.

ஆனால், மனிதனின் தொண்டையிலிருந்து வெளிவரும் ஓசைகள் மாத்திரம் ஏன் ஹராமானவையாக ஆகின்றன? ஒரு இசைக் கருவியில் மனிதன் உருவாக்கும் அழகிய ஓசையை (இசையை) ஹராம் என்கின்றோம். ஆனால், மரங்களின் இலைகளும் கிளைகளும் அந்த இசையை எழுப்பினால் அதனை ஏன் ஹராம் என்று சொல்வதில்லை? இவை அனைத்துமே ஒத்த ஓசைகள்! ஒத்த இசைகள்! அழகை மனிதன் வெளிப்படுத்தினால், ஹராமாகிவிடுகின்றது. ஆனால், பறவைகளோ மரங்களோ வெளிப்படுத்தினால் ஹராமாகுவதில்லை. அது ஏன்?

மேலும் (சிலர் ஹராம் என்று கூறுகின்ற) இசை என்றால் என்ன? என்பதையும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். இசைவான சந்தங்களும் ஓசைகளுமே இசை எனப்படுகின்றன. அவ்வாறெனில் ஒன்றுக்கொன்று முரணான இசைவற்ற ஓசைகளை ஹராம் என்று கூறாமல் இசைவான ஓசைகளை மாத்திரம் ஹராம் என்று ஏன் கூறுகின்றனர்? வெறுக்கத்தக்க ஓசைகளை ஹராம் என்று கூறாமல் அழகிய ஓசைகளை மாத்திரம் ஹராம் என்று ஏன் கூறுகின்றனர்? மனித இயல்பின் அடிப்படையில் பார்க்கும்போது அழகை உணர்வதும் அதனை நுகர்வதும் ரசிப்பதும் மனிதனது ஆற்றல்களை வளர்த்து நெறிப்படுத்துமாகையால் அவை ஹராம் என்று கூறுவதற்கு எந்த நியாயமும் இல்லை.

வேறு சிலர் ரபானைப் பாவித்து இசைப்பது ஹலால் என்றும் அது அல்லாத ஏனைய இசைக்கருவிகளால் உருவாக்கப்படும் இசைகள் ஹராம் என்றும் கூறுகின்றனர். உண்மையில் இது இவர்களது அறிவில் ஏற்பட்டுள்ள ஒரு கோளாறாகும். ஏனெனில், இங்கு இவர்கள் கருவியையும் விளைவையும் வேறுபடுத்தி நோக்கி குழம்பிப் போயுள்ளனர். உதாரணமாக ஒருவர் ஹஜ் செய்ய நாடினால் மக்கா செல்வதற்கான போக்குவரத்து சாதனங்கள் கருவிகளாகும். அவைதான் இப்பயணத்தின் விளைவு,

நோக்கம் அல்ல. ஹலாலான பணத்தை உபயோகித்து வசதியான ஏதாவது போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தி ஹஜ்ஜை நிறைவேற்ற முடியும். ஹராம், ஹலால் என்ற பிரச்சினை இப்போக்குவரத்து சாதனங்களைப் பொறுத்து ஏற்படுவதில்லை. எனவே, போக்குவரத்து சாதனங்களைப் பற்றி கதைத்து ஹஜ்ஜை வீணாக்கிக் கொள்வதா?

'ரபான்' ஒருவித ஓசையை எழுப்புகிறது. அதுஒரு குறிப்பிட்ட சமூகத்தில் இசைக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. பிறிதொரு சமூகத்தில் வேறொரு காலப்பிரிவில் மற்றொரு கருவி இசை எழுப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்டால் நாம் பார்க்க வேண்டிய ஒரே விடயம் அது எழுப்பும் ஓசை அழகாக இருக்கிறதா? இல்லையா? என்பதே. இங்கு இந்த இசையை எழுப்பும் கருவி பற்றி ஆராயத் தேவையில்லை. அவ்வாறில்லாமல் கருவி தான் முக்கியம் என்றால் இப்பொழுதும் நாம் வேறு எந்த போக்கு வரத்து சாதனங்களையும் பயன்படுத்தாமல் ஹஜ்ஜுக்கு நடையாக அல்லது ஒட்டகங்களில்தான் செல்ல வேண்டியிருக்கும்.

அவ்வாறே உங்கள்முன் உரையாற்றும் நான் இந்த ஒலிவாங்கியை ஹராம் என்று புறந்தள்ள வேண்டியிருக்கும். உண்மையில் இங்கு நாம் கவனம் செலுத்தவேண்டிய விடயம் இந்த ஒலிவாங்கி நல்ல வார்த்தைகளைச் சொல்லப் பயன்படுத்தப்படுகிறதா? இல்லை தீய வார்த்தைகளைச் சொல்லப் பயன்படுத்தப்படுகிறதா? என்பதே.

அதேபோல நான் கையிலே கட்டியிருக்கின்ற இந்த கடிகாரத்தை எடுத்துக் கொண்டால் அது மனிதனுக்கு தொழுகைக்கான நேரத்தைக் காட்ட முடியும். அவ்வாறே ஒரு முக்கியமான வேலையைச் செய்வதற்கான நேரத்தைக் காட்டவும் முடியும். அதேபோல ஹராமான, பாவமான ஒரு காரியத்தைச் செய்வதற்கான நேரத்தை இதன்மூலம் ஒருவர் அறிந்துகொள்ளவும் முடியும்.

அவ்வாறே கலைகள் பற்றிய விவகாரத்திலும் கவனத்திற் கொள்ள வேண்டியவை கருவிகள் அல்ல. மாறாக விளைவுகளே. இங்கு ரபான் ஹலால் என்பதற்குக் காரணம் ஒரு காலத்தில் அது நடைமுறையில் இருந்தது என்பது மாத்திரமே. இத்தகைய விவகாரங்களில் ஹலால் என்பது ஏற்கனவே இருந்தவைகள் மாத்திரமல்ல. ஏற்கனவே இருந்த அந்த அம்சங்களுக்கு முரணில்லாதவைகளும் ஹலால் ஆகும். இங்கு நாம் கவனிக்க வேண்டியது இசையையும் சந்தத்தையும்தான். அதாவது விளைவையே. மாறாக அந்த விளைவைத் தரும் சாதனங்களை அல்ல.

கலைகள் பற்றி மனித இயல்பின் அடிப்படையிலும் அறிவின் அடிப்படையிலும் முன்வைக்கப்படுகின்ற இக்கருத்தானது எனது கண்டுபிடிப்போ

புதியதொரு கருத்தோ அல்ல. 'ஹுஜ்ஜதுல் இஸ்லாம்' இஸ்லாத்தின் ஆதாரம் என்று முஸ்லிம் சமூகத்தால் அழைக்கப்பட்ட இமாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (றஹ்) தனது 'இஹ்யாஉ உலூமித்தீன்' என்ற நூலில் இவ்விடயம் பற்றி தனியானதொரு அத்தியாயத்தையே அமைத்திருக்கிறார்கள்.

அதிலே அவர் கூறுவதாவது; ''ஓசைகளின் அடிப்படை -அவை உருவாகுமிடம்- பிராணிகளின் தொண்டைகளாகும். ஊதுகுழல்கள் (இசைக் கருவிகள்) தொண்டைகள் எழுப்பும் ஓசைகள் மீது வைக்கப் பட்டுத்தான் இசையும் பாடலும் உருவாக்கப்படுகின்றன. அது அல்லாஹ் உருவாக்கிய, படைத்த ஒரு விடயத்தோடு மனிதர்கள் ஒப்பீடு செய்யும் ஒரு முயற்சியாகும். அல்லாஹ்வின் அந்தப் படைப்பு நுட்பத்திலிருந்துதான் மனிதர்கள் கற்றுக்கொள்கிறார்கள். அல்லாஹ்வின் படைப்பையே மனிதர்கள் முன்மாதிரியாகக் கொள்கிறார்கள்.

எனவே, இத்தகைய ஓசைகள் சிறந்தவையாக, ஒழுங்கானவையாக இருக்கின்றன என்பதற்காக அவற்றைச் செவிமடுப்பது ஹராமாக இருக்க முடியாது. குயிலினதும் ஏனைய பறவைகளினதும் ஓசைகள் ஹராம் என்று கூறுவோர் யாருமில்லை. எனவே, (பறவைகளின்) தொண்டைக்கும் (மனித) தொண்டைக்கும் இடையிலும், சடப்பொருளுக்கும் பிராணிகளுக்குமிடையிலும் இவ்விடயத்தில் வேறுபாடுகள் இல்லை. ஆகையால் குயிலின் ஓசையோடு மனிதனின் தொண்டையிலிருந்தும் ஏனைய உறுப்புக்களிலிருந்தும் வெளிவரும் ஓசைகளையும் ஒப்பிட முடியும். அதாவது மனிதத் தொண்டையிலிருந்து வெளிவரும் ஓசைகளும் தடிகள், மத்தளம், ரபான் போன்ற கருவிகளிலிருந்து வெளிவரும் ஓசைகளும் ஒன்றே.[20]

எனவே, இந்த விடயமானது மனித இயல்பின் அடிப்படையிலும் அவனது தர்க்க மற்றும் அறிவு ஞானத்தின் அடிப்படையிலும் நோக்கப்பட வேண்டியதாகும். கலைகளும் திறமைகளும் பொதுவாகவே ஹராமாகவோ அல்லது பொதுவாகவே ஹலாலாகவோ இருக்க மாட்டா. அவற்றை பண்பாட்டு நோக்கங்களோடும் அழகியல் நோக்கங்களோடும் இணைத்தே நோக்க வேண்டும். அதாவது சாதனங்கள் தரும் விளைவுகளைப் பற்றித்தான் கதைக்க வேண்டுமே தவிர அந்தச் சாதனங்களைப் பற்றியல்ல.

### அல்குர்ஆனின் பார்வையில் இசையும் பாடலும்

இனி இந்த விவகாரம் பற்றி அல்குர்ஆன் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல இஸ்லாமும் அதன் வேத மான அல்குர்ஆனும் மனித இயல்பின் மார்க்கமாகும். புனித

அல்குர்ஆன் அழகு (ஸீனத்) பற்றியும் அதனைக் கடைப்பிடிக்குமாறும் கூறுகின்றது. அறபு மொழியில் அழகு பற்றிப் பேசும் மிக உயர்ந்த, மிகச் சிறந்த வார்த்தை ஸீனத் என்பதாகும். எனவேதான், இரத்தினக்கல் வியா பாரத்தில் ஈடுபட்டிருக்கும் பல வியாபாரத் தளங்கள் இந்த வார்த்தையை தமது நிறுவனப் பெயராக பயன்படுத்துவதை நாம் காண்கிறோம்.

அழகைக் கைக்கொள்ளும்படி மனிதனை அல்குர்ஆன் பணிக்கிறது. அது அழகை ஓர் ஆகுமான விடயமாகவன்றி கட்டாயக் கடமையாகவே நோக்கு கின்றது. உண்மையில் இது மிகவும் உயர்ந்த நிலையாகும். மனிதன் தனது ஒவ்வொரு தொழுகையின்போதும் கட்டாயமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென அல்குர்ஆன் பணிக்கிறது. மனிதன் ஒவ்வொரு நாளும் ஐந்து தடவைகள் தொழுகின்றான். அத்தொழுகை களை நிறைவேற்றும்போது அவன் தன்னை அலங்கரித்துக் கொள்வதை தொழுகைக்குரிய சிறப்பம்சமாக, விஷேட அடையாளமாகக் கடைப் பிடித்தல் அவசியமாகும்.

பூமிப் பந்தை எடுத்துக்கொண்டால் நாடுகளின் வித்தியாசமான அமை விடங்களுக்கேற்ப நேரம் வித்தியாசப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அதன் படி பூமியில் பரந்துவாழும் முஸ்லிம்கள் ஒருநாளின் 24 மணித்தியலங்களி லும் தொழுகையை நிறைவேற்றுவர். அல்லாஹ்வை வணங்குவர். ஏனெ னில், தொழுகைகள் - கடமையான தொழுகைகள் உட்பட - இரவிலும் பகலிலும் அனைத்து நேரங்களிலும் சதாவும் நிறைவேற்றப்படும் இபாதத் தாகும். அவ்வாறெனில், முஸ்லிம்கள் புனித கஃபாவை முன்னோக்கியவர் களாக அல்லாஹ்வுக்காக என்று தம்மை அலங்கரித்துக்கொண்டு இரவிலும் பகலிலும் எல்லா நேரங்களிலும் தொழுகையை நிறைவேற்றுவதை நாம் காண்கிறோம்.

இவ்வாறு அழகின் அவசியத்தை அல்குர்ஆன் வலியுறுத்தும்போது இறைதூதர் (ஸல்) அவர்கள் -தான் ஓர் எளிய, வறிய சமூகத்தில் வாழ்ந்த போதும்கூட- முஸ்லிம்கள் தமது தொழுகைகளின்போதும் தம்மை அலங் கரித்துக் கொள்வதற்காகவும் நல்ல அழகிய ஆடைகளை அணிய வேண்டு மென வலியுறுத்தினார்கள். 'ஆதமின் பிள்ளைகளே! உங்களை அலங்கரித் துக் கொள்ளுங்கள்' என அல்குர்ஆன் ஏவல் வினையைப் பயன்படுத்தியி ருக்கிறது. அல்குர்ஆனின் பிரயோகத்தில் ஏவல் வினையானது 'கடமை' என்ற கருத்தையே தரும். ''ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு மஸ்ஜிதிலும் தொழுங்காலம் உங்களை ஆடைகளால் அழகாக்கிக் கொள்ளுங்கள்; உண் ணுங்கள், பருகுங்கள்; எனினும் வீண் விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் அல்லாஹ் அளவு கடந்து (வீண்) விரயம் செய்பவர்களை நேசிப்ப தில்லை. (நபியே!) நீர் கேட்பீராக: அல்லாஹ் தன் அடியார்களுக்காக

வெளிப்படுத்தியுள்ள (ஆடை) அழகையும், உணவு வகைகளில் தூய்மையானவற்றையும் தடுத்தது யார்? இன்னும் கூறும்: அவை இவ்வுலக வாழ்க்கையில் நம்பிக்கையாளர்களுக்கு (அனுமதிக்கப்பட்டவையே, எனினும் மறுமையில்) அவர்களுக்கு மட்டுமே சொந்தமானவை யாகவும் இருக்கும் இவ்வாறு நாம் நம் வசனங்களை அறியக்கூடிய மக்களுக்கு விவரிக்கின்றோம்.'' (அஃராஃப்: 31-32)

இவ்வுலக வாழ்வில் மனிதனுக்கு அல்லாஹ் புரிந்துள்ள அருட்கொடைகள் பற்றிப் பேசும் அல்குர்ஆன் 'பயன்கள்' அல்லது சட ரீதியான அம்சங்கள் அல்லது உலகியல் விடயங்கள் பற்றி மாத்திரம் பேசாமல் இந்த அருட்கொடைகளிலும் பயன்களிலும் உள்ள 'வசீகரம்' பற்றியும் பேசுகிறது. அதாவது, இந்த அருட்கொடைகளின் அழகியலை விளக்குகிறது. ''கால் நடைகளையும் அவனே படைத்தான்; அவற்றில் உங்களுக்குக் கத கதப்பு(ள்ள ஆடையணிகளு)ம் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன; அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள். அவற்றை நீங்கள் மாலை நேரத்தில் (வீட்டுக்குத்) திரும்பி ஓட்டி வரும்போதும், காலை நேரத்தில் (மேய்ச்சலுக் காக) அவிழ்த்துவிடும் போதும், அவற்றில் உங்களுக்கு(ப் பொலிவும்) அழகுமிருக்கிறது. மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடைய முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன -நிச்சயமாக உங்களுடைய இறைவன் மிக இரக்கமுடையவன்; அன்புமிக்கவன். (நஹ்ல்: 5-7)

உண்மையில் மனிதன் அழகை விரும்புவதும் தன்னை அலங்கரித்துக் கொள்வதும் அழகியல் கலைகளை ரசிப்பதும் ஆகுமானவை. சில சந்தர்ப்பங்களில் உள்ளத்தைப் பண்படுத்தி செம்மையாக்குவதற்கு அவை அத்தியவசியமானவை. அதாவது, அழகியல் கலைகள் அனுமதிக்கப்பட்டவை, வேண்டப்பட்டவை. ஏனெனில் அல்லாஹ் எம்மீது புரிந்துள்ள அழகு எனும் அருட்கொடைக்கு நன்றிசெலுத்த அவை எம்மைத் தூண்டுகின்றன. ஆனால், எமது வாழ்வு முழுக்க அலங்காரமாக மாறிவிடக்கூடாது. ஏனெனில், பாடலைக் கேட்பதற்கும் வாழ்வே பாடல் கேட்பதாக மாறிவிடுவதற்கும் இடையில் வேறுபாடு இருக்கிறது. அதாவது உணர்வுபூர்வமான நல்ல பாடல்கள் மனித உணர்வுகளை மென்மைப்படுத்துமாகையால் அவை ஆகுமானவையாகும். ஆனால், எமது மக்கள் அனைவருடைய வாழ்வும் காதலையும் இச்சைகளையும் சிற்றின்பத்தையும் பற்றிக் கதைப்பதாக மாறிவிடுவது ஆபத்தானது.

ஏனெனில், உணவுக்கு உப்புத் தேவை என்பதற்காக உப்பை உணவாகக் கொள்ள முடியாது. ஆனால் நமது சமூகத்தில் நடந்திருக்கும் கோளாறு

இதுதான். கலைகள் ஹலாலானவை, ஆகுமானவை, வேண்டப்பட்டவை ஆனால், எமது வாழ்வே பாடல்மயமாக மாறிவிடுவது ஆபத்தானது. எமது தொடர்புசாதனங்கள் அனைத்திற்கும் இன்று பீடித்துள்ள பெரும் நோய் இதுதான்.

அவ்வாறெனில் எம்மிடம் சில அளவுகோல்கள் இருப்பது அவசியம். எமது உடலை ஆரோக்கியமாகப் பேண உணவு உட்கொள்ள வேண்டும். அதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால், வாழ்வே உணவு உட்கொள்வதாக மாறிவிடுவது ஆபத்தானது. உயிர்வாழ நீர் தேவை. அதை அருந்த அனுமதி உண்டு. ஆனால், வாழ்வே நீர் அருந்துவது என்பது உடம்பின் தற்கொலை முயற்சியாகும். ஆகவே, முஸ்லிம்களாகிய நாம் எமது அறிவை சமநிலைப் படுத்திக்கொள்ள வேண்டும். அழகை ரசிப்பது ஆகுமானது என்பது மாத்திரமல்ல இங்குள்ள பிரச்சினை. எமது வாழ்வில் எமக்கு பல்வேறு கடமைகளும் இருக்கின்றன. இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்பட் டால்தான் ஒரு சீரான சமுதாயம் உருவாக முடியும்.

அபுல் ஃபத்ஹ் அல் புஸ்தீ பாடிய பின்வரும் கவிதையை ரிஃபாஆ அத்தஹ்தாவி எமக்குத் தருகிறார்:

''கடுமையாக உழைத்து களைப்படைந்த
உனது உள்ளத்துக்கு ஓய்வு கொடுத்து நன்மை செய்.
அது இளைப்பாறட்டும்.
சில நகைச்சுவைகள் மூலம் அதற்கு இன்பமூட்டு.
ஆனால், நகைச் சுவையை அதற்குக் கொடுக்கும்போது
உணவுக்கு உப்புச் சேர்ப்பதுபோன்று அது இருக்கட்டும்''.

அல்குர்ஆன் சிந்தனா ரீதியான, பகுத்தறிவு சார்ந்த, ஆழ்ந்த விடயங்களை காட்சிகளாக முன்வைப்பதைப் பார்க்கலாம். உண்மையில் இது கலை மற்றும் அணியிலக்கணம் சார்ந்த ஒரு பார்வையாகும். அல்குர்ஆனை நீங் கள் வாசிக்கும்போது பொதுவான (சாதாரண) விடயங்கள் கலைத்துவத் துடன் முன்வைக்கப்படுவதைக் காண்பீர்கள். எனவே, இந்த வேதம் கலை களுக்கு எதிரானதாக இருக்க முடியாது. இவ்விதம் பொதுவான விடயங் களை கலைத்துவத்துடன் காட்சிகளாக முன்வைக்கும் அல்குர்ஆன் அவற்றை சிந்தித்துணர்ந்து படிப்பினை பெற முயற்சிக்கும் மனிதர்களிடம் கலையுணர்வை வளர்க்கிறது. பின்வரும் அல்குர்ஆன் வசனங்களை அவதானியுங்கள்.

''(நபியே!) நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான் என்பதை நீர் கவனிக்கவில்லையா? அது மணம் மிக்க ஒரு நன்மரத்தைப் போன்றது; அதனுடைய வேர்கள் (பூமியில் ஆழமாகப்) பதிந்ததாகவும்; அதன் கிளைகள் வானளாவியும் இருக்கும்..

அது தன்னுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு ஒவ்வொரு காலத்திலும் தன்னுடைய கனியைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது; மக்கள் நல்லுணர்வு பெரும் பொருட்டு அல்லாஹ் (இத்தகைய) உதாரணங்களைக் கூறுகிறான்..

(இணை வைப்போரின்) கெட்ட வாக்கியத்திற்கு உதாரணம் கெட்ட மரமாகும்; பூமியின் மேல் பாகத்திலிருந்தும் (அதன் வேர்) பிடுங்கப்பட்டிருக்கும்; அதற்கு நிலைத்து நிற்கும் தன்மையுமில்லை.'' (இப்ராஹீம்: 24-26)

''அல்லாஹ்வின் பாதையில் தங்கள் செல்வத்தைச் செலவிடுபவர்களுக்கு உவமையாவது: ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றது; அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு (இதை மேலும்) இரட்டிப்பாக்குகின்றான்; இன்னும் அல்லாஹ் விசாலமான (கொடையுடைய)வன்; யாவற்றையும் நன்கறிபவன். (அல் பகரா: 261)

அன்றியும், எவர்கள் காஃபிராக இருக்கிறார்களோ, அவர்களுடைய செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல் நீரைப் போலாகும்; தாகித்தவன் அதைத் தண்ணீரென்றே எண்ணுகிறான் - (எது வரையெனில்) அதற்கு (அருகில்) அவன் வரும் பொழுது ஒரு பொருளையும் (அங்கே) காணமாட்டானே (அது வரை); ஆனால், அங்கு அவன் அல்லாஹ் (அவனுக்கு விதித்திருக்கும் முடி)வை(யே) காண்கின்றான்; (அதன் படி அல்லாஹ்) அவன் கணக்கைத் தீர்க்கிறான்; மேலும், அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் துரிதமானவன்.

அல்லது (அவர்களின் நிலை) ஆழ்கடலில் (ஏற்படும்) பல இருள்களைப் போன்றதாகும்; அதனை ஓர் அலை மூடுகிறது. அதற்கு மேல் மற்றோர் அலை; அதற்கும் மேல் மேகம். (இப்படி) பல இருள்கள். சில சிலவற்றுக்கு மேல் இருக்கின்றன. (அப்பொழுது) அவன் தன் கையை வெளியே நீட்டினால் அவனால் அதைப் பார்க்க முடியாது; எவனுக்கு அல்லாஹ் ஒளியை ஏற்படுத்தவில்லையோ அவனுக்கு எந்த ஒளியுமில்லை. (அந்நூர்: 39-40)

''நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வின் மீதும், இறுதி நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல், மனிதர்களுக்குக் காட்டுவதற்காகவே தன் பொருளைச் செலவளிப்பவனைப் போல், கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், நோவினைகள் செய்தும் உங்கள் ஸதக்காவை (தான தர்மங்களைப்) பாழாக்கி விடாதீர்கள்; அ(ப்படிச் செய்ப)வனுக்கு உவமையாவது: ஒரு வழுக்குப் பாறையாகும்; அதன் மேல் சிறிது மண் படிந்துள்ளது; அதன் மீது பெருமழை பெய்து (அதிலிருந்த சிறிது மண்ணையும் கழுவித்) துடைத்து விட்டது; இவ்வாறே அவர்கள் செய்த -(தானத்)திலிருந்து யாதொரு பலனையும் அடைய மாட்டார்கள்; இன்னும், அல்லாஹ் காஃபிரான மக்களை நேர் வழியில் செலுத்துவதில்லை.

அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவும், தங்கள் ஆத்மாக்களை உறுதியாக்கிக் கொள்ளவும், யார் தங்கள் செல்வங்களைச் செலவு செய்கிறார்களோ அவர்களுக்கு உவமையாவது: உயரமான (வளமுள்ள) பூமியில் ஒரு தோட்டம் இருக்கிறது; அதன் மேல் பெரு மழை பெய்கிறது; அப்பொழுது அதன் விளைச்சல் இரட்டிப்பாகிறது; இன்னும், அதன் மீது அப்படிப் பெருமழை பெய்யாவிட்டாலும் சிறிய மழையே அதற்குப் போதுமானது; அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் பார்க்கின்றவனாக இருக்கின்றான்.'' *(அல் பகரா: 264-265)*

இங்குள்ள கலைத்துவத்தைப் பாருங்கள். அல்லாஹ்வின் வார்த்தைகள் அவனது படைப்புக்கள் அனைத்தையும் சூழ்ந்த முடிவே அற்ற அவனது ஆற்றல் ஆகியன எவ்வளவு அழகாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன? அவற்றை அவன் எங்களது அறிவுக்கு எட்டும் வகையில் எவ்வாறு காட்சிகளாகக் காண்பித்திருக்கிறான் என்று பாருங்கள்!

''பூமியிலுள்ள அனைத்து மரங்களும் பேனாக்களாக மாறினால்...'' அதாவது பூமி தோன்றியது முதல் அதன் முடிவுவரை பூமியில் உருவான, உருவாக இருக்கும் அனைத்து மரங்களும் பேனாக்களாக மாறினால், அனைத்துக் கடல்களும் மையாக மாறினால் அதாவது 7 கடல்களும் இணைந்து ஒரு மைக்குப்பியாக மாறினால்... இங்கு 7 என்பதன் மூலம் நாடப்படுவது 7 என்ற எண்ணிக்கை அல்ல. அதிகமான, ஏராளமான கடல்கள் என்பதே. எனவே, பூமியின் அனைத்து மரங்களும் பேனாக்களாக மாறி அனைத்துக் கடல்களும் மையாக மாறினாலும் அல்லாஹ்வின் வார்த்தைகளை எழுதி முடிக்க இயலாது. இது அல்லாஹ்வின் முடிவற்ற ஆற்றலை பறைசாற்றுகின்றதல்லவா? மேலும், நிச்சயமாக இப்பூமியிலுள்ள மரங்கள் யாவும் எழுது கோல்களாகவும், கடல் (நீர் முழுதும்) அதனுடன் கூட மற்றும் ஏழு கடல்கள் அதிகமாக்கப்பட்டு (மையாக) இருந்த போதிலும்,

அல்லாஹ்வின் (புகழ்) வார்த்தைகள் முடிவுறா; நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன்; ஞானம் மிக்கவன்.'' (லுக்மான்: 27)

எனவே, இத்தகு வர்ணனைகளைக் கொண்டிருக்கும் இந்த வேதம் பிர பஞ்சத்திலுள்ள அழகுகளுக்கு முரணானதாக ஒருபோதும் இருக்க முடியாது. அல்குர்ஆன் இவ்வாறான அணியிலக்கணப் பாங்கை வெளிப் படுத்தும்போது நபி (ஸல்) அவர்களுடைய சுன்னாவும் அதே பாணியை வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். ஏனெனில், ஸுன்னா என்பதற்கான மிகச் சுருக்கமான வரைவிலக்கணம்'' அல்குர்ஆனின் கருத்துக்களுக்கு நபி யவர்கள் வழங்கிய விளக்கங்கள்'' என்பதாகும்.

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அறிவுமட்டம் குறைந்த, கடின சுபாவம் மிகுந்த ஒரு நாட்டுப்புறச் சூழலில் வாழ்ந்தவர் களாக இருந்தபோதிலும் மழை வேண்டித் தொழும் தொழுகையின்போது ''இறைவா! எங்கள் பூமியில் அதன் அழகைத் தந்தருள்வாயாக'' என்று பிரார்த்திப்பவர்களாக இருந்தார்கள்.

பிரயாணத்தின்போதான பிரார்த்தனையில் அவர்கள் அவலட்சனமான காட்சிகளைவிட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள். உண்மை யில் இது நபியவர்களிடம் ஆழமாகத் பதிந்திருந்த அழகுணர்வின் வெளிப் பாடாகும்.

அவர்கள் பூமிக்கு அலங்காரம் சேர்க்கும் பயிர்களை முளைப்பிக்கச் செய்யுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். பிரபஞ்சத்தில் உள்ள அழகின் அத்தாட்சிகளையும் வகைகளையும் உணர வேண்டும் என்பதற் காக அவலட்சணமான காட்சிகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடினார்கள். மேலும் 'உங்கள் குரல்களால் அல்குர்ஆனை அழகுபடுத்துங் கள்' என்றும் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதை, ஏனைய மகான்களின் சரிதை களிலிருந்து வேறுபட்டதாகும். ஏனெனில் மகான்களின் சரிதைகள் எழுதப்பட்டதும் அவ்வாறு எழுதப்பட்ட விடயங்களோடு நிறைவுபெற்று விடும். ஆனால், நபியவர்களது சரிதைபற்றி பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளபோதிலும் படிப்பினைக்குரிய புதுப்புது விடயங்கள் அதில் நிறைந்து காணப்படுவதை நாம் கண்டுகொள்ளலாம்.

ஹிஜ்ரி 15 ஆம் நூற்றாண்டில் (கி.பி. 21 ஆம் நூற்றாண்டில்) வாழ்கின்ற நாம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை பற்றி ஆராய்ந்து பார்க்கும்போது நபியவர்களின் வாழ்வில் நிறைந்து காணப்பட்ட அழகு களையும் மனிதாபிமான குணங்களையும் உணர்ந்துகொள்ளலாம்.

உண்மை யில் நபியவர்கள் பூரணத்துவமும் சமநிலையும் உடைய ஓர் ஆளுமையாகத் திகழ்ந்தார்கள் என்பதை அவை எமக்கு உணர்த்தும். அவர்கள் போர்களின்போது வீரத்தோடு போராடிய ஒரு வீரராகவும் அதே நேரம் தனது மக்களின் மீது அளவிலா அன்புகாட்டிய ஒரு தலைவராகவும் ஏககாலத்தில் திகழ்ந்தார்கள். பெரும் வீரரும் குதிரையேற்றத்தில் பெயர் பெற்றவருமான அலி பின் அபீ தாலிப் (றழி) நபியவர்களைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்:

''போர் உக்கிரமடைந்து நிலைமை தீவிரமாகிவிட்டால் போர்க்களத்தில் இருக்கும் நாம் இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நின்று எம்மை தற்காத்துக் கொள்வோம். நபியவர்களோ அத்தகைய சந்தர்ப்பங்களில் எதிரி களுக்கு மிக அண்மையில் நின்று வீரத்தோடு போராடிக் கொண்டிருப் பார்கள்.'' அஞ்சா நெஞ்சம் கொண்ட இந்த நபியைப்பற்றி அவர்களது பணி யாளர் அனஸ் பின் மாலிக் (றழி) அவர்கள் கூறுவதைக் கேளுங்கள். ''நபி யவர்களுடைய கையை விட மிருதுவான ஒரு கையை நான் தொட்ட தில்லை. அவர்களது வாசனையை விட சிறந்ததொரு வாசனையை நான் நுகர்ந்ததில்லை. அவர்களது வியர்வை முத்துக்கள் போன்று இருந்தன.''

உலகம் அவர்களது கையில்தான் இருந்தாலும் அவர்கள் அதில் பற்றற் றவர்களாக இருந்தார்கள். உலகம் அவர்களது உள்ளத்தை ஆக்கிரமித்திருக் கவில்லை. என்றாலும்கூட அவர்கள் அழகு நிறைந்ததோர் வாழ்க்கையை வாழ்ந்துகாட்டினார்கள். எம்மிடமும் எதிர்பார்க்கப்படுவது அதுவே. உல கில் மிகச் சிறந்த முன்மாதிரியான முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்ற வேண்டும் எனும்போது அவர்களது வாழ்வின் வினைமையான (சீரியஸ்) பகுதிகளையும், இப்பிரபஞ்ச அழகுகளை நுகர்ந்து அழகுணர்வை அவர்கள் வெளிக்காட்டியமையையும் இணைத்தே அவர்களை நாம் பின்பற்ற வேண்டும். எனவே, அழகுக்கும் கலைகளுக்கும் எதிராக நாம் நிற்க முடி யாது. அதேநேரம் கலை, அழகு எனும் பெயரில் எமது உள்ளங்களை தடை செய்யப்பட்ட இன்பங்களிலும் கேளிக்கைகளிலும் மூழ்கடிக்கவும் கூடாது. ஏனெனில், இவ்வின்பங்களை அனுபவிப்பதில் மூழ்கிவிடுவதானது சமூகங்களை அழிவிற்கே இட்டுச் செல்லும்.

இதோ இறைதூதர் (ஸல்) அவர்கள் மஸ்ஜிதில் இஃதிகாப் இருக்கிறார் கள். -இஃதிகாப் இருப்பதன் சட்டங்களை நீங்கள் அறிவீர்கள்- அதேநேரம் அவர்கள் தன்னை அலங்கரித்துக்கொள்ளவும், தன்னுடைய தலைமுடியை வாரிச் சீர் செய்துகொள்ளவும் விரும்புகிறார்கள். இஃதிகாப் இருப்பவர் மஸ்ஜிதிலிருந்து வெளியேற முடியாது. என்றாலும் நபியவர்கள் ஆயிஷா (றழி) அவர்கள் இருக்கும் அறையின்பக்கம் சென்று ஜன்னலினூடாக தன்னுடைய தலையைக் காட்ட ஆயிஷா (றழி) அவர்கள் அதனை வாரி

சீர்செய்துவிடுகிறார்கள். கணவன் மனைவிக்கிடையேயான அன்புப் பிரவாகத்தைக் காட்டும் இக்காட்சியை ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். ஹிஜ்ரி 15 ஆம் நூற்றாண்டில் வாழும் நம்மில் யார் எம் மனைவியரோடு, பிள்ளைகளோடு இத்தகைய அன்பை, அழகுணர்வை, மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகின்றோம்.

இறைதூதர் (ஸல்) அவர்களின் சமூகத்திற்கு ஒரு தடவை ஹபஷி தேச சாகசக்காரர்கள் வந்து மஸ்ஜிதில் தமது சாகச விளையாட்டுக்களைக் காண்பித்த போது இறைதூதர் (ஸல்) அவர்கள் தனது மனைவி ஆயிஷா (றழி) அவர்களிடம் அவ்விளையாட்டுக்களைக் கண்டுகளிக்க விரும்புகிறீர்களா? என்று கேட்கிறார்கள். ஆயிஷா (றழி) அவர்கள் ஆம் என்றவுடன் தன்பின்னால் அவர்களை நிறுத்தி அவர்களது கன்னம் தன் கன்னத்தோடு சேர்ந்திருக்கும் வண்ணம் அருகிலிருந்து அவர்கள் போதுமென்று சொல்லும்வரை அவ்விளையாட்டுக்களைக் காண்பிக்கிறார்கள். இது நாம் எமது வீடுகளில் எமது மனைவிமாரோடு நடந்துகொள்ள வேண்டிய மனிதாபிமான நடைமுறைகளுக்கான முன்மாதிரிகளுள் ஒன்றாகும்.

ஒரு தடவை ஒரு போராட்டத்துக்காக வெளிக்கிளம்பிச் சென்றுகொண்டிருக்கும்போது நபியவர்கள் ஆயிஷா (றழி) விடம் என்னோடு ஓட்டப்போட்டியில் ஈடுபட விரும்புகிறீர்களா? என்று கேட்கிறார்கள். இருவருக்குமிடையில் நடந்த முதலாவது ஓட்டப்போட்டியில் ஆயிஷா (றழி) அவர்கள் வெற்றிபெறுகிறார்கள். மற்றுமொறு தடவை இவ்வாறு நடந்த போட்டியில் இறைதூதர் (ஸல்) அவர்கள் வெற்றிபெற்றார்கள். பின் ஆயிஷா (றழி) அவர்களின் தோலில் தட்டி முதலாவது போட்டியில் நீங்கள் வென்றதற்கான பதிலடிதான் இது என்று கூறினார்கள்.

இதுதான் இறைதூதர் (ஸல்) அவர்களின் முன்மாதிரி. பூரணத்துவம் வாய்ந்த மனிதருக்கான ஒரு முழு உதாரணம்: போராட்டத்தில், ஜிஹாதில், பொறுமையில், விடாமுயற்சியில் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது மாத்திரமன்றி, ''அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஒரு அடியானாக நான் இருக்கக் கூடாதா?'' என்று கேட்டவர்களாக தன் கால்கள் வீங்கும்வரை வணங்கிய ஒருவராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். அதேநேரம் அவர்களது வாழ்க்கையில் நகைச்சுவை அம்சங்களும் நிறைந்து காணப்பட்டன.

இமாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (றஹ்) தனது இஹ்யா உலூமித்தீன் எனும் கலைக்களஞ்சியத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களது நகைச்சுவைகள் பற்றி ஒரு தனியான அத்தியாயத்தை அமைத்திருக்கிறார்கள். ஏனெனில், இறைதூதர் (ஸல்) அவர்கள் வஹி அருளப்பட்ட ஒரு மனிதராவார்கள். அவர்களை வஹி அருளப்பட்டவர்களாக மாத்திரம்

பார்ப்பதோ அல்லது ஒரு மனிதராக மாத்திரம் பார்ப்பதோ தவறாகும். இங்கு நபியவர்களின் ஆளுமையின் பூரணத்துவத்தை, சமநிலைத் தன்மையை நாம் புரிந்து கொள்கிறோம். இந்த சமநிலை ஒவ்வொரு முஃமினின் வாழ்விற்கும் இன்றியமையாததாகும். மனிதனுடைய மகிழ்ச்சியினதும் வெற்றியினதும் இரகசியம் அவனது வாழ்வில் பேணப்படும் இந்த சமநிலைத் தன்மையாகும்.

மேற்கு நாகரிகத்தில் நாம் குறைகாண்கிறோம். அதனிடம் பிர்அவ்னிய அதிகாரமும் காரூனிய செல்வமும் இருந்தாலும் ஆன்மீக வறுமை நிலவுவதாகக் கூறுகிறோம். அதன் காரணமாகத்தான் அது இன்றிருக்கும் இழிநிலைக்கு சென்றுள்ளதாக பறைசாற்றுகின்றோம். எனவே, அவர்களுக்கு நேரெதிராக துறவிகளாக, தர்வேஷ்களாக மாறி உலக வாழ்வின் அலங்காரங்களை புறக்கணிப்பவர்களாக நாம் ஆகிவிடக் கூடாது. இஸ்லாம் எதிர்பார்ப்பது தனது உலக வாழ்வுக்காக உழைக்கும்போது என்நாளும் வாழ்வதாகவும் தனது மறுமை வாழ்வுக்காக உழைக்கும்போது நாளையே மரணித்துவிடுவதாகவும் கருதி இயங்கும் மனிதர்களையே. அதாவது பகல் நேரத்தில் குதிரைவீரர்களாகவும் இரவு நேரத்தில் துறவிகளாகவும் செயற்படுபவர்களையே. இந்த பூரணத்துவம் தான் எமக்குத் தேவை.

இந்த சமநிலைபேணும் பண்பானது இஸ்லாம் மார்க்கத்தினதும் அதன் நாகரிகத்தினதும் அசல் தன்மையாகும். அல்லாஹ்தான் வேதத்தையும் சமநிலைத் தன்மையையும் அருளினான். சமநிலைத் தன்மையென்பது இப்பிரபஞ்சத்தில் அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள ஓர் அடிப்படை அம்சமாகும். சமநிலை பேணப்படாதபோது எமது உடல்கூட நோய்வாய்ப்படுகிறது. எனவே, நல்லவைகள், அழகானவைகள், பயனுள்ள விடயங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் சமநிலை பேணுவதானது எமது வாழ்வில் நாம் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

ஒரு முறை ஆயிஷா (றழி) அவர்கள் தனது தோழிகளுடன் சில விளையாட்டுப் பொருட்களை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவற்றில் 'சுலைமானின் குதிரை' என அழைக்கப்பட்ட சிலை (பொம்மை)களும் சில பெண் பிள்ளை பொம்மைகளும் காணப்பட்டன. அவ்வேளை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வீட்டினுள் வந்தபோது ஆயிஷா (றழி) அவர்களின் விளையாட்டுத் தோழிகள் வெட்கம் கொண்டு ஓடிவிட்டனர். உடனே நபியவர்கள், அப்பெண்கள் ஆயிஷா (றழி) அவர்களுடன் விளையாட இடம்கொடுக்கும் வகையில் அவ்விடத்திலிருந்து விரைவாகச் சென்று விட்டார்கள்.

குலபாஉர் ராஷிதூன்களும் இதே நடைமுறையைக் கடைப்பிடித்திருக் கின்றனர். வரலாற்று ஏடுகளில் பதியப்பட்டுள்ளதாவது: ஒரு மனிதர் உமர் (றழி) அவர்களிடம் வந்து, முஃமின்களின் தலைவரே! எமக்குத் தொழுகை நடத்தும் இமாம் தொழுது முடிந்ததும் பாடல் பாடுகிறார் என முறையிட் டார். பின்னர் அந்த இமாமைத் தேடிச் சென்ற உமர் (றழி) அவர்கள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடும்போது உமக்குப் பைத்தியம் பிடிக்கிறதா? (தொழுது முடிந்ததும் நீர் பாடல் பாடுகிறீராமே?) என வினவினார்கள்.

அதற்கு அம்மனிதர்: இல்லை முஃமின்களின் தலைவரே, அது எனக்கு நானே செய்துகொள்ளும் ஓர் உபதேசம் என்று கூறினார். அப்போது உமர் (றழி) அவர்கள் அதனை எனக்குப் பாடிக்காட்டுங்கள். அது நல்ல வார்த்தை களாயிருந்தால் நானும் உம்மோடு சேர்ந்து அதனைப் பாடுவேன். அது தீய வார்த்தைகளாயிருந்தால் அதனைத் தடை செய்வேன் என்று கூறி னார்கள். இங்கு உமர் (றழி) அவர்களின் வார்த்தையை அவதானியுங்கள். அது நல்ல தாக இருந்தால் அதனைப் பாட உம்மை அனுமதிப்பேன் என்று கூறவில்லை. மாறாக உம்மோடுசேர்ந்து நானும் பாடுவேன் என்று கூறி னார்கள். பிறகு அம்மனிதர் அப்பாடலைப் பாடினார். அதன் இறுதி வரிகள் வருமாறு;

''எனது உள்ளமே ஒருபோதும்
நீ அழகாக பணிவுள்ளதாக இருக்க வில்லை.
எஜமானனைப் பற்றிச் சிந்தித்து
அவனுக்கு அஞ்சி பயந்து வாழ்ந்துகொள்.''

உமர் (றழி) அவர்கள் மஸ்ஜிதில் இருந்தவண்ணம் இப்பாடலை அம் மனிதரோடு இணைந்து பாடிவிட்டு இதனைப் பாடுபவர்கள் இவ்விதமே பாடட்டும் என்று பரிந்துரை செய்தார்கள். இமாம் கஸ்ஸாலி (றஹ்) அவர்கள் இதனையே இப்படிச் சொல்கிறார்கள்; பாடல் என்பது வார்த்தை களாகும். அவற்றில் நல்லவை நல்லவையாகும். தீயவை தீயவையாகும். உமர் (றழி) அவர்களின் கூற்றும் இக்கருத்தையே தருகின்றது. அவ்வாறெ னில், மனித இயல்பின் அடிப்படையிலும் அவனது அறிவின் அடிப் படையிலும் அல்குர்ஆன், அஸ்ஸுன்னா, ஸஹாபாக்களின் நடைமுறை ஆகியவற்றின் அடிப்படையிலும் இஸ்லாத்தின் நிலைப்பாடு இதுவாயின் பாடல் ஹராம் என்ற பிரச்சினை எவ்வாறு உருவானது?

ஹதீஸ் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ள 20 ஹதீஸ்கள் பாடல் இசைப் பதும் செவிமடுப்பதும் ஹராம் என்று கூறுகின்றன. சட்ட வசனங்களின் ஆதாரபூர்வத் தன்மை குறித்த ஆய்வில் கைதேர்ந்தவரான இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) அவர்கள் மேற்படி 20 ஹதீஸ்களையும் நுணுக்கமான ஆய்வுக்குட்படுத்தி அவற்றில் ஒன்றுகூட ஸஹீஹான, ஏற்றுக்கொள்ளத்

தக்க ஹதீஸ் அல்ல. அவை அனைத்துமே இட்டுக்கட்டப்பட்டவை, போலியானவை என்று கூறுகிறார். பாடல் குறித்த ஹதீஸ்களின் நிலைமை இவ்வாறிருக்க மதீனாவின் சட்டவியலாளர்களும் வேறு மத்ஹப்களின் சட்டவியலாளர்கள் பலரும் இதுகுறித்து ஒன்றுக்கொன்று. முரணான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளனர்.

இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (றஹ்) பாடல் ஹலாலாகுமென்று ஒரு பத்வாவையும் அது ஹராமாகுமென்று வேறொரு பத்வாவையும் அது மக்றூஹாகும் என்று மற்றொரு பத்வாவையும் வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு ஃபகீஹ் பாடல் குறித்து இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான பத்வாக்களை வெளியிட்டிருப்பதற்கான காரணம் பாடல்களின் வெவ்வேறு வகைகள் குறித்த இஸ்லாத்தின் வெவ்வேறு நிலைப்பாடுகளை தெளிவுபடுத்துவதாகும். அதாவது, ஹலாலான கருத்துக்களைக் கொண்ட பாடல்கள் ஹலாலானவையாகும். ஹராமான கருத்துக்களைத் தாங்கிய பாடல்கள் ஹராமானவையாகும். அவையிரண்டுக்கும் இடைப்பட்ட வகையைச் சார்ந்த பாடல்கள் மக்ரூஹானவையாகும்.

இமாம் ஷாபிஈ (றஹ்) அவர்களிடம் பாடலுக்கான தீர்ப்புக் குறித்துக் கேட்கப்பட்டபோது பின்வருமாறு கூறினார்கள்; நான் பக்தாதில் ஒருவகைப் பாடலை அவதானித்தேன். அல்லாஹ்வின் பாதையை விட்டும் மக்களைத் தடுப்பதற்காக பாவிகள் சிலர் அதனை உருவாக்கியிருந்தனர். அது அத்தஃக்பீர் என அழைக்கப்பட்டது (அது ஹராமாகும்). அது உண்மைதான். ஏனெனில், அல்குர்ஆனின் மூலம் ஒருவர் தொழுகையை விட்டும் பிற மனிதர்களைத் தடுத்தால் அதுவும் கூட ஹராமான செயலாகுமென இமாம் இப்னு ஹஸ்ம் (றஹ்) விளக்கம் தருகிறார்.

அவ்வாறெனில், இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது பாடல் என்ற விடயம் பற்றி மாத்திரமல்ல. அது எந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதையுமாகும். நீங்கள் மார்க்கம் அனுமதித்த ஆகுமான அம்சங்களைப் பயன்படுத்தி அல்லாஹ்வின் பாதையைவிட்டும் மனிதர்களைத் தடுக்க முயன்றால் சந்தேகமின்றி அது ஹராமான காரியமாகும். அவ்வாறெனில், கலைகள் குறித்துப் பேசும் போது நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயம் அவை பண்பாடு சார்ந்தவையாக இருக்கின்றனவா? மனித ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் தூய்மைப்படுத்துவதற்கும் அவை பங்களிப்புச் செய்கின்றனவா? அல்லது அவை இந்த மனிதனை விகாரப்படுத்தி உருக்குலைத்து சிற்றின்பப் பிரியனாக, பாவியாக, பொடுபோக்குத்தனம் கொண்டவனாக மாற்றிவிடுகின்றனவா? என்பதையாகும்.

மார்க்க விடயத்தில் கடுமையான நிலைப்பாடு கொண்டவரெனக் கருதப்படுகின்ற இமாம் இப்னு தைமிய்யா (றஹ்) அவர்கள் கூட

பாடல்கள் இருவகைப்படுமென பாகுபடுத்தி அதில் முதலாவது வகை மனித உள்ளத்தை ஆறுதல் படுத்தி அவனது ஆற்றல்களைப் புதுப்பிக்கக் கூடியவை. அவை ஆகுமான அனுமதிக்கப்பட்ட பாடல்கள் என்றும் மற்றும் ஒருவகை சில ஸூபிகளால் (ஆத்மஞானிகள்) வணக்கமாகக் கருதப் படுகின்ற பாடல்கள் அவை ஹராமாகுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

இத்தகைய பாடல்கள் ஹராம் என்பதற்கான காரணம் இறைதூதர் (ஸல்) அவர்கள் எமக்கு சட்டபூர்வமாக்கித் தந்த வணக்க வழிபாடுகளின் வகை களுக்குள் இவை அடங்கியிருக்கவில்லை என்பதாகும். அதாவது இந்த ஸூபிகள் மேலதிகமான ஒரு வழிபாட்டை புதிதாக இணைத்திருக் கின்றனர். மனிதர்கள் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இமாமவர்கள் ஒரு உதாரணத்தையும் கூறுகிறார்கள். ஓரிடத் தில் இரண்டு மலைகள் இருக்கின்றன. அவையிரண்டுக்கும் இடையில் நீங்கள் ஓடுவதில் குற்றமில்லை. ஆனால், அம்மலைகளில் ஒன்று ஸபா என்றும் மற்றது மர்வா என்றும் கூறி அவற்றுக்கிடையில் ஓடுவது ஒரு வழி பாடாகும் என்று கூறுவது ஹராமாகும். ஏனெனில், இம்மலைகள் ஸபா, மர்வாவோ அவற்றுக்கிடையில் ஓடுவது (ஸஃயு) தொங்கோட்டமோ அல்ல. அவ்வாறெனில், பாடலும் கலையும் உள்ளத்திற்கு ஆறுதல் தருமெனில் பாவம் கலக்காத நிலையில் அவற்றில் குற்றமில்லை.

அவ்வாறெனில், கலைகள் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. அதாவது, கலைகளை இஸ்லாம் ஆதரிக்கின்றது. ஆனால், ஒரு நிபந்தனை, அக்கலை எவ்வகையைச் சார்ந்தது? அது எமது பண்பாட் டுக்கு இயைபானதா? அழகானதா? என்று நாம் பார்க்க வேண்டும். இமாம் அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (றஹ்) அவர்களது கூற்றோடு இதனை நான் நிறைவுசெய்ய நாடுகின்றேன். ''இசைக்கருவிகளும் அதன் நரம்புகளும் சோலைகளும் அவற்றின் புஷ்பங்களும் யாரைத் தட்டியெழுப்பவில்லை யோ அத்தகையவர்கள் இயல்பு கெட்டவர்கள். இந்நோய்க்கு மருந்துகள் எதுவும் இல்லை.

அஸ்ஸலாமுஅலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

## அடிக்குறிப்புகள்

1) தாரகுத்னி பதிவுசெய்துள்ளார். பார்க்க இமாம் அல்குர்துபியின் அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன். பாகம் 18, பக்கம்: 103. கெய்ரோ, தாருல் குதுப் அல் மிஸ்ரிய்யா வெளியீடு

2) அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன். பாகம் 18, பக்கம்: 107.

3) முன்னைய நூல்: பாகம்: 18, பக்கம்: 111

4) அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன். பாகம் 06, பக்கம்: 414

5) இஹ்யாஉ உலூமித்தீன் பக்கம்: 1126, கெய்ரோ தாருஷ் ஷஃப் வெளியீடு

6) அறிவிப்பவர்கள்: இமாம்களான முஸ்லிம், அஹ்மத்

7) இது அவ்ஸ் கோத்திரத்தினருக்குச் சொந்தமான ஒரு கோட்டை. ஜாஹிலிய்யாக் காலப் போர்களில் ஒரு போர் இங்கு நடந்தது. அதில் அவ்ஸ் கோத்திரத்தினர் கஸ்ரஜ் கோத்திரத்தினரை வெற்றி கொண்டனர்.

8) இந்த ஹதீஸை இமாம் அஹ்மத் (றஹ்) அவர்கள் அனஸ் பின் மாலிக் (றழி) அவர்களிடமிருந்து பதிந்திருக்கிறார்கள். மேலும் இமாம் நஸாஈ (றஹ்) அவர்கள் அபூ ஹுரைரா (றழி) அவர்களிடமிருந்து 'ஈட்டிகளால் விளையாடுதல்' என்ற தலைப்பின் கீழ் பதிந்திருக்கிறார்கள்.

9) இப்னு ஸஅத்: கிதாபுத் தபகாதில் குப்ரா- பாகம்: 3, பக்கம்: 205, கெய்ரோ தாருத் தஹ்ரீர் வெளியீடு

10) இமாம் அஷ்ஷாதிபீ: அல் இஃதிஸாம் பாகம்: 1, பக்கம்: 272-273, கெய்ரோ மக்தபது அனஸ் பின் மாலிக் பதிப்பக வெளியீடு. ஹி: 1400-கி.பி. 1980

11) முன்னைய நூல்- பாகம்: 1, பக்கம்: 273. மேலும் இமாம் அல்குர்துபியின் அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன். பாகம் 14, பக்கம்: 55. மேலும் இமாம் இப்னுத் தைமிய்யாவின் 'மஜ்மூஉ ஃபதாவா ஷைஹில் இஸ்லாம் இப்னுத் தைமிய்யா' பாகம்: 11, பக்கம்: 569. சவூதி அறேபிய பதிப்பகம்

12) அந்நுவைரி: நிஹாயதுல் அதப், பாகம்: 4, பக்கம்: 147-160. கெய்ரோ தாருல் குதுப் அல் மிஸ்ரிய்யா வெளியீடு

13) இமாம்களான புஹாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸாஈ, இப்னு மாஜா (றஹ்) ஆகியோர் பதிவுசெய்துள்ளனர்.

14) மேலதிக விளக்கத்துக்குப் பார்க்க: இமாம் இப்னுல் ஹஸ்ம் (றஹ்) அவர்களின் 'ரிஸாலதுன் பில் கினாஇ அல்முல்ஹி முபாஉன் ஹுவ அம் மஹ்லூர்' பக்கம்: 430-439, பெய்ரூத் பதிப்பு. ஆய்விக்கும் பதிப்பிற்குமான அறாபிய நிறுவனம் ஹி: 1400-கி.பி. 1980. மேலும்: அல் முஹல்லா வினா இல: 1565 கெய்ரோ பதிப்பு

15) இஃலாமுல் முவக்கிஈன். பாகம்: 4, பக்கம்: 372-375. பெய்ரூத் பதிப்பு: 1973. மேலும் அத்துருகுல் ஹுக்மிய்யா பிஸ்ஸியாசதிஷ் ஷரஇய்யா. பக்கம்: 5, 7, 19. கெய்ரோ பதிப்பு, 1977

16) அல்ஜாமிஉ லிஅஹ்காமில் குர்ஆன். பாகம் 14, பக்கம்: 52-54

17) இஹ்யாஉ உலூமித்தீன் பக்கம்: 1142, 1152, 1153

18) 'மஜ்மூஉ ஃபதாவா ஷைஹில் இஸ்லாம் இப்னுத் தைமிய்யா' பாகம்: 11, பக்கம்: 557-562, 565-568

19). முன்னைய நூல். பாகம்: 11, பக்கம்: 330-333

20) பார்க்க: அல் ஃபதாவா லிஷ்ஷைஹ் மஹ்மூத் ஷல்தூத். பக்கம்: 409-414. கெய்ரோ தாருஷ்ஷுரூக் பதிப்பு, ஹிஜ்ரி: 1400. கி.பி. 1970

21) மேலதிக விளக்கத்திற்குப் பார்க்க அல் இஸ்லாம் வல் புனூனுல் ஜமீலா கெய்ரோ தாருஷ்ஷுரூக் பதிப்பு, ஹிஜ்ரி: 1411. கி.பி. 1991

இசை மற்றும் பாடல் உள்ளடங்கலாக அழகியற் கலைகள் பற்றிய இஸ்லாமியப் பார்வையை தெளிவாகவும் இரத்தினச் சுருக்கமாகவும் விளக்க முனைகிறது இந்நூல். எமது நாட்டில் மாத்திரமன்றி இஸ்லாமிய உலகில் பலரும் புரிந்து கொண்டிருப்பது போலல்லாமல் இது குறித்த இஸ்லாத்தின் பார்வை மிக விரிந்ததும் தாராளத்தன்மை வாய்ந்ததுமாகும் என்பதை இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ள ஆதாரபூர்வமான கருத்துக்களினூடு புரிந்துகொள்ள முடியும். இசையும் பாடலும் ஏனைய அழகியற் கலைகளும் மனிதர்களை முழுமையாக ஆக்கிரமித்து அழிவின் பக்கம் அழைத்துச் சென்று கொண்டிருக்கும் இக்காலத்தில் அவற்றை ஆக்கப் பணிகளில் எவ்வாறு ஈடுபடுத்த முடியும் என்பதற்கான வழிகாட்டல்கள் இந்நூலில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவை முஸ்லிம்களுக்கு மாத்திரமன்றி முழு மனித இனத்துக்குமான இஸ்லாத்தின் வழிகாட்டல்களாக, பங்களிப்பாக முன்வைக்கப்பட வேண்டியவை. அப்பணியையும் இந்நூல் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

நிகழ்

ISBN 978-955-0182-01-5